
# ஞானசம்பந்தம்



இமயத்தில் படிப்படியாக வயல்கள்

மலர் 14 ] மன்மத ஆண்டு வைகாசித்திங்கள் 10—6—55 [ இதழ்

ஆசிரியர் வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான்

தருமபுர ஆதீன

# உட்பொருள்

பக்கம்.


| | | | |
|---|---|---|---|
| 1. | தருமை ஆதீன முதற்குரவர் | ... | i—iv |
| 2. | திருவருட்பயன் ஆராய்ச்சி | ... | 1 |
| 3. | குறள்வைப்பு | ... | 9 |
| 4. | ஆதீனத்திலும் ஆதீனதேவஸ்தானங்களிலும் | | 12 |
| 5. | வருங்காலம் | ... | 30 |
| 6. | திருக்கேதார யாத்திரை அநுபந்தம் | ... | 1—32 |


## கட்டுரை எழுதுபவர்க்கு

"ஞானசம்பந்தம்" திங்கள் வெளியீட்டிற்குச் சமயச்சார்புள்ள கட்டுரைகள் எழுதுவோர் நல்ல தாளில் இடையீடுதந்து ஒரு பக்கத்திலேயே எழுதுதல் வேண்டும். கட்டுரை நான்கு பக்கங்களில் முடிவதாக இருத்தல் நல்லது. தொடர் கட்டுரை எழுதுவோர் இரண்டு இதழிற்குரிய முறையில் எழுதலாம். வெளியிடப் பெறுதவற்றை மீண்டும் பெற விரும்புவோர் போதிய அஞ்சற் பில்லைகள் அனுப்புக.

ஆசிரியர்,
"ஞானசம்பந்தம்"
தருமபுரம் மாயூரம், P. O.

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 14 } மன்மத ஆண்டு வைகாசிமீ 10—6—55 } இதழ் 7

486

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## தருமைஆதீன முதற் குரவர்

குருஞானசம்பந்தர்:- திருஞானசம்பந்தர் வேறு குருஞான சம்பந்தர் வேறு என்று காலதேசவர்த்தமானங்களால் கொள்ள நின்றுலும், இருவர் நெறியும் ஒன்றுயிருத்தலால் கிடைக்கும் ஒருமையே ஞானிகளால் கொள்ளற்பாலது. இவ்வாதீனத்து முனிபுங்கவருள் ஒருவரும் ஸ்ரீ காசியிலும் திருப்பனந்தாளிலும் உள்ள மடாலயங்களை நிறுவியவரும் ஆன ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், தாம் பாடியருளிய பண்டார மும்மணிக் கோவை யில் (பா. 3)

"அமண்மா சறுத்த கவுணியர் பெருந்தகை
பிள்ளைமை விடுத்த தள்ளரும் பருவத்து
உள்ளதன் படிவம் உணர்த்துவ கடுப்ப
மாநிலத்து அமர்ந்த ஞானசம் பந்தன்"

என்று அருளினார்கள். இதனால், திருஞானசம்பந்தரே பிள்ளைப் பருவத்துத் திருக்கோலத்தை நீத்து முதுமைப்பருவத்துத் திருக் கோலத்தில் எழுந்தருளியது போல, தருமையில் விளங்கியிருந் தார் நம் முதற்குரவர் என்பது புலனாகிறது. அதுபற்றித்தானோ அக்கவுணியர் கோன் திருவவதாரஞ் செய்தருளிய சீகாழிக் கோயில் தருமைஆதீனத்துக்கு உரியதாய், உலகம் வியக்கப் போற்றிப் பரிபாலனம் செய்யப் பெற்று விளங்கி வருகிறது ?

இப்பெருமான் அவதாரம் புரியத் தவத்தைச் செய்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர். இவரைப்பெறுதற்குஅரும்பெரும் புண்ணியம் புரிந்தவர்கள் ஸ்ரீ சுப்பிரமணியப் பிள்ளையும் ஸ்ரீ மீனாட்சியம்மை யாரும். தந்தையின் சிவார்ச்சனையும் தாயின் சிவசிந்தனையும் சேர்ந்த ஒன்றே குருஞானசம்பந்தராகத் திருவுருவம் கொண்டு உலகில் உலவிற்று.

சோமவாரமே இவரது தோற்றத்திற்கு ஏற்றதாயிற்று. குழவிப்பருவத்தில் வந்து பார்த்த நல்லோர் பலரும் குவலயம் உய்யப் பிறந்த தவக்குழந்தை என்று பாராட்டி மகிழ்ந்த உண்மையை மகிழ்ந்த அவர்கள் கண்டு அறியாராயினும், தருமைக்கு வந்தகாலம் முதலாகப், பிற்காலத்தவர் யாவரும் அறிவர், நாமும் உணர்கின்றோம்.

வயது பதினாறு ஆயிற்று. கல்வியும் கேள்வியும் நினைவும் தெளிவும் முற்றின. பயனாகிய நிலை (நிட்டை) அணுகும் காலம் அணுகிற்று.

மதுரைக்குச் சென்றனர் பெற்றோர். பிள்ளையும் உடன் சென்றது. திருவாலவாயில் ஒருவாத வழிபாடு பல நாள் செய்தனர். கால் மாறிய இடம் அல்லவோ அது ? அப்பிள்ளை யார்க்கும் கால் மாறிற்று. என்ன கால் ? ஊனுடலைப்பெற்ற வழியாகிய கால். உயிர்க்குத் தாய்தந்தை ஸ்ரீமீனாட்சிசுந்தரேசர் என்பது உறுதிப்பட்டுவிட்டது. அதனால், ஊருக்கு மீண்ட பிதா மாதாக்களுடன் ஏக ஒருப்படாமல், திருவாலவாயிலிலே உள்ள மாதாபிதாவையே வழிபட்டுய்யத் தொடங்கினார். சிவநல் வினையையும் அதன் அழியாப் பயனையும் அறிந்த அவ்விரு

வரும் 'சொக்கலிங்கமே துணை' என்ற உறுதிகொண்ட உள்ளத்தவராகி, தம் ஊர்க்குத் திரும்பினர். பின்னர் அவர்செயல் எங்ஙனம் ஆயினும் ஆகுக.

திருஞானசம்பந்தர் செயலை ஆராய்வோம். நாள்தோறும் விடியலில் எழுந்திருப்பார். பொற்றாமரையுள் முழுகுவார். சந்தியைச் செய்துகொள்வார். திருக்கோயிலுள் சென்று தாய்தந்தையரை வழிபடுவார். பேரின்பத்தில் திளைப்பார். கண்களுக்குச் சிவதரிசனமும் சித்தத்துக்குச் சிவசிந்தனையும் சத்துவகுண ரூபமாய்இருந்து கொடுத்துச்,சிவானந்த போகத்தை அநுபவிப்பார். அப்படி நிகழ்கின்ற நாட்களுள் ஒருநாள், அக்குளக்கரையில் பலர் சிவபூஜை செய்யுங் காட்சியில் முழுதும் ஈடுபட்டார். தேவர் அருளிய பெரியபுராணத்தில்,

" தாவரிய அன்பினால் சம்புவினை எவ்விடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும் படிகண்டால் இனிது வந்து
பாவனையால் நோக்கினால் பலர்காணப் பயன் பெறுவார்
மேவரிய அன்பினால் மேலவர்க்கும் மேலானார்,"

என்னும் அருண்மொழிப் பொருளை அநுபவமாக உணர்ந்தார். தாவரியதும் மேவரியதுமான அன்பு அவர்க்கு இயல்பாயுண்டு. சம்புபூஜையும் பரம்பரைச் சொத்து. அப்பா செய்த பூஜை பிள்ளைக்கும்கிடைக்கலாம். பாவனை எல்லார்க்கும் வாய்க்காது. அப்பெருமானைப் போன்ற சிலர்க்கே வாய்ப்பது. நோக்குவதும், சிலர் பெறமாட்டார்; புண்ணியக் குறைவால். பூஜை செய்பவர் பலர். காண்கின்றவர் நம் குரு முதல்வர். பூஜை செய்யும் பயன் அக்குளக்கரையில் இருந்து பூஜிக்கும் எல்லோருக்கும் உண்டு. அதைக்கண்ட பயன் - தாம் செய்வதுபோலப் பாவித்த பயன் எல்லாம் நம் குருஞானசம்பந்தர்க்கு உண்டு. அதனால், மேலவர்க்கும் மேலாகும் பேறு கிடைத்தது.

சொக்கலிங்கப் பெருமானை அடைந்து ஆராத காதலினால் பொங்கிவரும் உவகையுடன் விரும்பிப் போற்றி வேண்டினர். அன்று கனவில் வந்தான் சொக்கேசன் 'பொற்றாமரைக் குளத்தில் ஈசான மூலையில் நாம் இருக்கின்றோம். நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என்று அருளினான். விழித்தார்; எழுந்தார்;

489



வியந்தார்; பயந்தார்; காலையில் கிடைக்க இருக்கும் பெரும் பயனை நயந்தார்; 'வெள்ளிமன்றுடும் மலர்ப்பாதத்தை மறவாமல் போற்றிக்கொண்டே இருந்தார். பொழுது புலர்ந்தது. அவரை அறியாமல் அவர் திருக்கால்கள் பொற்றாமரையைக் குறுகின. குறித்த இடத்தில் முழுகினார். கிடைத்தது பேடகம். திறந்தன திருக்கைகள். இருந்தது சொக்கலிங்கம். துள்ளியது திருமேனி. துடித்தது உள்ளம். பொங்கியது மகிழ்ச்சி. சார்ந்தது சங்கரனுக்கு ஆளான தவப்பயன். தங்கியது சாந்தம். திருக்கையில்கிடைத்த அச் சொக்கலிங்கப்பெருமானை நோக்கி.

"கண்ணுக் கினிய பொருளாகி யேஎன் கரத்தில் வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேஎன்ன விஞ்சை இதால்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே"

என்று வழுத்தினார். 'பெருமானே, இனி உன்னை விதிப்படி பூசிக்கும் உபதேசத்தை அநுக்கிரகம் செய்தருள்க' என்று வேண்டினார். இருக்கையில் சென்றார். இரவில் வழக்கம் போலச் சிவத்யானபரராய்த் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறலானார். அப்பொழுது ஒரு கனா, அதில், "ஞானசம்பந்தா! திருவாரூர்க்குச் செல்க, உபதேச மரபில்வந்த ஞானப்பிரகாசனிடத்தில் உபதேசம் பெறுக, பூஜை ஏற்று நம்மை இடைவிடால் பூஜித்து வருக" என்று அருளாணை பிறந்தது. ஆரூரில் இருந்த ஞானப்பிரகாச தேசிகர் விடியலில் கமலாலயத்தில் முழுகினார். நித்திய கருமங்களை முடித்தார். பூங்கோயிலை அடைந்தார். தியாகராஜப் பெருமானைத் தொழுதார். விதிப்படி ஆலய தரிசனத்தைச் செய்தார். சித்தீச்சரத்தில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வணங்கினார். தம் கனவில் அருளப்பெற்றபடி அங்கேயே 'ஞானசம்பந்தர்' வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்

மதுரையினின்று அருள்பெற்றுப் புறப்பட்டு வந்து கொண்டிருக்கும் ஞானசம்பந்தர் திருவாரூரைச் சேர்ந்தார். கமலாலயத்தில் ஆடினார். புற்றிடங்கொண்ட பொருளைப் போற்றினார். ஞானப்பிரகாச தேசிகராகிய குரவர் வீற்றிருக்கும் குருமூர்த்தி

ஆலயத்தை அடைந்தார். குறிப்பால், இவர்தாம் நம்மை ஆட்கொள்ள வந்திருக்கும் ஞான வள்ளல் என்று உணர்ந்து கொண்டார். விழுந்து வணங்கினர். எழுந்து போற்றினர். அவரை ஞானப்பிரகாச தேசிகர் பேரருளொடும் அன்பொடும் இரண்டு கைகளாலும் எடுத்து, அஞ்சல் அளித்து, சிவதீக்ஷை செய்து, சொக்கலிங்கத்தைப் பூஜிக்கும் அதிகாரமும் கொடுத்து, ஆட்கொண்டருளினர்.

அன்று முதல் ஞானபூஜாவிதிப்படி சிவபூஜை செய்து வந்தார். பூஜையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடலாகப் பாடித் துதித்தார். அவற்றுள் கிடைத்தவற்றின் தொகுப்பே இப்போதுள்ள 'சொக்கநாத வெண்பா' என்னும் தோத்திர நூல் ஆகும்.

குருதோத்திரம் எனத்திகழும் 'ஞானப்பிரகாச மாலே' அருணெறியில் அமைந்த நன்றிக்குறியாகும். அவருடைய குருபக்தியும் குருவாணையைக்கடவாத சீர்மையும் எண்ணும் போதெல்லாம் என்னை யான் அறியேன், அத்தகைய பக்தி எனக்கு எப்பிறப்பில் வாய்க்குமோ? இது நல்லோர்க்கு உறும் நாட்டம்.

ஞானப்பிரகாசர் திருவாரூர்ப் பூங்கோயில் வழிபாட்டை முடித்து மீள்கின்ருர். கைவிளக்குத்தூக்கி, தூங்கிவிட்டான். அதை எடுத்துவர எவரும் முற்பட்டிலர். நம் ஞானசம்பந்தர் அக் கை விளக்கை எடுத்தார். அதனல் பெருமகிழ்ச்சி உற்ருர். 'என்னபுண்ணியம் செய்தனே நெஞ்சமே' என்று வியந்தார். குருநாதர் பின்வரத் தாம் முன் சென்ருர். மடத்திற்கு முன்னே, குருநாதர், 'நிற்க' என்றுபணித்தருளினர், கையும் விளக்கொடு நின்றது. அவர் கால்களும் அப்பால் ஓரடியும் நீங்காமல் அங்கேயே நின்றன. அது கால் நிலேயோ? முழுநிலே, பேரின்ப ஞான நிலே, சிவாநுபூதிநிலே. எப்படித் தெரிகின்றது? பெருமழை பெய்தது. பெய்தால்தான் என்ன? அவரைச்சுற்றி மூன்று முழக்கிடை ஒருவட்டமிட்டது போல, நிலத்தில் நீர்ப் பசுமையே இல்லே, சாணந்தெளிக்கவந்த அம்மையார் அதைக் கண்டார். குருநாதர்க்குத் தெரிவித்தார். திடுக்கிட்டு எழுந்து ஓடிவந்தார். கண்டார். திருவருளே வியந்தார். ஞானப் புதல்வரைத் தழுவினர். நாம் குரு, நீர் குருராயர் என்ருர்.

இனி உம்விருப்பத்துக்குத்தக்க இருப்பிடத்தை அடைந்திருந்து பக்குவான்மாக்களுக்கு உபதேசித்து, உய்யும் நெறிகாட்டி வாழ்க என்று கட்டளையிட்டருளினுர். அதுகேட்டு 'எங்கனம் நான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே' என்று உள்ளம் வருந்திஞர்.

குருவாணைப்படி **தருமபுரம்** போந்தார். இவ் வில்வக் **காட்டில்** சைவ சித்தாந்த ஞானபீடத்தின் ஆதிபத்தியம் பெற்ருர். பலர்க்கு உபதேசித்தார் மெய்வழிப்படுத்திஞர். சிவபோகசாரம் முதலிய பல நூல்களை ஞானம் முதலிய நாற்பாதத்திற்கும் எழுதிஞர்.

அகத்தியர் அருளிய ஆச்சிரமம் முதலியவற்றைப் பரிபாலனம் புரிந்தார். அதுமுதல், தருமபுரம் குருபீடஸ்தானம் ஆயிற்று. ஆநந்தபரவசர், சச்சிதானந்த தேசிகர் முதலிய பலர், அக் குரு பரம்பரையில் அருளரசு புரிந்து, சைவவுலகைத் திருநெறியில் செலுத்தியருளினர். ஆநந்தபரவசர் முதலிய குருமணிகளின் வரலாறுகள் அதியற்புதமானவை. அவற்றைப் பின்னர் அறியலாகும்.

வாழ்க கைலாசபரம்பரை ! வாழ்க தருமபுர ஆதீனம் !

---

சென்றமாத இதழில் வெளிவந்த "தவம்" என்பது பற்றிய வானெலிக் கட்டுரை, திருச்சி வானெலி நிலயம் டைரக்டர் அவர்களது அநுமதி பெற்று, அக்கட்டுரையாளரால் பிரசுரிக்கப் பட்டது.

சாத்திரப் பகுதி

# திருவருட்பயன் ஆராய்ச்சி

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம்,
திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

[முன்தொடர்ச்சி]

அருவு முருவு மறிஞர்க் கறிவா
முருவ முடையா னுளன்

இத்திருக்குறள் வெண்பாவில், 'உருவம்' என்றது உருவும் என்றே யிருத்தல்வேண்டும். 'ஞானவுருவினையும்' என்னும் உரை அதனைப் புலப்படுத்தும். அருவும் உருவும் அறிவா முருவும் என்று எண்ணும்மை கொடுத்தே ஆசிரியர் அருளிச் செய்தாரெனல் இனிது விளங்குகின்றது. "அருவும் (சிவம் சத்தி நாதம் விந்து என்னும் அருவடிவு நான்கும்) உருவும் (மகேசுரன் உருத்திரன் மால் அயன் என்னும் உருவடிவு நான்கும்) உள்ளானெனவே அருவுருவாகிய சதாசிவ வடிவ மென்பது கூறவேண்டாவாயிற்று" என்று எழுதியருளிய ஸ்ரீ நிரம்பவழகிய தேசிகர் குறிப்பால், அருவம் உருவம் அரு வுருவம் என்னும் மூவகையும் உணர்த்தி நின்றவை "அருவு முருவும்" என்ற முதலிரு சீராகுமென்றும், அம்மூவுரு வினையுங் கடந்த சச்சிதாநந்த சொருபத்தை உணர்த்த நின்றவை 'அறிவாமுருவும்' என்னும் நான்காவதைந்தாவது சீர்களாகு மென்றும், எனவே அருவும் உருவும் அறிவாமுருவும் என்று எண்ணும்மையேற்று நிற்றல் தக்கது என்றும் அறிஞர் எளிதி னுணர்தல் கூடும். 'உருவமுடையானுளன்' எனப் பாடங் காட்டும் பதிப்புக்களைத் திருத்திக்கோடல் நன்று. (44. உரை பார்க்க).

பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மை யான் 3

இதில் பெருமையும் நுண்மையும் ஒன்றற்கொன்று மறுதலைப் பண்பாகும். அவ்வாறே ஏனையிரண்டும் அமைந்திருக்கற் பாலன. ஆசிரியர் உமாபதிசிவாசாரியார் அவ்வாறமைப் பதை மிகுதியாக உடையவர்.

"நினைப்பினுக்குந் தூரம்போலேயணிய சுந்தரத்தாள்"
"ஒளித்திருந்து தோன்றி நிற்குங்கள்ளம்"
"இப்பிறவிப் பேதந்தனில் இன்பப் பேதமுறுப்பாதகர்"
"...மெய்யென்றுன் பொய்யென்றுன்..."
"நில்லாத செல்வம் நிலே"

என்பனவும் இன்ன பிறவும் நோக்கின் அவ்வுண்மை விளங்கும். விளங்குதலால், இங்கும் பேற்றருமைக்கு மறுதலேயான பேற்றெளிமை தோற்றுதல் வேண்டுமென்பது தெளிவாகும். ஆதலின், பேரருட்கும் என்பது 'பேறருட்கும்' என்றிருத்தற்குரியது என்றும் அதற்கு அருட்பேற்றெளிமைக்கும் என்று பொருள் கொள்ளல் நன்று என்றும் யாம் கருதுகின்றேம். அக்கருத்து ஈங்குப் பொருந்துமேற் கொள்க.

இதனுள் முதற்கண் உள்ள மறுதலேப் பண்புகளிரண்டும் பெருமை நுண்மை எனக் காணப்படினும் அவை பருமை நுண்மை என்றே கருதப்படற்பாலன. இன்றேல், நுண்மைக்குச் சிறுமை என்னுங் கருத்துக் கொள்ளல்வேண்டும். பெருமைக்குச் சிறுமையும் நுண்மைக்குப் பருமையும் மறுதலே யாகும். இஃது ஆசிரியருணர்ந்ததே யெனினும், மோனே நோக்கியமைந்ததெனல் விளங்கும். "நுண்மையும் பெருமையும்நுவலின்" (இருபாவிருபஃது 6) என்னும் ஆசிரிய வசனம் எனலுமாம். ஆண்டுப் பருமை என்றே கொள்ள இடனுண்டு. அஃது "உண்மையும் பெருமையும்" என்று தவறுறப் பிரித்தவர்க்குப்பொருந்தாமலிருக்கலாம். மொழி முதல்அகரம் எகரமாயொலித்தல் வழக்கிலுளது. பலம் பெலம், வல்லம் வெல்லம், கருவம் கெருவம், வடிதல் வெடிதல் என்பனபோல்வன பலவுள. அவ்வாறு பருமை பெருமை என்று மருவியதாக் கொள்ளினும் பொருந்தும், இத்திருக்குறள் இறைவனது அநாதி முறைமையை யுணர்த்தும் "பதிமுதுநிலே" யுள் மூன்ருவதாயிலங்குவது.

தனக்குவமையில்லாத் தலேவன், அகரம் எல்லா வெழுத்துக்களினும் பொருந்தி வேறற நின்ருற்போலச் சித்தும் அசித்துமான எல்லாப் பொருளினும் ஒழிவற நிறைந்த அறிவாய் நின்று இயக்கியும் உணர்த்தியும் உதவும் இயல்பினன். தன் பேரின்பப் பெருஞ்செல்வமுழுவதும் அழிவில்லாத வுயிர்க

ளெல்லாம் அடையுமாறு தன்னருளால் அளித்து, அதனுனே தனக்கொரு மாறுதலும் எய்தாதவண்ணம் அவ்வருட்சத்தி யோடும் பிரிவின்றி ஒன்றி நிற்பான் என முதலிரு குறள்களால் உணர்த்திய ஆசிரியர் இம்மூன்ருவது ("பெருமை...ஒப்பின் மையான்") குறளால், அம்முதல்வனது இரு வேறு மறுதலைப் பண்புகள் நான்கனையும் இனிது விளக்கியருளினுர். இவையே அவை:

1. இறைவனுக்குள்ள "அண்டமோரணுவாம் பெருமை" (மகத்துவம்) "ஏனையாவரும் எய்திடலுற்று மற்றின்னதென் றறியாத" பெருமை.

2. "அணுவோரண்டமாஞ் சிறுமை" (அணுத்துவம்) "இத்தந்திரத்திற்காண்டும் என்றிருந்தோர்க்கு அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்து" நிற்கும் நுண்மை, "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்" மையும் அதிலடங்கிய பருமையும் இங்கு நினைத்தல் நன்று.

3. நம்மைத் தன் பாதபங்கயம் பணிவித்து என்பெலாம் உருக்கித் தன்னை நம்பால் வைத்து ஆட்கொள்ளப் பெருங் கருணை செய்யும் எளிமை.

பூவினுற்றம் போன்றுயர்ந்து எங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமையுடையனுகியும், அருளிடவேண்டும் அம் மான் என்று அளிபவர் உள்ளத்து அமுதாகி அவர் இருள்கெடப் பேரருள் புரியும் எளிமை.

4. உலவாக்காலம் தவமெய்தி உறுப்பும் வெறுத்து நனிவாடினும், பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார் ஆராலும் காண்டற்கு அருமை, ஓராதாருள்ளத்து ஒளிக்கும் அருமை.

இவற்றை, ஸ்ரீமத் உமாபதிசிவாசாரிய சுவாமிகள், (திரு முறையடங்கலும் ஓதியுணரும் வலியைச் சிவபுண்ணியப் பயனுகப் பெருதவரும் நல்வினைப்பயனுகச் சைவாசார சீல ராய்ப் பிறந்தவருமாகிய) சிலரேனும் உணர்ந்துய்தல் வேண்டு மென்னும் பெருங்கருணையால் திரட்டியருளிய திருமுறைத் திரட்டில், "அண்டமாரிருள்" "ஏதுக்களாலும்" "வெந்த

சாம்பல்'' "ஆட்பாலவர்க்கு'' எனத்தொடங்கும் திருவருட் பாக்கள் இனிது விளக்கும். இவ்வாறு பருமை×நுண்மை, எளிமை×அருமை என்னும் மறுதலைப் பண்புகள் நான்கும் இறைவனுக்குண்மையை உணர்த்தும் இத்திருக்குறளில் 'பேரருட்கும்' என்பது 'பேறருட்கும்' என்றிருத்தல் வேண்டும் என்பது எம் கருத்தாகும். 'பேரருட்கும்' என்ற பாடத்திற்கே எளிமைப்பண்பை யுணர்த்தும் பொருளைக்கூறுதலும் அமையும். அமைதலால் இடையெழுத்தை வல்லெழுத்தாக்கும் வலி நேராதொழியலாம். "பேற்றினருமை''யைக் குறித்த ஆசிரியரது திருவுள்ளக்கிடைக்குப் பேற்றின் எளிமையைக் குறித்தல் முற்றும் பொருத்தமாதலை அறிஞர் எளிதிலுணர்ந்து உடன் படுவர். இச்சிறுகுறட் பெரும்பொருள், ஒன்றும் பற்றுநாயே னுணர்விற்கு எட்டுவதன்று. 1. முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாம் பெருமை 2. பின்னைப் புதுமைக் கும் பேர்த்தும் அம் பெற்றியனும் நுண்மை 3. ஆநந்த வார் கழலே யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தாருள்ளிருக்கும் எளிமை. 4. வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனுங் கால் நின்றுவற்றியும் புற்றுயெழுந்தும் மரமாயும் புனல்காலே யுண்டியாய் வற்றியும் காணாத அருமையாகிய இறைவனது குறைவிலாற்றலையும், வரம்பிலாற்றலையும், வரம்பிலின்பத் தையும், தன்வயத்தையும் உணர்த்திய இத்திருவெண்பாச் சிறப்பை யாமோ புகலவல்லோம்?

உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது
மன்னுபவந் தீர்க்கு மருந்து 10

இத்திருப்பாட்டினுள் உன்னும் ("நினைப்பீராக'') என்பது முன்னிலை யேவற்பன்மை வினைமுற்றாகக் கொள்ளப்பட்டுளது. 39-இல், கேண்ம் என்றும் கொள்ள நிற்கும் ஓரிடத்திலன்றி 53, (58, 57. நீ), 91, ஆம் எண்ணுடையவைகளை நோக்கி ஒருமையை அறிக. ஈங்கு உன்னுளுளது எனப் பாடங்கொள்ளல் ஏற்றது. ளுகரத்தை முகரமாகப் பிழைபடக் கொண்டெழுதி யிருக்கலாம். உன்னுள் ஏன்பது உனதுள் என்றுஆறன் தொகை யாயும் (உன்னுகின்ற உன் என) நிகழ்கால-வினைத்தொகை யாயும் நிற்கப் பொருள் கோடல் பொருந்தும். உன்னுமுளத் தையமிலது எனத் தகரவொற்றொடு பாடமிருந்ததாகக் கருதிப் பெயரெச்சமாக் கோடலும் பொருந்தும். பொருந்தினும் உளது

இலது என்னும் அமைதியை நோக்கின், முன்னதே ஆசிரியர் கருத்தாயிருக்கலாம் என்று அறிஞர் கருதாதிரார். இஃது ஊக மாதலின், இதுகொண்டு மூலத்தைத் திருத்தலாகாது. திருக் களிற்றுப்படியார் 36ல் "உன்னிலவன் உன்னுடனே ஆம்" என்றதறிக.

மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்கள்
தோன்றலர்தொத் துள்ளார் துணை 13

என்னுந் திருப்பாட்டுக்கு ஸ்ரீ நிரம்பவழகிய தேசிகர் எழுதி யருளிய உரையாவது:—

"இம்மூன்று திறத்தான் மாக்களும் மூலமலமாகிய ஆண வத்தாற் பிணிக்கப்பட்டவர்களே. அவருள், மாயையென்னுந் துணையினையுடைய சகலர், தாங்கள் கட்டுற்றவரென்னுந் தன்மை தமக்குத் தெரிதலிலர் எனவே ஏனையரிருவருக்குந் தெரியுமென்பதாமென்க."

"மலம் என்பது அழுக்கு. உம்மை முற்று." "இதனல் முன்னர் (12) ஒவ்வொன்ருக நீக்கப்பட்டது மாயையும் கன்ம மும் அல்லது ஆணவமன்றென்பது கூறப்பட்டது."

இவ்வுரையில் 'துணை' என்பதை மாயை எனக்கொண்டு, அம்மாயையொடு மும்மலமுடைய சகலர்க்கு ஆகுபெயராக் கினர் உரையாசிரியர். துணை தோன்றலர் என்றியைத்து, "தாங்கள் கட்டுற்றவர் என்னுந் தன்மை தமக்குத் தெரி தலிலர்" என்று பொருள் கூறினர். அவ்வுரைப் பகுதியை யடுத்து, "எனவே. ஏனையரிருவருக்குந் தெரியும் என்பதாம் என்க" என்றும் எழுதியுள்ளார். அவர் 'தொத்துள்ளார்' என்று கொண்டே 'கட்டுற்றவர்' எனப் பொருளுரைத்தார் (தொற்று, தொத்து - கட்டு).

தோற்றுள்ளார் என்று ஒரு பாடம் உண்டென்று முதலில் ஊகித்தேமாயினும், உண்மையில் அது பண்டிருந்ததே எனச் சான்றுங் கிடைக்கப்பெற்றேம். தருமபுராதீனத்து முனிபுங்க வருள் ஒருவராகிய ஸ்ரீகாவை அம்பலவாணத் தம்பிரானர் பாடியருளிய "திருவருட்பயன் உதாரணக் கட்டளைக் கலித் துறை" யில் அத்திறப்பாடம் உண்டென்றுணரலாம். அதன்

பதிப்பாளர் 'தோற்றுள்ளார்' என்னும் பாடத்தைக் கீழ்க்குறிப்பில் காட்டியது பொருந்தாது. கலித்துறையில், 'தோற்றுள்ளார்' என்ற பாடத்திற்கே பொருளுணர்த்தப்பட்டது. 'தொத்துள்ளார்' என்னும் பாடத்திற்குப் பொருளில்லை. இங்கு, அக்கலித்துறைப் பொருளை அத்தகைய பாடம் ஒன்றுஉண் டென்னும் மாத்திரைக்கே கொண்டேம். அப்பாடத்தின் பொருத்தத்தை யுணர்ந்தார்.

"மூன்றுதிறத் துள்ளாரும் மூலமலத்துள்ளார்கள்
தோன்றலர் தோற்றுள்ளார் துணை"

என்றே அத்திருவெண்பாவைக் கொண்டு பொருள் காண்பர். தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு வெளிவந்த பல்லுரை களும் 'தொத்துள்ளார்' என்ற பாடத்தைக்கொண்டெழுதியன வாகவே உள்ளன. முற்குறித்த கட்டளைக் கலித்துறையொன்றே 'தோற்றுள்ளார்' என்ற பாடத்தைக் கொண்டமைந்துளது. அக் கட்டளைக் கலித்துறைப் பாடலாவது:-

"மூன்று திறத்தினுன் மாக்களுக் காணவ மூலமதி
யேன்று மறைக்கு மிவர்க்குடற் போக மிறையறிந்து
தோன்றுத் துணையென நின்றது தன்னையுந் துய்ப்பித்தபி
ஞன்ற வடிமைக் கருளா ரமுத மருந்துவனே".

என்பது.

பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கண்
மாலாழி யாளு மறித்து. 34

இதில், 'மாலாழியாளும்' என்பது "மாலாழியாழும்" என்றிருத்தல்வேண்டும். "மயக்க வேலையுள் ஆழ்ந்து அழுந்துந் தன்மை என்று உரையாசிரியர் எழுதியிருத்தலால், அவர்க்கு ஆளும் என்றது பாடமன்று என்பது தேற்றம். 'சிந்தனையுரை' என்று அச்சிடப் பெற்றதிலும் "மயக்கமாகிய பிறவிச் சாகரத்திலே விழுந்து புலன் வழித் திரியா நிற்கும்' என்று உள்ளதால், அவ் வுரையாளரும் 'ஆழும்' என்றே கொண்டாரெனல் விளங்கும். ஈரடியுளும் 'ஆழும்' என்று பாடங்கொண்டுரைத்தாருமுளர்.

இருளி லிருளாகி யெல்லிடத்தி லெல்லாம்
பொருள்க ளிலவோ புவி 18

4 98

இதில், இலவோ என்பது "உடையதன்றோ உலகம்" என்னும் உரையை நோக்கின், "இலதோ" என்றிருத்தல்வேண்டும். (சிவஞான பாடியம் (சூ. 2.) பார்க்க). வேறு பாட பேதங் களுமுள.

(அ) தரையை யறியாது தாமே திரிவோர்
புரையை யுணரா புவி 36

(ஆ) அருளா வகையா லருள்புரிய வந்த
பொருளா வறியா புவி 43

'பொருள் ஆர் அறிவார் புவி' என்பதும் பாடம்.

(இ) பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணு புவி 45

என வரும் திருக்குறள்களை நோக்கினும் இலவோ என்ற பாடம் நிலைபெறுது. அந்நான்கிடத்தும் 'புவி' என்பது வினைமுதலாய் நிற்றல் அறியத்தக்கது. இவற்றிலுள்ள பாடபேதங்களையும் அவற்றின் பொருந்தாமையையும் உரையுள்ள பதிப்புக்களிற் காண்க. ஸ்ரீ நாகலிங்க முனிவர் பதிப்பும் ஈண்டு நோக்கற்கு உரியது. ஞானபானு சங்கத்தார் பதிப்பு மதிப்புக்கு உதிக்கும். 'பார்வை' யெனத் தொடங்குவதைத் தருமபுராதீநத்து முத்தி நிச்சயப் பேருரையுட் (பக்கம் 43. 178) காண்க. முப்பொரு ணூற் செய்யுட்கு,

'தரையை யுணராது தாமே திரிவோர் புரைய' ,

என்று உவமவுருபாக் காட்டும் உரைகாரர் 'அருளது நிலை என்னுந் தலைப்பின் கீழுள்ள திருக்குறளுள் அருளுக்கிடமில்லாது செய்யும் ஆற்றலையுடையராகி, உவமங்கொண்டு பொருள் கொள்ளாராயினர்.

சத்தசததைச் சாரா தசத்தறியா தங்கணிவை
யுற்றசத சத்தா முயிர் 17

இதில், 'உற்ற' என்புழி 'உய்த்தல்' என்றுஞ் சிலர் பதிப்புள் உளது. இவ்விருவேறு பாடத்திற்கும் உரை எழுதப் பட்டிருக்கின்றது. "இவை யுய்த்த" என்றுள்ள பாடத்திற்கே ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகர் "இவற்றைத் தன்னுளுணர்வு செலுத்திப் பகுத்தறியும்உயிர்கள்" என வினைப்பெயராகக் கொண்டு கூறிய பொருளை எழுவாயாக்கி, சதசத்தாம் உயிர் என்பதைப் பெயர்ப் பயனிலையாகக் கொடுத்தருளினர்.

499



'உய்த்தவுயிர்' என்றியைத்துப் பெயரெச்சமாக்கினுரெனவுங் கொள்ளற்கிடனுண்டு. எவ்வாருயினும் 'உய்த்த' என்பதே தக்கபாடம். லகரவொற்று ஓசைக் கேட்டையும் விளைக் கின்றது.

தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
ருனதுவாய் நிற்குந் தரம் 61

இங்குத் 'தூநிழல்' என்பது 'தூணிழல்' என்றிருத்தற்பாலது. 'தான்' என்றும் 'அது' என்றும் இருபொருளிருத்தலின், 'தூண்' என்றும் 'நிழல்' என்றும் ஈருவமம் உணர்த்தியருளிய ஆசிரியர் திருவுள்ளக்கிடையைத் தெற்றெனவுணரலாம். "தனக்கு நிழலின்ருவொளி கவருந்தம்பம்" 97 என்று இவ்வியலிலே வருவது காண்க. ஆண்டும் உவமும் பொருளும் அமைந்த வாற்றை அறிக. தூநிழல்' எனக்கொண்டு, கோடையான் வெதும்பினேன்' எனவும் 'ஆதித்தன்' எனவும் வருவித் துரைத்தல் எற்றுக்கோ? தமிழுரையே இந்நிலையிலிருப்பின், ஆங்கில மொழிபெயர்ப்பை ஆராயவும் வேண்டுங்கொல்? (சிவப்பிரகாசம் 69. மதுரைச் சிவப்பிரகாசருரை பார்க்க) தூநிழல் என்புழி நிறுத்த சொல்லுக்குப் 'பவித்திரம்' 'குளிர்ந்த' என்று பொருள் கூறியதைக் கண்டவர்களுள் ஒருவரான ஆங்கில வுரையாளர் திரு. J. M. நல்லசாமிப் பிள்ளை அவர்கள், B. A. B. L., 'Cool Shade' என்று (தூநிழல்) குறித்தார். தூண் - படிகத்தூண்; 'தனக்கு நிழல் இன்ரு ஒளிகவரும் தம்பம்'.

விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும் 84

என்று பதித்தாருமுளர். 'மந' எனத் தந்நகரமே யிருத்தல் வேண்டும். நகரம் திரோதாநத்தை யுணர்த்துவதென்றறிதல் வேண்டும். 'வாசியருளியவை' என்றதை நோக்கின் 'மேவியவை' எனலும் பொருந்தும். பூச்சீராகாது காய்ச் சீராகும்.

மாலார் திரோத மலமுதலா மாறுமோ
மேலாகி மீளா விடின். 85

இதில், மேலாகி என்றிருத்தல் பொருந்தினும் கொள்ளற்பாற் றன்று. 'மேலாசி' என்றே யிருத்தற்பாற்று; சி - மேலா என மாறி நிற்க, சிவம் மேலாக எனப் பொருள்கொள்ள வேண்டு தலின் மேலா என்பது மீளா என்பதன் முத்னிலையோடு கூடி மேலாகமீளாவிடின் மாறுமோ என முடிதலின், மேலாச்சி என மிகுதல் கூடாது. மேலாதல் சிகரத்தின்ருெழில். அஃது அவ்வாருக மீளல் யகரத்தின்ருெழில். மேலா மீளலால் வரும் பயன் மலமாற்றம். மேலாமீளாமையின் பயன் மலமாருவூற்றம்.

"சித்தாந்தம்"

# வள்ளுவர் வைப்பு

பண்டித, வித்துவான், திரு. S. சுந்தரமூர்த்தி அவர்கள்
விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

தண்தமிழ் இலக்கியங்களில் தலைமையும், சிறப்பும் பெற்று விளங்குவது திருக்குறள். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இப்பெருநூல் அக்காலத்து மட்டுமன்றி இக்காலத்தும், இனி எக்காலத்தும் தக்கநூலாய் அனைவரும் ஒருசேரப் புகழுமாறு விளங்கி நிற்கும். இதில் சிறிதும் ஐயமில்லை. இந்நூல் தோன்றியதிலிருந்து இந்நூலின் கருத்துக்களையோ, சொற்களையோ, குறள்களையோ எடுத்தாளாத நூல்கள் இல்லை. எடுத்தாளாத அறிஞர் இலர். எடுத்தாளாத சமயங்களும் இல்லை. இந்நூல் இத்தகைய தலைமையும் சிறப்பும் எய்துவதற்குக் காரணங்கள் பல உள. அவற்றில் எல்லாம் தலைமைக் காரணமாகக் கூறவேண்டுமென்றால், திருக்குறள் எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா நாடுகளுக்கும் பொதுவாகவும், நடுவுநிலைமை பிறழாமலும் கூறி இருப்பதேயாகும்.

திருக்குறளின் கருத்துக்களையும், சொற்றொடர்களையும் எடுத்தாளுவதின் வாயிலாக அந்நூலுக்குச் சிறப்புத்தந்த நூல்கள் பல உள. அவற்றுள் திருக்குறளையே புகழ்ந்து கூறுவதாய், அவர் காலத்திற்குச் சற்று முன்னும் பின்னும் தோன்றிய புலவர்களால் புகழப் பெற்றதொரு நூல் உண்டு. அதுவே திருவள்ளுவமாலை என்று சொல்லப்படும்.

அந்நூல் தோன்றியதுபற்றி இக்காலத்தில் ஆராய்ச்சிக்கு இடமான சிலகருத்துக்கள் இருப்பினும், திருக்குறளின் அருமை பெருமைகளை விளக்குவதற்கு எழுந்த நூல் திருவள்ளுவ மாலை என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. அந்நூல் ஐம்பதினைவர் புலவர் பெருமக்களால் பாடப்பட்டது.

அனைவரும் திருக்குறளின் அழகினை ஒருங்கு புகழ்கின்றார்கள். அப்புலவர் பெருமக்களுள் ஒருவரான மாமூலர் என்னும் யோகியார் திருவள்ளுவரை எவ்வாறு உணர்த்துகின்றார்? அதை ஒருபாடலில் காணலாம்.

501



"அறம்பொருள் இன்பம்வீடு என்னும்அந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள் ளுவன் என்பான்ஓர் பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்"

என்பது அப்பாடல்.

இதன்கண் திருக்குறள் இயற்றியவரைத் தெய்வம் என்று சொல்லவேண்டுமேயன்றி, மறந்தும் புலவன் என்றோ திருவள்ளுவன் என்றோ அவரை மனித வர்க்கத்துள் ஒருவராகக் கூறக்கூடாது என்பதையும் அப்படி அத்தெய்வத்தை மனிதனாகக் கூறுபவர்கள் மனிதரல்லர், பேதையே என்றும், அப்பேதையின் வாய்ச்சொல்லை அறிவுடையார் ஒரு பொருளாக மதியார் என்றும் அழுத்தமும் திருத்தமும் உற எடுத்துக்கூறி இருக்கின்றார்.

இப்பாடலின் முன்னிரண்டு அடிகளிலும், தெய்வப் புலவர் திருக்குறள் இயற்றிய நிலையினை "அறம், பொருள், இன்பம், வீடு என்னும் அந்நான்கின் திறம் தெரிந்து", (செப்பியதேவை) என்ற தொடராலும் விளக்குகின்றார். இப்பாடலின் பின் இரண்டு அடிகளில் தெய்வப்புலவரை மறந்தும் திருவள்ளுவன் என்றோ மனிதர்களுள் ஒருவன் என்றோ கருதுகின்றவன் பேதை என்றும், அவன் வாய்ச்சொல்கொள்ளார் அறிவுடையார் என்றும், வீர முழக்கத்துடன் கூறி இருக்கும் நிலையை நோக்கின், தெய்வப் புலவரின் மாண்பும் திருக்குறளின் மாண்பும் ஒருங்கே விளங்குகின்றன. இப்பாடலைப்படிக்கும்பொழுது இப்பாடலின் உயிர்நிலையான "தேவு" என்ற சொற்றொடரை இனிது உணர்ந்து படித்தல் வேண்டும். (அம்முறையில் மீண்டும் படிக்கிறேன்.)

திருக்குறளைப்பற்றியும் அதை ஆக்கிய தெய்வப்புலவரைப் பற்றியும் புகழ்ந்து பேசுகின்ற பாடல்கள் மிகப் பல உள. என்றாலும் அவை யனைத்தையும் இங்குச் சொல்ல இயலாது. ஆகையால் ஒன்றிரண்டு பாடலைமட்டும் நினைவு கொள்ளலாம். புலவர் ஒருவர் கூறுவது.

"அவனே புலவன் அவனே அறிஞன்
அவனே தமிழை அறிந்தோன்—சிவன் அறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவது ஏவன் உளன்".

இப்பாடலை ஆக்கிய புலவர் இன்னுர் என்று அறிய இயலவில்லை என்றுலும் இப்பாடலிலிருந்து வள்ளுவப் பெருந்தகையின் சிறப்பினை முன் இரண்டு அடிகளில் "அவனே புலவன் அவனே அறிஞன்; அவனே தமிழை அறிந்தோன்", என்று கூறுவதால் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்ந்த புலவர் திருவள்ளுவர் என்பதூஉம், பின்னிரண்டு அடிகளில் திருக்குறளுக்கு எத்தனையோ பழைய உரைகளும், புத்துரைகளும் தோன்றியும், தோன்றவும் இருந்தாலும் வள்ளுவரை எவர்தாம் உண்மையாக அறியமுடியும்? ஒருவரும் அறிய வல்லர் அல்லர். "சிவன் அறியச்" சொல்லுகின்றேன் என்பாராய், "சிவன் அறிய வள்ளுவதேவன் வசனத்தை மெய்யாக; உள்ளுவது ஏவன் உளன்" எனக் கூறுகின்றுர்.

புலவர் பிறர் ஒருவர் திருக்குறளாகிய முப்பாலை உண்டமையால் இனி ஒரு தாய் வயிற்றில் பிறந்து முலைப்பாலை அருந்த வேண்டிய அவசியம் இல்லை; படித்த அப்பொழுதே எப்பொருளையும் உள்ளபடி உணர்ந்து ஓதிக் குறைதீர்ந்து வீட்டையும் எய்தினேம் என்று கூறுகின்றுர். அப்பாடல் பின் வருமாறு.

"முப்பாலும் உண்டோம் முலைப்பால் இனிநுகரோம்
அப்பாலுக்கு அப்பாலும் ஆயினேம்—எப்பொருளும்
உள்ள படிஉணர்ந்தோம் ஓதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனுர் வைப்பு எமக்கு வாய்த்து".

இப்பாடலில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைத் தமக்கும் நமக்கும் அனைவருக்கும் ஒரு "வைப்பு" அதாவது சேமநிதி என்பதாகக்கூறி இருப்பது திருக்குறளின் உண்மையை உள்ளபடி எடுத்துக் காட்டுவதாகும். "வாழிய செந்தமிழ்" "வாழிய குறள்நெறி".

503

# ஆதீனத்திலும்
# ஆதீன தேவஸ்தானங்களிலும்

## திருக்கேதார யாத்திரை :

திருக்கேதாரம் சென்று மீண்டு தருமைக்கு எழுந்தருளிய முதல்வர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், யாத்திரையை முடித்துக்கொண்டு 18—5—55 புதன்கிழமை யன்று காலையில் ஆதீனத்தை அடைந்தார்கள். அவ்வமயம் ஆதீனத்திலுள்ள தம்பிரான் சுவாமிகளும், மற்றுமுள்ள ஆதீன நிர்வாகத்தினர்களும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் காசி, கேதாரம், முதலிய இடங்களிலிருந்து கொணர்ந்த திருநீறு முதலிய பிரசாதங்களை எல்லோருக்கும் வழங்கியருளினார்கள். நாள்தோறும் மாயூரம் முதலிய இடங்களிலிருந்தும் பல பெரியோர்கள் வந்து தரிசித்துப் பிரசாதம் பெற்றுச் சென்றார்கள், இன்னும் செல்கிறார்கள். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் ஆதீனத்திலும், தேவஸ்தானங்களிலும் கங்காபிஷேகம் முதலிய விசேட பூசனைகள் செய்விக்கும் முறையில் 23—5—55 சோமவார தினத்தன்று, ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு காசிதீர்த்தமாகிய கங்கையைக் கொண்டு அபிஷேகம் முதலிய சிறப்பு ஆராதனை செய்யப்பெற்றது. ஸ்ரீஆனந்தபரவசர் முதலிய குருமூர்த்த ஆலயங்களிலும் கங்காபிஷேகம் முதலிய சிறப்பு வழிபாடு செய்விக்கப்பெற்றது. ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி ஸ்ரீ தர்மபுரீஸ்வர சுவாமி ஆலயங்களிலும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மி துர்க்கை ஆலயத்திலும் கங்காபிஷேகம் முதலிய சிறப்பு வழிபாடு செய்விக்கப்பெற்றது.

## 24-ஆவது மகாசந்நிதானம் குருபூஜை :

தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் 10-வது ஆண்டு குருபூசை விழா 29—5—55 ஞாயிற்றுக்

கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்றுகாலை சுமார் 9-30 மணிக்கு, குருபூசை வழிபாட்டை முன்னிட்டுக் குரு மூர்த்த ஆலயத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் எழுந் தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு விபூதி பிரசாதம் முதலியன வழங்கியருளினார்கள். வழிபாட்டிற்கு வந்திருந்த அனைவருக் கும் பிரசாதங்கள் விநியோகிக்கப்பட்டன. அன்று இரவு 10-மணி சுமாருக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் குரு மூர்த்தத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பின்னர் குருபூசை விழாமலராகத் திருவாவடுதுறை ஆதீன வித்துவான். மு. நடராஜ தேசிகர் அவர்கள் எழுதிய விளக்க உரையோடு ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய 'நால்வர் நான்மணிமாலை' என்ற பழைய நூல் சிறந்த முறையில் வெளியிடப் பெற்றது. அந்நூலை வழிபாட்டிற்கு வந்திருந்தவர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வழங்கினார்கள். பின் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீசண்முகதேசிகபரமாசாரியசுவாமிகள் குருபூசையை முன்னிட்டு 28—5—55 அன்று மாலையிலேயே சொற்பொழிவு கள் தொடங்கி நடத்தப் பெற்றன. 29—5—55 ஞாயிற்றுக் கிழமையன்றும், காலை, மாலை, இரண்டு வேளைகளிலும் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலயத் தலைவர், வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "குருஞானசம்பந்தர் – ஆனந்தபரவசதேசிகர்", திருநள்ளாறு தேவஸ்தானக் கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'சச்சிதா னந்த தேசிகர் - மாசிலாமணிதேசிகர்', சீகாழி தேவஸ்தானக் கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'ஞானசம்பந்த தேசிகர் - சிவ ஞானசம்பந்த தேசிகர்', திருச்சி மௌனமடம் கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'திருவம்பல தேசிகர் - அழகிய திருச் சிற்றம்பல தேசிகர்'. மாயூரம் குமரக்கட்டளை கட்டளை விசாரணை, ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'திருநாவுக்கரசு தேசிகர் – சிவஞான தேசிகர்', திருக்கடவூர்

5°5



தேவஸ்தானக்கட்டளை விசாரணை, ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளவர்கள் 'சச்சிதானந்த தேசிகர் - முத்துக் குமாரசாமி தேசிகர்', தருமபுர ஆதீனம் ஸ்ரீ சண்முக சுவாமிகள் 'ஞானசம்பந்த தேசிகர் - கந்தப்ப தேசிகர்'. தருமபுர ஆதீனம் ஸ்ரீ சட்டநாதக்குட்டி 'மாசிலாமணி தேசிகர் - சச்சிதானந்த தேசிகர்'. ஸ்ரீகுமாரசுவாமிக்குட்டி 'மாணிக்கவாசக தேசிகர் - சிவஞான தேசிகர்', வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் 'மாணிக்கவாசக தேசிகர் - சிவஞான தேசிகர்', வித்துவான் திரு. வி. சா. குருசாமி 'சச்சிதானந்த தேசிகர் - மாணிக்கவாசக தேசிகர்'. வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை, 'சுப்பிரமணிய தேசிகர் - சண்முக தேசிகர்'. என்ற குருமகா சந்நிதானங்களின் சரித்திரங்களை விரிவாகப் பேசினார்கள். தருமையாதீனத்தில் அருட்செங்கோல் ஓச்சிவந்த 24-ஆவது மகாசந்நிதானங்களுடைய வரலாறுகள் விளக்கமாக எடுத்துப் பேசலாயின. அன்றுமாலை சுமார் 6-மணிக்கு V. V. சடகோபன் B. A. அவர்கள், பாட்டு. தருமையாதீன இசைக் கல்லூரித் தலைமையாசிரியர், திரு. T. S. சம்பந்தம் பிள்ளை அவர்கள், பிடில். தருமையாதீன இசைக் கல்லூரி மிருதங்க ஆசிரியர், திரு .R. விசுவநாதய்யர் அவர்கள், மிருதங்கம், இவர்களுடைய இன்னிசையரங்கு நிகழ்த்தப்பெற்றது.

## லக்ஷார்ச்சனை :

2—6—55 வியாழக்கிழமையன்றுமுதல் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ ஞானம்பிகை ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் முதலிய கடவுளர்களுக்கும் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்தில் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கும் லக்ஷார்ச்சனை தொடங்கி நடைபெறுகிறது. 11—6—55 சனிக்கிழமையன்று லக்ஷார்ச்சனை பூர்த்தி நடைபெற இருக்கிறது.

தருமபுர ஆதீனம்

## ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவம்

# 7-வது திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு

திருத்தருமபுரத்தின்கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு நிகழும் மன்மத ஆண்டு வைகாசித்திங்கள் 19-ம் நாள் (2—6—55) குருவாரம்முதல் தொடங்கித் திருவிழா மிக்கசிறப்பாக நடைபெறுகிறது. திருவிழா நாட்களில் திருநெறியத் தெய்வத்தமிழ் மாநாடும், இன்னிசை நிகழ்ச்சிகளும், தேவார பாராயணமும் நடைபெறுகின்றன. திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு, ஒவ்வொரு நாளும் மாலை 5-மணிக்குத் தேவாரம் ஓதியபின்னர் சமயச் சொற்பொழிவுகளுடன் நடைபெறுகின்றது. முதல் இரண்டு நாள் நிகழ்ச்சிகள் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் ஆலயத்தின் எதிரில் நிகழ்ந்தன. மூன்றும் நாள் காலை சுமார் 8-30 மணிக்குப் பாரதரத்ன உயர்திரு சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியார் அவர்கள் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தைத் திறந்துவைத்தார்கள். அன்றுமுதல் நிகழ்ச்சிகள் திருநெறியதெய்வத் தமிழ் மன்றத்திலேயே நிகழ்கின்றன.

### முதல் நாள் நிகழ்ச்சி

2—6—55 வியாழன் அன்று திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A., அவர்கள் (பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை) "திருத்தொண்டு" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றியதன் சுருக்கம்.

மாணவர்கள் சமுதாயத்தில் முன்னேற முதலாவதாகச் சாமர்த்தியமாகப் படிக்க வேண்டும். வள்ளுவன் குறளை மக்கள் நன்கு படித்து இருந்த போதிலும் அவர் வழியிலே செல்லாமலிருக்கின்றார்கள். அங்ஙனம் இருக்கக் கூடாது.

தொண்டைப்பற்றிக் கூறுகின்றார்களேதவிர, செயல் முறையில் சிறிது இருந்தாலும் சிறப்புற இல்லை. தொண்டிற்கு

எடுத்துக்காட்டாக இருப்பவர் நாவுக்கரசரே யாவர். தொண்டிற்கு வேண்டிய இயல்பு அகங்காரம் அழியவேண்டும். குழந்தையின் அழுகைக் குரலில் இருந்தே ஆணவம் தொடங்கி விடுகிறது. தமிழர்கள் கடைப்பிடித்த தொண்டே சிறந்தது என்று சொல்லலாம். இவர்களைவிடத் தொண்டில் சிறந்தவர்கள் இந்த ஞாலத்திலே வேறெந்தச் சமுதாயத்திலும் கிடையாது. செயல் மனோநிலையைக் கொண்டு சிறப்படையும். சிறுத் தொண்டர் போன்ற அடியார்கள் செய்த தொண்டு சிறந்ததாக விளங்குகிறது. திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் செய்தது சாலச்சிறந்தது. புத்தர் நம்மையெல்லாம் புதுமையிலாழ்த்தும் தொண்டு செய்தார். தொண்டர்கள் இக்காலத்தில் சொல்லிச் செய்யாமல் இருக்கிறார்கள். ஆனால், அக்காலத்தில் நான் செய்யப்போவது இன்னது என்று சொல்லமாட்டார்கள். ஆனால் செயலில்தான் காட்டுவார்கள் என்பது போன்ற பல அரிய கருத்துக்களை எடுத்துக்கூறினார்.

வித்வான் திரு. K. M. வேங்கடராமையர் M. A., B. O. L. அவர்கள் (கல்லூரிமுதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.) "பெரியபுராண வரலாற்று அடிப்படை" என்னும் தலைப்பில்பேசியது.

இன்று அப்பர் வரலாற்றைப் பயிலும் மாணவ இளைஞர்களின் பிஞ்சு உள்ளங்களிலே ஐயப்பாடு உண்டாகிறது. ஏன் இந்த ஐயப்பாடு நிகழ்கிறது ? அதற்கு இளமைதான் காரணம். இந்த ஐயங்களை அறவே நீக்கிவைக்கின்றன திருமுறைகள்.

திருவாரூரில் செங்கோலோச்சிய மநுநீதிச் சோழன் காலம் சிலப்பதிகார காலத்திற்கு முந்தியது அதாவது கி. பி. 2ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது எனலாம். இதனை "வாயில் கடைமணி நடு நா நடுங்க உகுநீர் நெஞ்சுசுடத்தான் தன் அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்" என்னும் சிலப்பதிகார வரிகளால் அறியலாம். அத்தகைய மநு சரிதமானது வரலாற்று அடிப்படையில் உள்ளது. எனவே பெரிய புராண அடியார்கள் யாரும் அக்காலத்தில் மக்கள் மனத்திலே குடிகொண்டிருந்தார்கள்.

சிறுத்தொண்டர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலே தானைத் தலைவராக இருந்தார். பூசலாருக்கு

இறைவன் கனவிற் கூறினர் என்று பேசுகிறது பெரிய புராணம். ஆனல் வானெலி கேட்டான் என்று வரைந்து செல்கிறர் வரலாற்று ஆசிரியர். ஐயம் நிகழும் இடங்களுக்கெல்லாம் தேவாரத்தில் ஆதரவு காண்கிறர். அமண் சமயத்தினர் அப்பரடிகட்கு நஞ்சிட்டபோது அதனை நஞ்சு என்று உண்ண வில்லை. நாவுக்கரசர் திருவருள் என எண்ணினர். நஞ்சினை முறிக்கும் 'மந்திரம் நமச்சிவாயம்' என்று அறிந்திருந்தார் அப்பரடிகள்.

வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தலைவர், தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலயம் சென்னை. "திருஞானசம்பந்தர்" என்ற தலைப்பில் பேசியது:-

திருஞானசம்பந்தரே குருஞானசம்பந்தராக வந்தார் எனக் குமரகுருபர சுவாமிகள் கூறுகிறர். திருஞானசம்பந்தர் சிவ பெருமானுடைய மகன் என்று ஏன் கருதப்படுகிறர் என்றல் அவ்வளவு நெருங்கிய ஒற்றுமை இருக்கிறது. அருணகிரிநாதர், சேக்கிழார் முதலியோர் "திருமகனர்" என்று குறிப்பிடுகின்றர். என்றும் இளமையும், நிலைத்து நிற்கும் நிலைமையும் வேண்டுமானல் இறைவன்மேல் மக்கட்கு அசையாத நம்பிக்கை வேண்டும். அப்போதுதான் முருகு என்றும் அழைக்கக் காணலாம் அழகுக்கு முருகன், அதுபோல ஞானசம்பந்தர் அழகு மிக்கவர், உடல் நலம் மிக்கவர், முருகன் சூரபன்மா முதலிய அசுரர்களை அழித்தார். ஞானசம்பந்தர் சமண முனிவர் களைச் சாடினர். மனிதனைப் பணத்திற்காகவோ உருவத்திற் காகவோ பாராட்டுவதில்லை. ஆனல் அந்த மனிதனுடைய கருத்தை எண்ணத்தைப் பாராட்டுகிறேம். கடவுள் உருவங் கள் பல தத்துவங்களைக் காட்டுகிறது. அதற்காக அதனைப் பாராட்டுகிறேம். ஞானசம்பந்தர் அறநிலையில் வாழ்ந்த அந்தணராக இருந்தனர். திருவருள் ஆணையிருக்குமானல் சாதாரணமான மனிதனும் சிறந்த செயல்களைச் செய்வான். திருஞானசம்பந்தர் தம்மைத் தமிழ் ஞானசம்பந்தன் எனக் கூறிக்கொள்கிறர். வேதத்தின் சாரம் 'ஐந்தெழுத்து' என்று உணர்த்தியவர் ஞானசம்பந்தர். உவமையிலாக்கலை ஞானம் கற்றவர் திருஞானசம்பந்தர். பல அற்புதங்களைச் செய்தவர். தொண்டு மனப்பான்மையில் காலத்தைக் கழித்த அடிகள் ஞானசம்பந்தர்.

துறைசை ஆதீனவித்துவான், சித்தாந்தச் சொல்மணி குலசை திரு. வீரசிவசுப்பிரமணியம் அவர்கள் (மதுரை) பேசியது:-

ஆண்டவனுடைய திருப்பணிகள்தாம் அடியார்கள் பணி. அடியார்களுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பைச் சேக்கிழார் நன்கு பாசுரம் வழியாகப் பகர்கின்றார். ஞானசம்பந்தருக்குத் தாளமும் முத்துச் சிவிகையும் கொடுத்தார். இதிலிருந்து இவரது பெருமை தெரிகின்றது. அப்பரடிகளுக்கு ஏற்ட்ட்ட அவலநிலையை அவரது அருட்பாடலே, துன்பம் நீக்கி இன்பம்பெறவைத்தது. சுந்தரருடையபுராணத்தில்சிந்தனையைச் செலுத்தினால் ஆண்டவன் அடியார்களுக்காகத் திருவிளையாடல் செய்தார் என்பது தெரியவரும். அடியவருக்காக (மாணிக்கவாசகர்) ஆண்டவன் அடியும்பட்டார். பிட்டையுண்டு வேலையும்செய்தார். இதிலிருந்து அடியவரிடத்திலே எவ்வளவு பற்று இருந்தது என்பது இனிது புலப்படுகின்றது. 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்றார் குமரகுருபரர். யான் எனது, என்று அற்றவிடமே திருவடியாம் என்றார் அவரே. இவ்விதமாக அடியார்களின் பெருமையைப் பற்றி நன்கு எடுத்துரைத்தார்.

பண்டித வித்துவான். திரு. B. R. புருஷோத்தம நாயுடு அவர்கள் ஆராய்ச்சியாளர் பல்கலைக்கழகம், சென்னை 'சொன்னால்' என்ற தலைப்பில் பேசியது:-

புலவீர்காள்! வம்மின் உங்களிடத்தில் இல்லாத நல்ல விஷயத்தைச் சொன்னால், விரோதம். பாவத்தைச் செய்தவனைப் பார்த்து பாவம் செய்தாய் என்று வாயினால் சொன்னால் விரோதம் என்று சாத்திரம் சொல்லுகிறது. பால்குடிக்கக் கால் பிடிப்பார் போல பகவத்கீதை விஷயத்தைக் கேட்கக் கால்பிடிப்பார் இவருடைய செல்லாமை என்று சொல்லி ஆண்டவனின் பெருமையை எடுத்துரைத்தார். ஆழ்வாருடைய திருவுள்ளத்தைச் "சொன்னால் விரோதம்" என்றபாவால் சொன்னார். மானிடர்களைப் பாடவேண்டாம் புலவீர்! காரணம்? அது இந்த மண்ணில் அதிகநேரம் தங்காது. ஆண்டவனைப்பற்றி அருட்பாடல்களைச் சுரக்க வேண்டும் என்று பல சிறந்த கருத்துக்களை எடுத்துரைத்தார்.

சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மாணிக்க வாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'அப்பர் அருள் நெறி' என்னும்பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

அக்காலத்தில் அடியார்களனைவரும் தன்னலம்கருதி வாழவில்லை. உலகநிலையையே கருதி வாழ்ந்தார்கள். சிவனருளைக் கண்ணாகக்கொண்டு அவனருளைப் பின்பற்றினர் அப்பர். 'கனியிருக்கக் காய் கவர்ந்த தன்மைபோல், என்ற பழமொழியின் படி அப்பர்போன்ற அடியார்களது அருட்பாடலிருக்க மற்றவற்றைப் படித்து மயக்கமடையவேண்டாம். கல்லில்கட்டிக் கடலிலே தள்ளினார்கள். யானையைவிட்டு இடரச்செய்தார்கள். சுண்ணாம்புக் காளவாயிலே தள்ளினார்கள். இத்தகைய பல இன்னல்களைச் செய்த சமணர்களது செயல்களனைத்தும் சிறிதும் அப்பரடிகளைத் துன்புறுத்தவில்லை. காரணம் அவரது அருட்பாடலின் பெருமையே, என்று பல சிறந்த கருத்துக்களைச் சொல்லிமுடித்தார்கள்.


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

**ஆண்டுக் கையொப்பம்**

| | |
|---|---|
| உள்நாடு | ரூ. 1—8—0 |
| வெளிநாடு | ரூ. 2—0—0 |

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

611

தருமபுர ஆதீனம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம்

# திறப்பு விழா

திரு நெறிய தெய்வத் தமிழ் மன்றம் திறப்புவிழாவின்போது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை.

இன்று ஓர் சிறந்த நன்னுள். இங்கே நம்மிடையே ஓர் பெரியார் வந்திருக்கிருர். இவர் பேச்சளவில்மட்டும் பெரியாரா? செயலிலும் பெரியார். உண்மையான ஆத்திகத்தைத் திட மாக மக்களுக்கு அளிக்கும் பெரியார். மக்கள் நலனே உண்மையான தொண்டு என்று எண்ணுபவர். அழகான நவரத்தினங்களைப் போன்ற கருத்துக்களை அள்ளி வீசுவார். நாம் செவிமடுத்துப் பயனடைவோமாக. திருநெறிய தெய்வத் தமிழ்மன்றம் என்னும் பெயர் திருஞானசம்பந்தப் பெருமான் முதல் திருமுறையில் திருவாய் மலர்ந்துள்ள அருட் சொற் ருெடரைக்கொண்டு இதற்கு இடப்பெற்றது. இத்தெய்வ மன்றத்தை இப்பெரியார் அவர்களே திறக்கத் தகுதியும் திறமையும் பெற்றவர்கள். குருஞானசம்பந்தர் இப்பெரியாருக்கு என்றும் அருள்புரிய வேண்டுகிருேம். பாரத மக்களின் சார்பிலே இப்பெரியார் அவர்களை வரவேற்கிருேம். அவர் என்றென்றும் நிலைத்து நின்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் முன்னிற்பதாக.

பன்மொழிப்புலவர் வித்துவான் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரம் பிள்ளை M. A., B. L., M. O. L., அவர்கள் (தலைமைப் பேராசிரியர், அரசினர் மாநிலக் கல்லூரி, சென்னை) நிகழ்த்திய வரவேற்புரை:-

நமது ராஜாஜி அவர்களின் எண்ணம் உறுதியான-திண்மை யான எண்ணம் என்பது நன்ருகத் தெரிகிறது. சென்னையில் உள்ள சமயப்பிரசார நிலையத் திறப்புவிழாவின்போது முன் முகப்புக் கொட்டகையைக் கண்டு இது போன்ற ஒரு பெரிய மண்டபம் சென்னையில் நிலையாக இருக்கவேண்டுமென்று விழைந்தார். ஆனுல் அது இன்று மாயூரத்திற்கு அருகிலுள்ள தருமையில் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றமாக நிலையாக

512

ஏற்பட்டுள்ளது. பாரதநாட்டின் நல்வாழ்வுக்காகவே பிறந்தார் ஆச்சாரியார். அதற்கான தொண்டு செய்துவந்தார்; வருகிறார். சிறப்புப்பெற்றார், பெறுகிறார். ஆத்மீகச்செல்வர், ஞானச்செல்வராகப் பிறந்து பாரதநாட்டின் உன்னதநிலைக்குக் காரணஸ்தராக விளங்குகிறார். 13-ம் நூற்றாண்டில் வீழ்ந்த இந்திய சமுதாயத்தைச் சிறிது சிறிதாக முன்னிலைக்குக் கொண்டுவருவதற்குச் சில அறிஞர்கள தோன்றினார்கள். அந்த வரிசையில் நமது இராஜாஜி அவர்கள் 20-ம் நூற்றாண்டில் நுண்மாண் நுழை புலம் மிக்கவராகத் தோன்றியுள்ளார். அத்தகைய பெரியார் இத்தெய்வ மன்றத்தைத் திறப்பது மிகவும் பொருத்தமுடைத்து. அவர் நீடு வாழ இறைவனை இறைஞ்சுவோமாக.

பாரதரத்ன, திரு. சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 'திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தைத் திறந்து வைத்துப் பேசியது :

இத்தெய்வ மன்றத்தைத் திறப்பதற்கு எனக்குத் தகுதியில்லை. இருப்பினும் என்பாலுள்ள அன்பின்காரணமாகத்தான் என்னை அழைத்தார்கள். எனக்குப் படிக்கும் சக்தி குறைவு. வருடத்திற்கு 365 நாள் என்றால் 370க்கு மேற்பட்ட நூல்களை இவ்வாதீனத்தில் வெளியிடுவார்கள் போலிருக்கிறது. 'ஆனால்' அவை என்னால் படிக்கமுடியாமல் இருக்கின்றன. இந்த ஆதீனம் செய்யும் பணிகள் மிகப்பல.

மடம் என்றால் பொதுமக்கள் நலன் கருதும் இடம். மடம் என்றாலே பள்ளி என்றும் கூறுவதுண்டு; இங்கிருந்து எனக்கு அழைப்பு வந்தது. தகுதியில்லாதவனை அழைத்துவந்து ஆசனத்தில் அமர்த்தி, இவர்கூட இதில் வந்துகலந்து கொள்கிறார் என்று எல்லோரும் வியக்கும்படி செய்வது ஓர் முறைதான். அவ்வாறான முறையில்தான் இப்போது சிறப்புப் பெறுகிறேன். எனக்குத் தகுதியுண்டாக்கவே என்னை அழைத்தார்கள். இம்மன்றம் திருவருளாலே அமைக்கப் பெற்றிருக்கிறது என்று வரவேற்பில் குறித்திருந்தார்கள். ஆம். உண்மை திருவருளால் அமைக்கப் பெற்றதைத் திருவருளால் யான் திறந்தேன் என்று கொள்வதே பொருந்தும்.

தமிழிலே நான்கு வரிகளில் பொதிந்து கிடக்கும் கருத்துக்கள் ஆங்கிலக் காவியங்களில் 40, 50 பக்கங்களில்கூடக்

காணவில்லை. இம்மன்றத்தைச் சுருக்கமாகக் கூறுவது என்ருல் திருநெறிய மன்றம் என்று கூறலாம்; அதிலேயே தெய்வம், தமிழ் என்பவை அடங்கி விடுகின்றன. சுருக்கமாக இருந்தால் எல்லா மக்களும் உச்சரிப்பதற்கு எளிதாகஇருக்கும் என்பதற்காக அப்படிச் சொல்லுகிறேன். இம் மன்றம் பல அறிஞர்கள் பேசுவதற்கும் பல திரளான மக்கள் கேட்டுப்பயன் அடைவதற்கும் ஏற்ற இடமாக இருக்கவேண்டும். இம் மன்றத்தில் இடைவிடாமல் ஞானஉபதேசம் நடைபெற வேண்டும். பாடவும், பேசவும், எழுதவும் ஏற்ற பெரிய மன்றமாகத் திகழவேண்டும். சென்னையிலே சினிமாக்கட்டிடங்கள் தோன்றுகின்றன. இதைப்போன்ற மன்றம் அங்கே இருந்தால் ஞானம் வளரும். ஆனல் நல்ல ஸ்தலத்திலே மாயூரத்தில் ஏற்பட்டது மிகவும் சிறந்ததே. உலகமெல்லாம் மாயை என்கிறேம். அதில் இதுவும் (மாயபுரமும்) ஒரு மாயாதோற்றம். இந்த நினைப்பு நமக்கு வேண்டும். ஞானம் என்ருல்பக்திதான். பூவைப்போன்றது படிப்பு. அதில் விளையும் பழம் போன்றது ஞானமாகிய பக்தி. பக்திக்கு இரண்டு சமயங்கள் நம் நாட்டில் இருக்கின்றன. ஒன்று சைவம், மற்றென்று வைணவம். இவை வாசலுக்கு இரு கம்பங்கள் போல உள்ளன. தாகத்துக்குத் தண்ணீர் கொடுப்பது குளம், கிணறு முதலியன. அவை தூர்ந்துதான் போகும். இருந்தாலும் தூர்ந்துபோகாமல் சுத்தம் செய்து காப்பாற்றுகிறேம். குளம் செவ்வையாக இருந்தால்தான் குடத்தில் நீர் கொண்டுவரலாம். இங்ஙனமிருக்கக் குடம் இருந்தால் போதும் குளம் வேண்டாம் என்று கூறுவது பொருந்துமா ? தண்ணீர் கொதிக்கவேண்டுமானல் அடுப்பில் நெருப்பு இருக்கவேண்டும். நீரும் வெப்பமும் ஒன்று சேர்ந்தால்தான் வெந்நீர் கிடைக்கும்; உலை கொதிக்கும்; சோறு சமைக்கலாம். நீரையும் நெருப்பையும் ஒன்று சேர்க்கவேண்டியதுதான் தேவை யென்று கூறிக்கொண்டு தண்ணீரை அடுப்பில் ஊற்றினல் வேண்டியது நிறைவேறிவிடுமா ? குளங்களையும் அடுப்பையும் போலத்தான் கோயில்களும் மடங்களும். நாம் உலக தாபத்தால் வருந்துகிறேம். தாபம் தணியவும், நமக்கு நல் உணர்வுமிகுந்து பக்குவப் படவும் கோவில்களும் மடங்களும் இன்றியமையாதன; அவை இல்லாமல் நாம் வாழ்ந்து விடலாம் என்று கூறமுடியாது. ஆதலால் அவைகளைக் காப்பது மிகமிக அவசியம்.

பலரும் ஆலயங்களுக்கு வருகின்றனர். அவர்களில் சிலர் நன்கு காய்ந்த விறகைப் போன்றவர்கள். நன்கு காய்ந்த விறகுகள் நெருப்புப்பற்றி எரியும்போது ஈரவிறகு கூட எரியத் தொடங்குகிறது. அதோடு, குப்பை, தூசி முதலியனவும் எரிகின்றன. எனவே, பக்தியாகிய நெருப்பு மிகஅவசியமானது.

மலையிலே, மரத்தடியிலே, வெட்டவெளியிலே சிலர் பிரார்த்தனை செய்கிறார்கள். அப்படியிருக்க, சிலர், விக்கிரக ஆராதனை எதற்கு என்று கேட்கிறார்கள். இது பகுத்தறிவுக் காலமாதலால் எதையும் தீர்மானிக்கமுடியாமல் தவிக்கிறோம். பகுத்தறிவுக்கும் அளவுண்டு. எல்லாச் சமயத்தவர்களும் கடவுள் எங்குமிருக்கிறார் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். அங்ஙனமெனில், மனத்திலேயே வழிபாடு செய்து கொள்ள லாமே! கம்பம், கல், இவையெல்லாம் வழிபாட்டிற்கு அவசியமா என்று கேட்கிறார்கள். உண்மை எது, பொய் எது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் கீழ் நிலைக்கு மக்கள் போய் விடுவார்கள், மூடர்களாக ஆகிவிடுவார்கள் என்று எண்ணித் தான் பெரிய பெரிய உருவங்களையும் விக்கிரகங்களையும் செய்து வைத்து, கோயில்களையும் கட்டிவைத்துள்ளார்கள் நமது முன்னோர்கள். கடவுள் எங்குமுள்ளார் என்பது உண்மை. ஆகவே, கோயிலில் ஏன் ஆண்டவன் இருக்கமாட்டார்? விக்கிரகம் ஏன் கடவுளுக்கு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனம் குவிய விக்கிரகம் தேவை. இக்காலத்துப் பெரிய விஞ்ஞானிகளும் பௌதிகத்தைப்பற்றி எழுதும் போது கடைசியில் கடவுள் உண்டு என்ற முடிவிற்கு வருகிறார்கள். என்றாலும்நம் நாட்டிலும் அயல்நாடுகளிலும் இன்றும் கடவுள் உண்மையைப்பற்றிச் சந்தேகித்துப் பேசுகிறவர்கள் இல்லாமல் இல்லை.

'கடவுள் இல்லை, இருந்தாலும் கல்லைக் கடவுளாக வழிபடு வதுஏன்' என்றெல்லாம் பிதற்றுகிறார்கள். கடவுள் எங்கும் இருக் கிறான் என்றால் தூணிலும் துரும்பிலும் இருப்பானா என்று இரணியன் சிரித்தான்; இல்லையென்றும் கூறினான். கடவுள் தூணிலிருந்து தோன்றினார். தூண் அழிந்தது; சந்தேகம் ஒழிந் தது; அவனும் ஒழிந்தான்; நாஸ்திகமும் அழிந்தது. ஆனால் நாம் உருவத்தில் கடவுள் இருக்கிறாரா? கோவிலில் கடவுள் உண்டா? மடங்களில் தெய்விகம் இருக்கிறதா என்று கேள்வி களை கேட்டுக்கொண்டு அவற்றையும் அழித்து நாமும் அழிந்து விடக்கூடாது. கடவுள் உணர்ச்சியும் பெறவேண்டும்; பெற்றதை அனுபவித்துப் பயன் அடைய நாமும் இருக்க வேண்டும். அதற்கு ஏற்றவழி தூணை உதைத்துத்தள்ளாமல் அத்தூணில் எங்கும் உள்ள இறைவனை வழிபடுவதுதான். இதில் ஆட்சேபம் தேவையில்லை. வழிபடுவதற்கு நல்ல உருவ மும் செய்யலாம். அல்லது ஒருபிடி மண்ணை எடுத்துக் கோண


லாக உருவம் செய்தும் பூசை செய்யலாம். பூசை செய்து முடிந்ததும் எறிந்தும்விடுகிறோம்.

பாழும் மனத்திலே கடவுளை உருவமற்ற நிலையிலே நிறுத்துவது எளிதல்ல. மன ஒருமைப்பாடு ஏற்படுவதில்லை. கடவுளை நினைக்கும்போதுதான் கால்செருப்பு ரிப்பேர் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். மனஒருமைப்பாட்டிற்காக உருவ வழிபாடு செய்கிறோம். அவ்வாறு வழிபடுவது தவறு என்று சொன்னால் நம்பாதீர்கள். செடிக்குத் தண்ணீர் ஊற்றவேண்டியது எவ்வளவு அவசியமோ அதேபோன்று கடவுளிடத்தில் பக்தி செலுத்துவதும் மிக அவசியமான கடமையாகும். புதுயுகம் இது. விஞ்ஞானம் வளர்கிறது. விஞ்ஞானங் கண்ட உண்மைகளிலிருந்து கடவுளைக்கண்டு கூறுகிறார்கள். பெரிய விஞ்ஞானிகள்கூட இவ்வகையில் கடவுளைக்கண்டு வழிபடலாம். மற்றவர்கட்கும் காட்டலாம். சமயத்தைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் சில காலத்திற்கு முன்பு நான் பேசினால் அது ஆஷாடபூதித்தனம் என்பார்கள்; ஆனால் நான் மிகவும் தைரியமாகக் கூறுவதாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடவுளைப் பற்றித் தைரியமாகப் பேசுகிறேன் என்பது எப்படியிருக்கிறது? ஒருவன்தைரியமாகச் சாப்பிடுகிறான் என்று சொல்வதுபோல் இல்லையா? ஒருவன் எவ்வளவு தைரியமாக வாழைப்பழத்தைச் சாப்பிடுகிறான் பார் என்பது போல இருக்கிறது.

ஆகவே பக்திக்குத் தைரியம் வேண்டுவதில்லை. பக்தியைப்பற்றியும் சமயத்தைப்பற்றியும் பேச வேண்டுமானால் தைரியம் வேண்டும் என்ற நிலை இன்று வந்துவிட்டது. இது வருந்தத்தக்க நிலையே! இதற்குத் தைரியம் வேண்டுவதில்லை. அறிவு இருந்தால்போதும். அரசியலும் சமயமும் ஒன்றுதான். எல்லாவற்றிலும் அறம் உண்டு. எல்லாவற்றிற்கும் தருமம், ஞானம், பக்தி இவை இன்றியமையாதனவே.

சென்னை வாசிகள் நல்லவர்கள் - பக்தியுடையவர்கள். அவர்களைப் பார்த்தால் அப்படித்தோன்றாமல் இருக்கலாம். ஆனால் நல்ல உள்ளம் படைத்தவர்கள். அவர்களுக்குப் பயன்படுத்துவதற்கு சென்னையில் ஒரு மண்டபம் தேவைதான், இப்படிப்பட்ட மண்டபம் கட்டச் சென்னையில் யாரும் முன்வருவதில்லை. சினிமாக் கட்டிடம் வேண்டும் என்றால் கட்டுவார்கள். ஆனால் இம்மண்டபத்தை விடப் பெரிய மண்டபமாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நினைத்தால் அங்குக் கட்டலாம். இம் மண்டபத்தில் பல அறிஞர் பெருமக்களை வரவழைத்து நல்ல செய்திகளைக் கூறச்செய்து மக்களை நல்ல நிலைக்குக் கொண்டுவருமாறு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தருமபுர ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றம் திறப்புவிழா 4—6—55



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், பிர்மஸ்ரீ இராஜாஜி அவர்களும். வந்திருந்த பிரமுகர்களும்.

518

பாரதரத்ன

## சி. இராஜகோபாலாசாரியார் தருமை வருகை

தருமை யாதீனத்தில் தருமபுரத்தில் அமைந்துள்ள திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தைத் திறந்து வைப்பதற்காக பிரும்மஸ்ரீ பாரதரத்ன சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 4 - 6 - 55 சனிக்கிழமை விடியற்காலம் தருமபுரம் சேர்ந்தார்கள். திறப்புவிழா நிகழ்வதற்கு முன்பு, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தார்கள். திருமடங்கள் எதற்குமே இதற்குமுன் தாம் சென்றதில்லை யென்று சொன்னவர்கள் திருமடத்தின் சம்பிரதாயங்களைக்கொஞ்சமும் பிசகாமல் தெரிந்திருந்தது வியப்பாக இருந்தது. மகாசந்நிதானம் அவர்கள் வீற்றிருக்கும் பண்டாரக்கட்டில் நுழையும்போதே மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டதைக் கண்டதும் கூட வந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். திருமடங்களைப் பொது மக்கள் எப்படிப் போற்றி அவற்ருல் கிடைத்தற்கரிய பயனை யடையவேண்டும் என்பதைப் பாரதரத்னம் அவர்கள் தாமே முன்மாதிரியாக இருந்து நடந்து காட்டினூர்கள். மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்த இடத்திற்குச் சற்று தொலைவில் செல்லும்போதே நமஸ்காரம் செய்துகொண்டு, பின்பு அருகே சென்று அமர்ந்தார்கள்.

குருமகாசந்நிதானம் அவர்களோடு அளவளாவியபோது அங்கு இருந்த இராமநாத சுவாமிகள் திருவுருவப்படத்தைக் கண்ணுற்ருர்கள். திருமால் லிங்கத்திற்கு பால் அபிஷேகம் செய்வதுபோல அமைந்தது இப்படம். பார்வதியே திருமால் என்ற கொள்கையின்படி சிவபெருமானை இராமருக்கு நாதர் என்பது பொருத்தமாகத் தோன்றுகிறதே என்ருர்கள். பிறகு கேதாரயாத்திரை அனுபவம் குறித்துப் பேசப்பட்டது. இலக்கிய நயங்களைச் சுவைத்து ரசிக்க ரசிகமணி இல்லாததுபற்றியும் பேச்சு நடந்தது. தாங்கள் இங்கு மடத்திற்கு வந்தது குறித்து அளவிலா மகிழ்ச்சி. அரசியல் வாதிகளிலே தாங்கள் தைரியமாகக் கடவுள் உண்டு, தெய்வநம்பிக்கை நமக்கு வேண்டும் என்று பேசி வந்ததைப் பாராட்டிப் பெருமையடைகிருேம் நாங்கள் என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் சொன்னதும் சிரித்துக்கொண்டே "இவ்வளவு வக்கணையாக எனக்குப் பேச வராதே" என்ருர்கள் பாரதரத்னமவர்கள். "இதைவிட வக்கணை எங்கிருந்து வரமுடியும்" என்ருர்கள். இவ்விதமாக பேச்சு நடந்தது. கூடவே கல்கி ஆசிரியர் திரு. சோமு அவர்களும் வந்திருந்து பேச்சில் கலந்து கொண்டார்கள்.

---

# வாழ்த்துச் செய்திகள்

**திருவாவடுதுறை ஆதீனம் ;**

ஞானசம்பந்தப் பெருமானது அருட்பால் வழியுந் திருவாயிலிருந்து உண்டான முதற் பதிகத்தின் திருக்கடைக் காப்பில் வந்த தொடர்மொழி திருநெறி. திரு ஞானம் என்பதைப் "போகமுந் திருவும் புணர்ப்பானை" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு தெளிவிக்கும். ஆகவே, திருநெறி - ஞானநெறி. ஞான நெறியே தெய்வ நெறி. ஆதலால் ஞானம் 'கற்குஞ் சரக்கன்று' என்பது திருவருட்பயன். ஞானம் அடியார் நேசத்தால், ஆசாரிய உபதேசத்தால், தேங்காயில் நீர் நிறைந்தாற்போல பக்குவான்மாக்களினிடம் வெளிப்படுகின்றது. இவ்வண்ணம் வெளிப்பட ஞானக் கண்ணோடு கூடிய ஒரு மன்றம் தேவைதான். அதனைச் சொக்கலிங்கப் பெருமான் திருவருள் தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் அவர்களைக் கொண்டு உருவாக்கியிருக்கிறது.

இதனைத் திறந்துவைக்கும் பெரும்பேறு, தமிழ்நாட்டின் நல்லமைச்சாக - ஞானவிதையை யூன்றி, தெய்வநெறிப்பயிரை வளர்த்த பாரதரத்னம் நமது ராஜாஜி அவர்களைச்சார்ந்திருக்கிறது.

இவ்வண்ணம் பல நற்காரியங்களைச் செய்துவரும் 25வது மகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சி நீடு ஓங்கவும் இம் மன்றம் மக்களுக்குப் பயன்தந்து நெடிய விளங்கவும் எமது ஞானகுருநாதராகிய நமச்சிவாயமூர்த்திகள் திருவருள் சுரப்பாராக.

**ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள் :**

May Siva Bless Opening Function of Tiruneriya Deiva Tamil Manram by Philosopher Statesman Sri Rajagopalachariar. All hail to Gurugnanasambandar, Jai Siva.

**Sir Sri C. P. Ramaswami Iyer, Ootacamund :**

I am in receipt of your invitation to the Opening of the Mantapam "Tiruneria Dheiva Tamil Mandram" on the 4th June 1955 and wish the function all success.

520

Sri K. Venkataswami Naidu, Madras :

We are very happy to hear that Your Holiness has completed pilgrimage to Kedarnath and other religious places in the North. I have seen a photo of Swamiji with other Bhakthas. I am confident that this pilgrimage had great spiritual benefit to the people. May the great Lord be pleased to help His Holiness in all his great services to our religion.

I am also happy to receive invitation for the opening of the Mantapam in the Adhinam Matalayam by our revered leader Sri Rajaji. I wish the function all success.

சர்தார் ஸ்ரீ அ. வேதரத்னம் பிள்ளை அவர்கள்,
வேதாரண்யம்.

*  *  *

விழா பாரதரத்ன உயர்திரு. சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியார் அவர்கள் முன்னிலையில் இனிது நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

Hon'ble Sri T. L. Venkatarama Iyer,
Judge, Supreme Court, New Delhi :

*  *  *

It has been a matter of pleasure to me that our Matadhipathis are taking an active interest in the propagation of our religion. This country is justly adjudged for its religious and spiritual wealth and having had occasion to preside over a conference in 1952, I know how much Dharmapuram Adhinam has been doing for the cause of religion. It is in the fitness of things that the Mantapam should be opened by our revered coutry man, Bharata Ratna Sri C. Rajagopalachariyar. I wish the function all sucess.

**ராஜா சர் M. A. முத்தையா செட்டியார், செட்டிநாடு.**

4—6—54 நடைபெறவிருக்கும் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம் கட்டிடத் திறப்புவிழா அழைப்பு அன்புடன் தாங்கள் அனுப்பியிருப்பதற்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கும் தங்களுக்கும் எனது நன்றி. திறப்புவிழாவும் நமது மதிப்பிற்குரிய தலைவர் ஸ்ரீ ராஜாஜி அவர்களின் தலைமையின்கீழ் சிறப்பாக நடைபெற வேணுமாயும் பிரார்த்திக்கிறேன்.

**R. கந்தசாமி மூப்பனர், B.A., B.L., கும்பகோணம்.**

x x x x

மாக்களின் நிலைமையை மாற்றி மக்களாக நிலைபெற்று வாழ - செவியுணவு அளிப்பான் பரமகுருமூர்த்தியாக விளங்கும் எங்கள் தலைவர் மகாசந்நிதானம் அவர்கள் மக்களுக்கு அறிவைப் புகட்ட தாமே உபதேசங்கள் செய்தும், தம் சீடர்களைக்கொண்டு அறிவுறுத்தியும், புத்தகசாலை நிறுவியும் - புத்தகங்களை அச்சியற்றி - இலவசமாக வழங்கியும் பிரசாரப் பேரூர்தியின் உதவியால் இடந்தோறும் சென்று ஆங்காங்கே சொற்பொழிவாற்றியும், பல்வேறு வகையில் மக்களிடம் நல்லறிவு நல்லொழுக்கங்களைப் பரப்பிவைத்துப் பேருதவிசெய்து வரும் அரிய சீரிய பணிகளுக்கு உபகரணமாக சென்னையம்பதியில் ஒரு அழகிய கட்டிடம் பெருந்தொகை கொண்டு வாங்கி தேட்டிலே சிறந்த சென்னைமக்களுக்கு அருட் செல்வத்தை கூட்டி வைத்தும் நம் நாட்டில் தாம் தங்கியிருக்கும் ஆலயத்தின் முன்பாக அமைத்திருக்கும் திருமண்டபத்தை "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று ஆன்றோர் கூறியதைத் தம்முடைய குறிக்கோளாகக் கொண்டு இன்னும் உதவ இன்றளவும் தொண்டராகவும், அரசராகவும், அமைச்சராகவும், பலவேறு நிலைமையிலும் நாட்டிலும் காட்டிலும் சத்கருமம் செய்து என்றும் இனிமையுடன் விளங்கிவரும் சக்கரவர்த்தி (C. R.) அவர்களின் திருக்கரத்தால் திறந்துவைக்க அருளியது, குருமகாசந்நிதானத்தின் ஒப்பற்ற உயர் நோக்கத்தைக் காட்டுகிறது.

522

உலகத்தை நிலை நிறுத்தவே தம்முடைய தொழிலாகக் கொண்டுள்ள விஷ்ணுமதத்தில் தோன்றியுள்ள ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களால் திறந்துவைக்கப்படும் மணிமண்டபம் சகலகலாவல்லியின் கலாமண்டபமாக நிலைபெற்று மக்களுக்குச் சகல கலைகளையும் புகட்டி உய்விக்குமாக.

வாழ்க தருமபுர ஆதினம்.
வாழ்க குருமகாசந்நிதானம்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலயம், அடையாறு, சென்னை

ஸ்ரீ V. ரெத்னம் B. A., B. L.
**District Magistrate (Sub) Vellore**

இசையரசு. **M. M.** தண்டபாணி தேசிகர்

ஸ்ரீ **M. P.** சீனிவாச அய்யங்கார்
உதவி ஆசிரியர் சுதேசமித்திரன்

ஸ்ரீ **S.** ஆரோக்யசாமி பிள்ளை
கும்பகோணம்

ஸ்ரீ ம. க. சுந்தரேசபட்டர் மதுரை

**All India Radio Madras.**

ஸ்ரீ வரதாச்சாரியார்
மாயூரம் நகரசபைத் தலைவர்,

ஸ்ரீ ஹரிகிருஷ்ணநயினர்
மாயூரம் நகரசபை உறுப்பினர்.

ஸ்ரீ சுப்ரமணியஅய்யர்
சென்னை

வித்வான், வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சென்னை

ஸ்ரீ **P.** சுப்பராயன்
மற்றும் பல அன்பர்கள்

523

# வருங்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துசோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மதஹூ ஆனிமீ 1-உ முதல் 32-உ முடிய)

15—6—55 முதல் 16—7—55 முடிய)

**1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை ¼.**

அசுவதி நக்ஷத்திரம் முதல் இரண்டு பாதங்களும் சுபசோபனுதிகளையும் மகோத்சவ சந்தோஷத்தையும் தரும். 3, 4 பாதங்கள் கவலையைக் கொடுக்கும். பரணி 1, 2 பாதங்கள் சுகபோகங்களையும் தனதான்ய லாபத்தையும் தரும். பரணி 3, 4 பாதங்களும் கிருத்திகை முதல் பாதமும் மிகுதியான வியாதி பயம், அபவாதம், சத்துருஉபாதை ரண சிகிச்சை இவைகளைத் தரும். புதன் அசுபபலனும், வெள்ளி சனி சுபபலனும் தரும்.

**2. விருஷபம்: கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½.**

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் வித்யாபிவிருத்தியையும் உத்தியோகத்தில் இடம் மாறி லாபகரத்தையும் மேல் பதவியையும் தரும். ரோகிணி நான்கு பாதங்களும் வியாதி சாந்தியாகி, ஆரோக்கியத்தையும் தொழில் விருத்தியையும் நஷ்டதன பிராப்தியையும் தரும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் மகா கஷ்டபலனைத் தந்து தீராத வியாதியைத்தரும். தெய்வ பலமிருந்தால் நீங்கும். வியாழன் அசுபமும் வெள்ளி சனி சுபமாகவும் இருக்கும்

**3. மிதுனம்: மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.**

மிதுனராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் அதிகக் கவலையையும் அதிக உழைப்பையும் தந்து, சதா கிலேசமடையச் செய்யும். மாதக் கடைசி பத்து தினங்களில் கொஞ்சம் சுபமேற்படும். பந்து மித்திராளுடைய சேர்க்கை. சுபசோபனுதிகள் மூலம் சந்தோஷம் உத்தியோக லாபம் இவைகள் ஏற்படும், குருவாரம் சுபமும் சனி ஆதிவாரம் அசுபமும் ஆகும்.

**4. கடகம்: புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்.**

கடகராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் கவலைகளை கொடுத்து ராஜாங்க மூலமாய் பூரண வெற்றியைத்தரும். எங்கும் கீர்த்தியும் சுபமும்

524

உண்டாகும். பூசம் 4 பாதங்களும் மாதக்கடைசியில் மகத்தான துக்க பலனை அனுபவிக்கச் செய்யும். புதன் வியாழன் அசுபமாகும். சனி செவ்வாய் நலன் தரும்.

5. சிம்மம்: மகம், பூரம், உத்திரம் ¼.

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக லாபத்தையும் அளவுகடந்த சந்தோஷத்தையும் கீர்த்தியையும் பெரியோர்கள் அன்பையும் தரும். பூரம் நான்கு பாதமும் உத்திரம் முதல்பாதமும் அதிக செலவினங்களைத் தந்து திணறவைக்கும். எந்தக்காரியமும் விக்னமடைந்து பணச்செலவால் பிறகு ஜயிக்கும். சதா குழப்பமாகவே இருக்கும். சனி செவ்வாய் சுபம் தரும்.

6. கன்னி: உத்திரம் ¾. ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2, 3, 4 மூன்று பாதங்களும் சித்திரை 1, 2 பாதங்களும் சுப சந்தோஷங்களையும் இல்லற சுகத்தையும் பெரியோர் அன்பினால் வெகுநாளாக எதிர்பார்த்து நடவாத காரியம் ஜயித்து சந்தோஷமடையச் செய்யும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் சம்பூரண தெய்வீக உணர்ச்சியை விருத்திசெய்து, இகபர சாதனங்களான காரியங்களிலும் லௌகிக விவகாரங்களிலும் கீர்த்தியையும் வெற்றியையும் தரும். எங்கும் நிறைந்த செல்வாக்கையும் பிரசித்தத்தையும் தரும். லோக பூஜ்யத்துவம் ஏற்படும். வெள்ளி சனி சுபவாரமாகும்.

7. துலாம்: சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

துலாராசி சம்மந்தப்பட்ட சித்திரை 3, 4 பாதங்களும், சுவாதி நான்கு பாதங்களும் வெற்றியைத்தரும். தெய்வபலம் கிட்டும். ராஜாங்க மைத்திரமும் அனுகூலமும் ஏற்படும். பந்தம் விடும். கீர்த்தி தரும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் பதவியைக் குலைக்கும். தொழில் நஷ்டம் உண்டு பண்ணும். புதனும் சனியும் சுபமாகும்.

8. விருச்சிகம்: விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விருச்சிகம் சம்மந்தப்பட்ட அனுஷம் நான்கு பாதங்களும், கேட்டை நான்கு பாதங்களும், மேன்மையைத் தரும். தொழில் ஓங்கும் உத்தியோகத்தில் இடம்மாறல் சந்தோஷமாய்க் கிடைக்கும். இல்லறசுகம் கிட்டும் வியாதி சாந்தியாகும். நஷ்டமான பொருள் வரும். விசாகம் 4-ம் பாதம் துன்பக்கடலில் ஆழ்த்தி துக்கத்தைத்தரும் தெய்வ உபாசனையால்மாறலாம். திங்கள் வியாழன் சுபமாகும்.

9. தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் ¼.

தனுர்ராசி 9 பாதங்களும் உழைப்பின் பேரில் தெய்வபலம் தோன்றி சுப சந்தோஷத்தைத் தரும். வியவசாயிகள், தொழிலாளிகள் சந்தோஷ மடைவார்கள். ஏழை மக்கள் ஆனந்தமடைவார்கள். பிரபுக்களுக்குக் கவலை காட்டும். தெய்வபல நம்பிக்கை உள்ளவர்கள் சந்தோஷமடைவார் கள். புதன் சனி சுபவாரமாகும்.

10. மகம்: உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

மகர ராசி 9 பாதங்களும் ரொம்ப சந்தோஷத்தை அனுபவிக்கச் செய்யும். உத்தியோகஸ்தர்கள் பிரமோஷன் அடைவார்கள். தொழி லாளிகள் தாரித்திரியமில்லாமல் சந்தோஷப் படுவார்கள், வியாபாரிகள் லாபமடைவார்கள். வியவசாயிகள் உத்சாஹத்தோடிருப்பார்கள். நடுத் தர வகுப்பார் நலன் அடைவார்கள். மகரராசி பலன் பூரா சுபமாகும் சனி செவ்வாய் சுபவாரமாகும்.

11. கும்பம்: அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டம் 3, 4 பாதங்களும் பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் அனுப விக்காத சுக போகங்களை அனுபவிக்கும்படி செய்யும். சதயம் நான்கு பாதங்களும் அதிகச் செலவையும் அபஜயத்தையும் உண்டுபண்ணும். சதா மனம் கிலேசமடையும். திங்கள் செவ்வாய் சுபவாரமாகும்.

12. மீனம்: பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் செலவினத்தோடு சந்தோஷமாய் ஓடும் அதில் ரேவதி 4 பாதம் மட்டும் சிரமத்தைத் தரும். மற்ற பாத சம்மந்தப்பட்ட மீனராசி பலன் ஜயத்தையும் லாபத்தையும் சந்தோஷத்தையும் தினேதினே விருத்தி பண்ணும். உலகில் கீர்த்தி ஏற்படும். தெய்வபலம் முன்னின்று காக்கும். உத்தியோகஸ்தர்களாகில் அந்நிய தேச யாத்திரை செய்வார்கள். தூரப்பிரயாணம் கிட்டும். சுபம் தரும். வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

குறிப்பு:- உலகில் தனதான்ய விருத்தியாக வசதிகள் ஏற்படும். எங்கும் ஷை மாதம் சுபிக்ஷமாகும் துவீபாந்தரத்தில் அமைதி இல்லாமல் இருக்கும். பரதநாட்டில் மிலேச்சதேசம் ஈதி பாதைகளால் பாதிக்கப்பட்டு நஷ்டமடையும். சுபம்.

உ

குருபாதம்

# திருக்கேதார யாத்திரை

## உத்தரகண்டம்

### மனிதமனம் :

உறுமிக்கொண்டு ஓடிவரும் காட்டாறுகள், வேகமாகப் பாய்ந்து வரும் மலையருவிகள். மலை உச்சியிலிருந்து குதித்துப் பொங்கி விழும் நீர்வீழ்ச்சிகள், விண்ணை அளாவிற்கும் பனிமலைச் சிகரங்கள், மலை யடுக்குகள், கடக்க முடியாதே என்று கருத்தில் கவலையை உண்டாக்கும் கணவாய்கள், கொடியவெப்பம், கடுங்குளிர், கோரக்காற்று, பெருமழை, பனி, இவை இயற்கை அன்னையின் கோரதாண்டவம் என்று மனித மனம் இம்மாபெரும் காட்சிகளைக் கண்டு மலைக்கிறது ! அஞ்சுகிறது ! ஆனால் இவற்றை வெற்றிகொண்டு வாகைசூடி விடுகிறார்கள் ஞானிகள் தம்முடைய செயல்திறத்தால். செயற்கரிய அச்செயல் செய்து அழியாப் பேறு அடைந்துவிடுகிறார்கள். அவ்வாறு எழுந்துநிற்கும் இயற்கையைக் கண்டு இதயங் கலங்குவதால் என்ன உண்டாகிறது ? அச்சமே விளைகிறது. ஆனால் அரும் பெரும் மாணிக்கங்கள், மனித வாழ்விலே கிடைத்தற்கரிய கருவூலங்கள் பெறமுடியாமற் போய்விடுகின்றன. முழுச் செயல் திறத்தோடு அயராது உழைத்து, அவற்றை வெற்றி கொண்டு அரும்பயனை அடையும் அவர்களைத்தான் உண்மையில் "பெரியர்" என்று சொல்லவேண்டும்; ஆம்; அப்படித்தான் கூறுவார் வள்ளுவரும்.

### அழைப்பு :

செயற்கரிய செயல் செய்தவர்கள் பெரியவர்கள். இயற்கையை இயற்கையாகக் காணமல் - புறக் காட்சிகளில் சிற்றின்பக் காட்சிகளை மட்டும் காணமல், பேரின்பத்தை - கடவுட் காட்சியைக் கண்டார்கள்; கண்டு அநுபவித்தார்கள். கருணையும் சுரந்தது. தாம் கண்டதை - தாம் அநுபவித்ததை மற்றவரும் காணவேண்டுமே, அநுபவிக்கவேண்டுமே என்பதுதான் அக்கருணை. "வாருங்கள் ! வந்து முந்துமினே !" என் கிறார்கள். "மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே";

என்று அழைக்கிறார்கள். அங்கே பரம்பொருளின் பேரருள் திறத்தினை, காட்சியினை, வற்றாத ஊற்றாக ஊறிவருவதைக் கண்டார்கள். அந்தக் காலத்தில் மட்டும் அல்ல, இப்பொழுதும் காண்கிறார்கள், நம்மை அழைக்கிறார்கள்.

ஒரு பெரியவர் (Goethe) 'முயற்சி இல்லாத - ஊக்கம் இல்லாத உணர்வுடையவர்கள் இயற்கையை - கடவுளுடைய படைப்பை ஒரு கோரக் காட்சியாக, மலைப்பூட்டும் பண்புடையதாகக் காண்பார்கள்; ஆனால் உறுதியும் ஊக்கமும் செயல்திறனும் உடையவர்களுக்குத் தன்னிடமுள்ள மறை பொருள்களான உண்மைகளையும், அதனால் உண்டாகின்ற இன்னலங்களையும் காட்டுகின்றது அந்த இயற்கை' என்கிறார்.

இத்தகைய இன்ப நலங்களை அநுபவிக்கும், அநுபவிக்க அழைக்கும் அப்பெரியார்கள் உத்தரகண்டத்திலே இன்றைக்கும் வாழ்கின்றார்கள். உத்தரகண்டம் என்பது இமயப் பகுதியை. இந்தியப் பெருநாட்டின் வடக்கு எல்லையை. நமது நாட்டின் கலாசாரப் பண்பாட்டின் பழைய மலை வரம்பைத்தான் அப்படிச் சொல்லுகிறோம். உலகிலேயே உயர்ந்த சிகரங்களை உடைய அந்தப் பெருமலை நம்முடையது என்ற பெருமை நமக்கிருக்கிறது.

"மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநிலம்மீது இதுபோற் பிறிதிலையே"

என்றார் பாரதியாரும். சங்க இலக்கியங்களும் இமயமலையையும், இமய மலையில் வாழ்கின்ற தாபதர்களின் தவமேன்மையையும்பற்றி அழகிய தமிழ்ப் பாக்களால் ஆங்காங்குப் பாடுகின்றன. இமயத்திலுள்ள ஒரு தெய்விகத் தன்மையையும் சங்ககாலத்தமிழர்கள் கண்டார்கள். அங்குள்ள கல்லுக்கும் தெய்விகம் இருப்பதை உணர்ந்தார்கள். கல்லெடுத்து வந்தார்கள் தெய்வச் சிலை செய்ய. அதற்காகப் பெரும் பாடும் பட்டார்கள். மன்னர்களை எதிர்த்துப் போரிடவும் செய்தார்கள். இது வரலாறு.

"வெள்ளிப்பனி மலையின் மீதுலாவு வோம்"

என்று பாரதியாரும் நம்மை அழைக்கிறார். உலாவுதல் என்பது வெறும் வேடிக்கையான புறக் காட்சி அளவிலே நிறுத்துவதற்கல்ல. 'ஞானரத'த்தைச் செலுத்திய பெரியார் அவர்! இது இப்பொழுது. நமது சமயாசாரியர்களும் இமயம் சார்ந்தார்கள், கயிலை சார்ந்தார்கள். அவர்களுக்கு அழைப்பும் வந்தது. அங்கே மூலப்பொருளைக் கண்டார்கள். 'சேர வாரும் செகத்திரே' என்ற அழைப்பு இன்னும் அங்கே காத்திருக்கிறது. இது புனைந்துரையல்ல, கண்டு அநுபவித்த உண்மை.

## இமயம் :

இமயம் இறைவனின் இன்பப் படைப்பு. ஆம் ! காணுமிடமெல்லாம் கருத்தைப் பறிகொடுக்கும் நிலையில் இருக்கின்றன. மனித மனத்தை ஆட்கொள்ளும் மாயவித்தையை இமயம் செய்கின்றது. அடர்ந்தோங்கிய காடுகளைக் காணலாம். நீரூற்றுகளைக் காணலாம். ஓடிவரும் காட்டாறுகளைக் காணலாம். நெடிது வளர்ந்து நிற்கும் பனிச் சிகரங்களைப் பார்க்கலாம். பனி மேகங்கள் கவ்விக்கொள்ளும் காட்சியையும் காணலாம். அம்மட்டுமோ ? பூத்து நிற்கும் பூஞ்சோலைகள், பல வண்ணங்களில் அமைந்துகிடக்கும் கற்கள், அப்பப்பா ! சிந்தையைக் கொள்ளைகொள்ளும் இயற்கை அன்னையின் அற்புதக் காட்சிகள். இவை அந்தப் பனி மலைகள் கதிரவனின் உதய ஒளியிலே ஒரு வண்ணமும், மதியத்திலே ஒரு வண்ணமும், மாலை மறை கதிரிலே ஓர் வண்ணமும், இருளிலே ஒரு வண்ணமும், சந்திர ஒளியிலே ஒரு வண்ணமுமாக மனத்தை மயக்குகின்றன. இவற்றையும் கண்டார்கள் நம் பெரியோர்கள். அந்த அடர்ந்த காடுகளை - பரம்பொருளின் கற்றைச் செஞ்சடையாகக் கண்டார்கள். செங்கதிரோனின் கிரணங்களில் செந்நிறம் பெற்று விளங்கும் அந்தப் பனி மலையை - 'செம்மேனி அம்மானாக விளங்கும் பெருமான் திருமேனி' யாகக் கண்டார்கள். அதற்குமேலே பனி மலைச் சிகரங்களைப் பெருமானின் முடியாகக் கண்டார்கள். வானிலே கூனல் பிறை வரும் போது எம்பெருமான் சடாமகுடத்தில் வைத்த பிள்ளைமதி அவர்கள் நினைப்பில் முந்தியது. பனி மலைகளினின்று பாய்ந்தோடிவரும் ஆறுகளைக் கங்கையாகக் கண்டார்கள். பக்கத்திலே பசுமையான தோற்றத்தைச் சத்தியாகக் கண்டார்கள். சுருங்கச் சொன்னால், சத்தியும் சிவமுமாக, உமா மகேசுவரனாக நம் சாத்திரம் கூறுகிற பரசிவத்தை அகக்கண்ணிலே கண்டார்கள். பரவசமானார்கள். பரந்து விரிந்த பாருலகத்தை விட்டு அப்பரம் பொருளோடு ஒன்றுபட்டார்கள். இத்தகைய தெய்விகத் திருக்காட்சியைத்தான் இமயம் நல்குகிறது. உள்ளம் சிலிர்க்க, உரோமங்கள் புளகாங்கிதம் அடைய, சிந்தையில் சிவபோதம் நீங்கிச் சிவபோதம் துளும்பப் பரமானந்தம் எய்தும் நிலைமையை அங்கே உணர்கிறோம்; அதுதான் இமயம் தரும் பேரின்பம். வெள்ளிப் பனி மலையின் மீது உலாவியதால் வரும் விழுப்பயன்.

## ஞான வெற்றி :

வெற்றி என்பது ஒரு இலட்சியக் கோரிக்கை. அதற்குச் சாதனங்கள் தேவை. பெரும்பாலும் வீரர்கள்தான் வெற்றியை விரும்புவார்கள். வெற்றியின் பயன் ஒரு நாடு பிடிப்பது. அதற்குச் சாதனம் படை. படைதிரட்டுவான்; வெற்றி காண்பான்; நாடு அவனுடையதாகும். இது வரலாறு.

மாணிக்கவாசகர் படை திரட்டுகிறார். படை, நல்ல படையாக இருக்கவேண்டுமே; பார்ப்போம். அழைக்கிறார் படையை. படைக் கருவிகளையும் கூட்டுகிறார். வாள், பறை, குடை, கவசம் இவைகளை அணியச்சொல்கிறார். படை அணிவகுப்பும் செய்கிறார். நடைமுறையும் சொல்கிறார். வாள் ஞானவாள். பறை நாதப்பறை. குடை மதிவெண் குடை; கவசம் நீறு. அணிவகுப்பில் தூசிப்படை, தொண்டர்கள். பக்கப் படை பக்தர்கள். பேரணி உந்துபடை ஒண்டிறல் யோகியர். கடைக் கூழை திண்டிறற்சித்தர்கள். ஊர் வான ஊர். கொள்ளும் பயன் அண்டர் நாடு. எதை விலக்க? மாயப்படை வாராமே; அல்லற்படை வாராமே. வெற்றி ஞான வெற்றி.

## புறப்பாடு :

இப்பொழுதும் படை புறப்படுகிறது. தொண்டர் படை, பக்தர்கள் படை, ஞான யோகியர் படை. பேசும் பேச்சு சிவப் பேச்சு. எழுப்பும் ஒலி சிவ நாத ஒலி. பயன் மங்களம். சற்றே சொல்லிப்பாருங்கள் .- (போலோ)

‘ கேதார்நாத் பாபாகி ஜே ’
‘ பத்ரி விசால்ஜிகி ஜே ’
‘ பாரதமாதாகி ஜே ’
‘ கங்கா மாயிகி ஜே ’
‘ ஜெயமங்கள் ஜெயமங்கள் ’

இது இந்தி. தமிழிலே,

‘ கேதாரநாதர் வெல்க ’
‘ பத்திரிநாதர் வெல்க ’
‘ (நாம் வாழும்) பரதகண்டம் வெல்க ’
‘ கங்கை அன்னை வெல்க ’
‘ மங்கலம் பொங்குக, பொங்குக ’

இந்த முழக்கத்திலே என்ன இருக்கிறது? கங்கையாறு நமக்குவழி. பாரத பூமி நமக்கு நிலம். பத்ரிநாதர் ஒரு வழிகாட்டி. பயன் கேதாரம். இவ்வாறு ஆணென்றும் பெண்ணென்றும் இல்லாமல், குழந்தைகள் என்றும் கிழவர்களென்றும் இல்லாமல், ஆண்டிகள் என்றும் அரசர்கள் என்றும் இல்லாமல், சாதி இன வேறுபாடுகள் இல்லாமல் முழங்கிக் கொண்டு, எல்லோரும் ஓரினமாகச் செல்லுகிறது அந்தப் படை. இந்த மந்திரம் தளர்ந்தவர்க்கு உணர்வு கொடுப்பது; நலங்கூறுவதும் கேட்பதும் இந்த மந்திரம். அங்கே அன்பு பெருகுகிறது; ஆர்வம் அதிகரிக்கிறது;

529 530

பக்தி வெள்ளம் பெருக்கெடுக்கிறது. அந்த வேகம் செயலற்றவர்களையும் இழுத்துச்செல்கிறது. உற்சாகத்தோடு வழி நடக்கிறது தொண்டர்படை. அங்கே நாதமுழக்கம் இருக்கிறது. பறை கொட்டு முழக்கம் இருக்கிறது. ஆட்டம் இருக்கிறது. பக்தி வேகம் இருக்கிறது. சமயச் சின்னங்களாகிய கவசங்கள் இருக்கின்றன. வெற்றிக் குறிக்கோள் இருக்கிறது. அது கேதாரநாதர். இவையல்லாமல், தற்காலத் தேவைகளான மேற்சோடு, கம்பளிப் போர்வை, கையில்தடி, தலையில் முண்டாசு, தோளிலே ஒரு மூட்டை இவ்விதமாகக் காட்சி தருகிறது; இது புறக்காட்சி. அங்கே பக்தியைக் காணலாம்; உண்மையைக் காணலாம்; சகோதர சகோதரித்து வத்தைக் காணலாம்; சமத்துவத்தைக் காணலாம். ஆகவே அங்கே நாம் விரும்பும் பற்று அற்ற சுதந்திரம் பெற்ற ஒரு பெரும் சமுதாயத்தைக் காண முடியும்.

## வழி எப்படி?

ஒரு பொருளை அடைய வேண்டுமென்றால் வழி தெரியவேண்டும். வழி தெளிவாகத் தெரிந்தால்தான் அடையவேண்டிய இடத்தை விரைந்து நலம்பெற அடைய முடியும். உலகியல் சாதனங்களுக்கும் வழி வகுக்கப் பெற்றிருக்கின்றன. சமயக் குறிக்கோளிலேயும் வழிகள் வகுக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றிற்கும் சாதனம் உண்டு; சாதனையும் உண்டு. பெறும் பலனும் உண்டு. கண்டுவைத்தவர்கள் நம் அநுபவ ஞானிகள். வழி பலவாயினும் குறிக்கோள் ஒன்று. அடையும் பயனும் அதுவே. உலகியலிலே யாத்திரை ஒரு சாதனம். அதன்மூலம் அநுபவ அறிவு உண்டாகும். யாத்திரை செய்யும்போது பல நாகரிகம் படைத்தவர்களை - பல்வேறு நாட்டவர்களை - பல்வேறு குணம் படைத்தவர்களை - பல்வேறு பண்பாடுடையவர்களைக் காண்கிறோம். உறவாடுகிறோம். அறிவு விரி வடைகிறது. நாமும் பண்படுகிறோம். தட்பவெப்ப நிலைகளிலே பழகு வதால் உடல் உரம் பெறுகிறது. இரத்த ஓட்டம் பெருகுகிறது. மனமகிழ்ச்சி உண்டாகிறது. ஆயுள் வளர்கிறது. இது கண்கூடு.

சமய வழியிலே பல தலங்களைத் தரிசிக்கிறோம். பல தீர்த்தங்களிலே நீராடுகிறோம். பல பக்தர்களோடு உறவாடுகிறோம். பெரியோர்கள் தரிசனம் கிடைக்கிறது. மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கி னோர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கிறது. எங்கே, எப்போது, யாரால், கண்டோமா? சாத்திரம் சொல்லுகிறது ஆலயமும், அரனடியார் கூட்டத்தில் சேர்க்கையும், சாதனமும் முழு ஞானிகளுக்கும் வேண்டும் என்று. நாம் எம்மாத்திரம் ?

நம்மை உருவாக்கும் யாத்திரைகளில் பெரிது உத்தரகண்ட யாத் திரை. செல்லும் வழிகளோ இக்காலத்திலே மிகவும் மலிவான

செலவிலே இலேசாகச் செல்லத்தக்கனவாக அமைந்துள்ளன. வசதிகள் பெருகி வருகின்றன. சுருங்கிய காலத்திலே பெரிய யாத்திரைகளைச் செய்து முடித்துவிட முடியும்; சாதனங்கள் இருக்கின்றன.

## நான்கு வழிகள் :

சென்னை புறப்படுமிடம். கல்கத்தா வழியாகக் காசி சென்று கங்கையில் நீராடி விசுவநாதர் தரிசனம் முடித்துக்கொண்டு ஹரத்துவாரம் வழியாக மேலே செல்லலாம். இது ஒன்று. நேரே டில்லி வழியாக ஹரத்துவாரம் அடைந்து மேலே செல்லலாம். பிரதட்சிணமாகப் பம்பாய் வழியாக ஹரத்துவாரம் சென்று மேலே செல்லலாம். இவை இருப்புப்பாதை வழிகள். மற்றொன்று வானவழி.

## ஹரத்துவாரத்திலிருந்து :

இனி, ஹரத்துவாரத்திலிருந்து உந்தூர்தி மூலம் ரிஷிகேசம் அடையவேண்டும். நல்ல இருவழிப்பாட்டை. ரிஷிகேசத்திலிருந்து கீர்த்தி நகர், ஸ்ரீநகர் (டெஹ்ரி கார்வால் - தலைநகரம்) வழியாக உருத்திரப் பிரயாகைக்கு உந்தூர்தி. இது ஒருவழிப்பாட்டை. மலையிலே, ஆற்றோரத்திலே, பெருங்கணவாய்கள் வழியாக நல்ல காட்சிகளினூடே செல்வது. இருபுறமும் பெருங்காடு; அடர்ந்தகாடு; உயர்ந்த மரங்கள், உயர்ந்த ஜாதி மரங்கள், மலையிலே படிப்படியாக உயர்ந்து உயர்ந்து செல்லும் கோதுமை வயல்கள், நீரூற்றுகள், மலை அருவிகள், ஆற்றுச் சேர்க்கைகள், இயற்கை வளங்கள், பூஞ்சோலைகள், மேலும் கீழுமாக ஏறி இறங்கிச் செல்லும் பாட்டை.

## கால்நடை :

உருத்திரப்பிரயாகையிலிருந்து கால்நடை. அதுவும் ஆற்றுக்கணவாய் வழி. அங்கேயும் மேலே கூறிய காட்சிகள். அயர்வு நீங்கச் சட்டிகள். சிகரங்கள் நம்மைக் கைகாட்டி அழைத்துச் செல்லும். பனி மலை வழியிலே ஒரு அழகிய வெந்நீர் ஊற்று. களைப்பு நீக்கிக்கொண்டபின் கண்கொள்ளாக் காட்சி; கேதாரதரிசனம்.

இது அல்லாமல் ஹரத்துவாரம் செல்லும் இருப்புப்பாதையிலே 'நாஜிபாபேட்' என்னும் சந்திப்பிலிருந்து 'கோட்த்வாரா' வழியாக ஸ்ரீநகர் உருத்திரப்பிரயாகைக்கு நேரே உந்தூர்தி மூலம் வருபவரும் உண்டு. முதலில்சொன்ன வழியிலே கீர்த்திநகருக்கும் ஸ்ரீநகருக்கும் இடையே 'அலகநந்தா' ஆற்றின் பாலத்தைக் கால்நடையாகக் கடக்க வேண்டும். நான்கு பர்லாங் தொலைவு.

532

# தொலைவைப் பாருங்கள் :

உந்தூர்தி

| வழி | மைல் |
|---|---|
| ஹரத்துவார் - ரிஷிகேசம் | பதினான்கு |
| ரிஷிகேசம் - கீர்த்திநகர் | அறுபத்துநான்கு |
| கீர்த்திநகர் - ஸ்ரீநகர் | மூன்று |
| ஸ்ரீநகர் - உருத்திரப்பிரயாகை | இருபத்திரண்டு |

கால்நடை.

| | |
|---|---|
| உருத்திரப்பிரயாகை - சத்தோலி | நாலேமுக்கால் |
| தில்வாடா | முக்கால் |
| மட்சட்டி | ஒன்று |
| ராம்பூர் | முக்கால் |
| அகஸ்தியமுனிசட்டி | நாலேகால் |
| சௌடியசட்டி | இரண்டரை |
| சந்திரபுரி | ஒன்று |
| பீரிசட்டி | மூன்றரை |
| குண்டுசட்டி | மூன்றரை |
| குப்தகாசி | இரண்டு |
| நாலாசட்டி | இரண்டு |
| பேத்சட்டி | ஒன்று |
| வியூங்சட்டி | இரண்டு |
| (துர்க்காபூர்) மெய்கண்டசட்டி | ஒன்றரை |
| ஃபாட்டாசட்டி (Phata) | ஒன்று |
| பதல்பூர் | மூன்று |
| ராம்பூர் | ஒன்றரை |
| கௌரிகுண்டம் | ஐந்து |
| சர்க்காலீசனி | இரண்டு |
| ராம்பாடா | ஒன்றேமுக்கால் |
| கருடசட்டி | இரண்டு |
| திருக்கேதாரம் | ஒன்றேகால் |

மொத்தம் நாற்பத்தெட்டு மைல். ரிஷிகேசம் இருந்து முழுவதும் கால் நடையாக யாத்திரை செல்வோரும் உண்டு. ரிஷிகேசம் - கீர்த்திநகர்

சட்டி – யாத்திரிகர் தங்கிச் செல்ல வழியிலே கட்டிவைத்துள்ள விடுதிகள் பலவும் அடங்கியது.

உந்தூர்தி வழியிலே நடுவில் தேவப்பிரயாகை இருகின்றது. தேவப் பிரயாகை ரிஷிகேசத்திலிருந்து நாற்பத்திரண்டு மைல் தொலைவு. அங்கே பாகீரதியும், அலகநந்தாவும் சேருகின்றன. அதற்கு இப்பால் அந்தநதி கங்கையெனப் பெயர் பெறுகிறது. கங்கோத்ரி, யமுனோத்ரி போக விரும்புவோர் தேவப் பிரயாகையிலிருந்து பாகீரதி நதிக்கரையிலே கால் நடையாகச் செல்லவேண்டும். நேரே பத்ரி செல்லுவோர் உருத்திரப் பிரயாகையில் உந்தூர்தியில் இறங்காமல் 'பீபல்கோட்டி' (Pipalkoti) வரை உந்தூர்தியில் சென்று பிறகு கால்நடையாகப் பத்ரி செல்லவேண்டும். கேதார தரிசனம்செய்து பத்ரி செல்வதுதான் யாத்திரை பூர்த்தி என்று கொள்ளப்படுகிறது, அவ்விதம் செல்லுவோர் நாலாச் சட்டியிலிருந்து ஊக்கிமடம் துங்கநாத் வழியாக முப்பத்தாறுவது மைலில் 'சமோலி' அடைந்து பதினன்குமைல் உந்தூர்தியில் 'பீபல்கோட்டி' சென்று ஸ்ரீசங்கர மடங்களில் ஒன்றான ஜோஷிமடம், விஷ்ணுப் பிரயாகை, பாண்டுகேசுவரம் வழியாகப் பத்ரி சென்று வழிபட்டு உந்தூர்தியில் ஹரத்துவாரம் திரும்பலாம். பொதுவாக, ஹரத்துவாரம் வழியில் நல்ல பெருந்தலங்களும் தீர்த்தங்களும் அமைந்திருப்பதால் யாத்திரைக்குச் சிறந்தது; பெரும்பாலோர் செல்லும் வழியும் இதுவே. இந்த யாத்திரைக்கு வடநாட்டில் உள்ளவர்கள் பெரும்பாலோரும் செல்கிறார்கள். பெரும் சாதனையாகவும் நினைக்கிறார்கள்.

## பாடல் பெற்ற தலங்கள் :

மூவர் முதலிகளால் பாடல்பெற்ற தலங்களிலே அநேகதங்காவதம், இந்திரநீலப்பருப்பதம், கேதாரம் ஆக மூன்று தலங்களின் தரிசனம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. கௌரிகுண்டம் அநேகதங்காவதம்; கேதாரத்திற்குக் கீழ் எல்லை இந்திரநீலப்பருப்பதம்.

## சாதனங்கள் :

ரிஷிகேசம்வரை புகைவண்டிகளிலோ, உந்தூர்திகளிலோ வசதிக்குத் தக்கவாறு போகலாம். மேலே தனி உந்தூர்தி வைத்திருப்பவர்கள் சாதாரணமாகப் போகமுடியாது. அதற்கு உத்தரப் பிரதேச அரசாங்கத்தி னுடைய அனுமதி வேண்டியிருக்கும். உருத்திரப் பிரயாகை வரை உந்தூர்திமூலம் செல்லலாம். அதற்குமேலே கண்டி, தண்டி அல்லது கோடா மூலமாகப் போகவேண்டும்.

**கண்டி :** மூங்கிலால் உறுதியாகச் செய்யப்பெற்ற கூடை. நூற்கயிறு கொண்டு அதனைப் பிணைத்து நடுவிலே நாடாவைக்கொண்டு கட்டி யிருப்பார்கள். கயிற்றைக் கூடையில் மாட்டி நாடாப் பட்டையைத் தன்னுடைய நெற்றியில் சேர்த்துத் தூக்கிச் செல்லுகிறான் கூலி.

**தண்டி :** சாய்வு நாற்காலியிலே ஒரு மனிதன் உட்கார்ந்து செல்வது போல மரத்தால் இலேசாக அமைக்கப்பெற்றிருக்கும். முன் கொம்பிலே இருவரும் பின் கொம்பிலே இருவருமாகத் தாங்கிச்செல்வது.

**கோடா :** குதிரை. குதிரைச் சவாரிசெய்யத் தெரியாதவர்களையும் அதிலே உட்காரவைத்துக் குதிரைக்காரன் குதிரையைத் தட்டி அழைத்துப்போகிறான்.

பண்டங்கள் ஏற்றிச் செல்வதற்கு மூங்கிற்கூடை, கழுதை, குதிரை, சடை ஆடு இவைகள் உபயோகப்படுகின்றன. பொதுவாக அங்கே குதிரையும் சடை ஆடும் பண்டங்கள் ஏற்றி மலையின்மேலே இருந்து வருவதற்கும் மேலே ஏறிப் போவதற்கும் பெரிதும் பயன்படுகின்றன.

**உடை :** நமக்குக் குளிர் தடுக்கக் கம்பளிச் சட்டை, கையுறை, காலுறை, மேற்சோடு, தலையிலே முண்டாசு, கையில் ஒரு தடிக்கொம்பு இவை வேண்டும். இந்தச் சாதனங்கள் ஹரத்துவாரிலே கிடைக்கும். படுக்கையும் கையில் இருத்தல்வேண்டும். கைக்குடை, கைவிசிறி அவசியம் தேவை.

## மலைநாட்டு மக்கள் வாழ்க்கை

**பண்பாடுகள் :** அறத்தின் அடிப்படையிலே மனித சமுதாயம் வாழக் கற்றுக்கொண்டுவிட்டதென்று சொன்னால், பூசல் ஏது? பொறாமை ஏது? போட்டி ஏது? ஆரவாரம் ஏது? அறத்தைப்பற்றி மனித சமுதாயம் கொஞ்சமும் எண்ணத் தொடங்காமல் மறக்கும்போதுதான் மனித மனத்தை மாசு கப்பிக்கொள்கிறது. இமயத்திலே வாழ்கின்ற மக்கள் நற்குணங்களின் தாயகமாக இருக்கிறார்கள். இயற்கையாகவே அறம் அவர்கள்பால் குடிகொண்டிருக்கிறது. திருட்டு இமய மக்களுக்குத் தெரியாது. பொய் அந்தமக்களிடம் புகுந்ததில்லை. சூது அவர்களிடம் அடைவதில்லை. கள்ளங்கபடில்லாத மாசற்ற உள்ளம். சூதும் வாதும் ஏதும் இல்லாத நல்ல வாழ்வு. பிறனைப்பார்த்துப் பொறாமைப்பட்டு அவனது பொருளைப் பறிக்கும் கெட்ட மனப்பான்மை அங்கு இல்லை. ஆம்! புனிதமான மலை - ஆண்டவன் அருட்காட்சியை விளக்கும் புண்ணியமானசாரல், அங்கா இந்தப்பேய்க்குணங்கள் இருக்கமுடியும்? அவையெல்லாம் ஆரவாரம் நிறைந்த புற உலகத்தோடு நின்று விடுகின்றன.

இன்னொன்று; தெய்வ பக்தி. இமயத்து வாழும் மக்கள் இறை உணர்ச்சி மிக்கவர்கள். வழிபாடு பக்தி மார்க்கத்தை அடியொற்றியது. உணர்ச்சிமிக்க பஜனைகளும், பாடலும், ஆடலும் அவர்களிடத்து உள்ளன. இவையே அவர்கள் வழிபாட்டின் அம்சம். நம்மைக் கண்டவுடனே

535-6



அங்குள்ள சிறுவர் சிறுமியர்கள் நல்ல அழகிய இனிய குரலிலே, பத்ரி கேதார இறைவனுடைய திருநாமங்களைச் சொல்லி மங்களம் பாடுகிறார்கள்; தோத்திரப் பாடல்கள் பாடுகிறார்கள்; நாட்டியமும் ஆடுகிறார்கள். அவர்களுடைய உடை, அணி இவற்றைக் கண்டாலே ஏழ்மை உள்ளவர்களாகக் காட்சி அளிக்கிறார்கள். இது புறக் காட்சி. அங்கே பேராசைக்கு இடமில்லாததனாலே தேவையும் அதிகம் இல்லை.

## தொழில் வளம் :

நல்ல உழவர்கள் அவர்கள்; பாட்டாளி மக்களுங்கூட - ஆணும் பெண்ணும். மலை உச்சிவரை கோதுமை பயிரிடுகிறார்கள். சில இடங் களிலே நெல்லும் உண்டு. நல்ல காய்கறிகள் பயிரிடப் படுகின்றன. வேண்டியதுபோக மற்றவற்றை அவர்கள் விற்றுப் பணமாக்குகிறார்கள். கோதுமை முதலிய உணவு தான்யங்களை நீர்ச்சக்தி விசைகொண்டு மாவாக்குகிறார்கள் செலவே இல்லாத நிலையிலே. உணவுத் திட்டம் மிகவும் சிக்கனமானது. நல்ல கறவை மாடுகள் (பசு, எருமை) உண்டு. சடை ஆடுகள் உண்டு. ஆண்கள் மண்ணை உழுது பண்படுத்திக் கொடுத்துவிடுகிறார்கள். பெண்கள் பலனைக் காத்து, எருவிட்டுக் களை எடுத்து, அறுத்துத் தானியமாக வீட்டில் சேர்த்து வைக்கிறார்கள். குடும் பப்பொறுப்பு பெண்களுடையது. ஆண்கள் வயல் வேலை செய்த நேரம் போகக் கூலிவேலை செய்கிறார்கள். வாணிகம் செய்கிறார்கள். ஆட்டு மந்தைகளை ஓட்டிச் சென்று, சரக்கேற்றிக் கடைகளுக்கு விற்கவும் வாங்கவும் எடுத்துச் செல்கிறார்கள். சடை ஆடுகளிலிருந்து ஆண்டுக்கு மூன்று நான்கு முறை கம்பளி எடுக்கிறார்கள். ஆடு ஒன்று தலா 12 ரூபாயிலிருந்து 15 ரூபாய்வரையும் கம்பளி கொடுக்கிறது. நீண்டு வளர்ந்த கம்பளி மயிர் உள்ள நிலையிலே ஆட்டுத்தோல் பதப்படுத்தப் பட்டு ஆசனமாகவும் உபயோகிக்கப்படுகிறது. கம்பளியைப் பதப் படுத்தித் தக்களியால் நூல் நூற்கிறார்கள். கம்பளி நெசவும் உண்டு. முரட்டுக் கம்பளியும் நெய்கிறார்கள். மிக நேர்த்தியான 'பஸ்மினா' என்ற சால்வைத் தரத்துள்ள போர்வையும் அங்கு உண்டு. அங்கு பெருமைதரக்கூடிய பழமொழி ஒன்று வழக்கு. 'பாசுமதி அரிசியும் பஸ்மினா போர்வையும்' என்பது அந்தப் பழமொழி. மிகச் சிறந்த பொருள்களாகக் கருதக் கூடியவை இவை. யாத்திரை செல்லும் செல்வந்தர்கள் இவையிரண்டையும் வாங்கிச் சென்று மிகப் பெருமை யாகப் பேசிக் கொள்வார்கள்.

தச்சுத்தொழில், கொல்லத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். பால் பண்ணையும் இருக்கிறது. பால் மிகத் தடிப்பானதாக இருக்கிறது. மிகத் தடிப்பான ஆடையும் காய்ச்சினால் கிடைக்கிறது. தயிரும் பல இடங் களிலும் கிடைக்கிறது. குதிரைகள் அங்கு ஏராளம். கழுதை சொற்பம்.

சடைநாய்கள் மிக அதிகமாக உள்ளன. ஆட்டுமந்தைக் காவலுக்கும் ஊர்க் காவலுக்கும் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். பார்க்கப் பயங்கரமாகக் கரடியைப்போலக் காட்சியளிக்கின்றன அவை. சடையோடுகூடிய அவற்றின் தோலையும் பதப்படுத்தி ஆசனமாகவும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். விலைக்கும் விற்கப்படுகிறது. மேலே கூறியபடி ஆடுகளும், குதிரைகளும், கழுதைகளும் பண்டங்களை மலையிலிருந்து கீழே கொண்டுவரவும், கீழிருந்து மக்கள் உபயோகத்துக்குத் தேவையான பொருள்களை மேலே கொண்டு போகவும் பயன்படுத்தப்படுகின்றன.

## சுமை எங்கே?

கனமான பொருள்களைத் தலையிலே ஏற்றிச் செல்லத் தெரியவில்லை. கயிற்றினால் பிணித்து முதுகில்தான் சுமந்துவருகிறார்கள். மிகக் கனமான சாமான்களைக் கயிற்றினால் பிணித்து, நாடாமூலம் நெற்றியில் இணைத்துச் சுமந்து செல்கிறார்கள். மலை வழியிலே அவர்கள் நாடு நகரங்களிலே உள்ள சிறந்த சாலைகளிலே செல்வதுபோல அநாயாசமாகச்செல்கிறார்கள்.

## திருமணம்:

திருமணம் ஒரு முக்கியமான பெருஞ்சடங்கு. அவர்களிலே க்ஷத்திரியர்களும், பிராமணர்களும், வைசியர்களும், சூத்திரர்கள் என்ற தீண்டாதாரும் உண்டு. தாரை, தம்பட்டம், தாளம், முழவு, புல்லாங்குழல் அவர்களிடம் அதிகமாகக் காணப்படும் இசைக் கருவிகள். ஒவ்வொருவரும் வாழ்க்கையிலே மிகப் பெருமையாக நடத்தி மகிழுவது திருமணச் சடங்கு. நம்மவரைப்போல அவர்களும் அவர்களுடைய தகுதியிலே திருமணத்துக்காகப் பெருஞ்செலவு செய்கிறார்கள்.

தாரை, தம்பட்டம், தாளம் முழங்குகின்றன. சிறுபெண்கள் தங்களை அலங்கரித்துக்கொண்டு தாளத்துக்குத் தக்கபடி ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள். இந்தக் காட்சி மிக இனிமையாக இருக்கிறது.

"கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல ஐயநுண்ணிடையார் ஆடும் ஆடல்" என்ற கம்பன் வாக்கும் அங்கு நினைவுக்கு வருகிறது. மணமகன் வீட்டார் கால்நடையாக ஆணும் பெண்ணும் பெண் எடுக்கக் குழுமிச் செல்கிறார்கள்.

## திருமணத்தில் தீச்சட்டி:

கூட்டத்துக்கு முன்னிலையில் நெருப்புச்சட்டி எடுத்துச் செல்கிறான் ஒருவன். திருமணத்திலே தீச்சட்டியா என்று திகைக்கிறீர்களா? தேச வழக்கம் அது. பின்னே இசைக் கருவிகள் முழங்குகின்றன. அதற்கடுத்து

ஆடலும் பாடலும். பின்னே ஆணும் பெண்ணும் அனைவரும். இப்படி ஒரு கூட்டம் மணமகள் வீட்டுக்குச் செல்கிறது. அங்கே விருந்தும் வேடிக்கையும். பெண் எடுத்து வருகிறான் மணமகன். வெள்ளைக் குதிரையிலே மணமகனும், திரையிட்ட நிலையில் வேறொரு குதிரையிலே மணமகளும் பவனியாகத் திரும்புகிறார்கள். மணப்பெண்ணுக்குப் பரிசமும் உண்டு. ஆயிரம் ஐந்நூறு பணமும் உண்டு. மணமகன் வீட்டிலே திருமணம். புரோகிதர் வருகிறார். மந்திரங்களை ஓதுகிறார். திருமணம் முடிவடைகிறது. விருந்து உண்டு. வீட்டுக்குத் தலைவியாகிறாள் வந்த பெண்.

## அலங்காரம் எப்படி?

பெண்கள்காலிலே வெள்ளித் தண்டையும், சில வெள்ளிக் கம்பிகளும் பூட்டப்படுகின்றன. கழுத்திலே வெள்ளிச் சந்திரஹாரம், கண்டசரம். மூக்கிலே முகவாய்க்கட்டை அளவுக்குத் தொங்கும் ஒரு பிலாக்கு, இது தங்கம். ஒரு ரூபாய் அளவிலே மூக்குப் பொட்டு. இடது மூக்கில் தங்கத்தாலான ஒரு பெரிய வளையம். அது முகம் எத்துணை அளவுடையதோ அவ்வளவு பெரிதாகவும் சிலர்க்கு அமைவதுண்டு. சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை தலையிலே நான்கு சடைகள். நான்கு பகுப்பாகச் சடை எடுத்து பிடரிக்குங்கீழே இரட்டைச் சடையாகவோ அல்லது ஒற்றைச் சடையாகவோ. பெரும்பாலும் ஒற்றைச்சடை. குஞ்சம் வைக்கத் தவறுவதில்லை. தலையில் வெள்ளியாலான பல சங்கிலிகள் கோத்த ஓர் ஆபரணம். இது ‘ தலை மாலை. ’ இதிலே ஒரு சங்கிலியோடு மூக்கு வளையம் பிணைக்கப்படுகிறது. இரு காது முழுதும் குத்தி, வளையங்கள் இடப்பட்டுள்ளன. வளையங்களின் கனம் காதுகளை இழுத்து வளைத்துவிடுகிறது. விழாக் காலங்களில் பட்டாடைகளும் உடுத்துகிறார்கள்.

## படிப்பு :

அதிகம் இல்லை. கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆரம்பக் கல்விச்சாலை பல. சாதுக்கள் பலரும் தொண்டர்கள் பலரும் வைத்து நடத்துகிறார்கள். கற்பலகை பள்ளிகளில் இல்லை. மரப்பலகையிலே கறுப்பு மையைத் தீட்டிச் சுண்ணத்தைக் குழைத்து வைத்துக்கொண்டு துயிலால் எழுதுகிறார்கள் மாணவர்கள். இது பழங்கால மக்கள், தாளும் பனை ஓலையும் இல்லாத நிலையிலே இலைகளிலே செம்பஞ்சுக் குழம்பில் முல்லை அரும்புகளைத் தோய்த்து எழுதினார்கள் என்ற சிந்தனையை நமக்குக் கொண்டுவருகிறது.

## நாகரிகம் :

நாகரிகம் எது ? பண்பாடுள்ள அகநாகரிகமே நாகரிகம் என்பார் திருவள்ளுவர். மினுக்கும் மேற்பூச்சும் மெல்லிய அணியும் ஆடையும் அலங்காரப் பொருள்களும் உதட்டிலே கொஞ்சலும் உள்ளத்திலே வஞ்சமும் அல்ல நாகரிகம். இந்த அகநாகரிகத்தில் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் இமயத்து மக்கள். வருஷத்திற்கு ஒரே ஒரு சட்டையை வைத்துக்கொண்டு, கிழிந்து உபயோகமற்றுப் போகும் வரை அதையே உபயோகிப்பவர்களும் இருக்கிறார்கள். குளிப்பது அதிகம் இல்லை. ஆண்கள் காலுறை, மேற்சோடு, காற்சட்டை, மேற்சட்டை, தலையில் குல்லா, கைத்தடி இவற்றோடு காட்சியளிக்கிறார்கள். குடையும் உண்டு. உடை கம்பளி உடை. குளிர் அதிகமுள்ள நாட்களில் தடித்த கம்பளியாற் செய்யப்பெற்ற மேலங்கி (Over Coat) யும் போட்டுக்கொள்ளுகிறார்கள். ஹுக்கா பிடிக்கும் வழக்கமும், புகை பிடிக்கும் வழக்கமும், தேநீர் அருந்தும் வழக்கமும் ஆண் பெண் இருபாலரிடமும் இருக்கின்றன. கஞ்சாவும் உபயோகப்படுத்துவார்கள். பெண்கள் உள்ளாடை உடுத்து, மேலே தடித்த கம்பளியை நம்நாட்டுப் புடைவையைப் போலச் சுற்றிக் கொள்கிறார்கள். இவர்களுக்கும் தலையிலே கம்பளி முண்டாசுண்டு. வேலைநேரத்திலே பெண்கள் காற்சோடு அணிவதில்லை.

## உதவி மனப்பான்மை :

பெரும்பாலும் வருகின்ற யாத்திரிகர்களுக்குத் தங்களாலியன்ற உதவி செய்ய முன் வருகிறார்கள். சிறு ஊதியமும் எதிர்பார்ப்பார்கள். பெண்களுக்கு நாணம் என்பது அதிகம் இல்லை. வெள்ளை உள்ளம் படைத்தவர்களாதலாலே நம்மைக் கண்டவுடனே கள்ளமற்றுச் சிரிக்கிறார்கள். மங்கள கீதம் பாடிக் காசு கேட்கிறார்கள். அதிகமாகக் காசு விரும்புவதும் இல்லை. ‘ சேட்ஜி பைசா தேயோ ’ (காலணாக் கொடுங்கள்) என்றுதான் கேட்கிறார்கள். கொடுத்தால் மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் சிரிப்பிலே உள்ளமும் சிரிக்கிறது. உதட்டளவு கிடையாது. “ முகம்நக நட்பது இல்லை; அகம்நக நட்பதே உண்டு ” என்ற வள்ளுவர் வாக்கு நம் சிந்தனைக்கு வரும்.

## அழகு :

குழந்தைகள் தோற்றம் அழகிய தோற்றம். மூக்கு கொஞ்சம் சப்பை. வண்ணம் ரோஜா வண்ணம். கண்கள் குறுகுறுத்த நீலக் கண்கள். சோம்பேறிகளல்லர் அவர்கள். சுறுசுறுப்புள்ளவர்கள். மலை நாட்டிலே கின்னரரும் கிம்புருடரும் போன்ற தேவசாதி மக்களும் இருக்

கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்களைக் காண்பது அரிது. கிம்புருடர் ஆணும் பெண்ணும் அழகுமிக்கவர்கள். ஒரே பெற்றியாகக் காணப்படுவர். ஆண்யார் ? பெண்யார் ? என்று பகுக்க முடியாத அளவுக்கு இருபாலரும் ஒரே பெற்றியாக இருப்பார்கள். அங்கே கிம்+புருடர்? என்று கேட்கத் தோன்றும் அவர்களைப்பார்த்து. (கிம் - யார், புருடர் - ஆண்). கின்னரர் - தேவர்களைப் போன்ற அழகு மிக்கவர்கள். சாரீரம் மிக இனிமையாக இருக்கும். அவர்களுடைய இசை தேவகானம். அந்தப் பாட்டைக்கேட்டு கிம்+நர? (யார் மனிதவர்க் கத்தைச் சேர்ந்தவர்?) என்று கேட்கத் தோன்றும். எப்பொழுதும் ஆடியும் பாடியும் இன்பமாக இருக்கும் இவர்கள் வாழ்க்கை.

## விலங்குகள் :

மாடுகள் மயிர் அடர்ந்தனவாக, குட்டையானவையாக இருக்கின் றன. வெள்ளை அதிகம் இல்லை. கறுப்பும் கபிலமும்தான். முகம்கூடச் சிறுத்து இருக்கிறது. மலை உச்சிக்குக் காலையிலே சென்று மேய்ந்து மாலையிலே திரும்புகின்றன. வளர்க்கின்ற வீட்டு விலங்குகளுக்கெல்லாம் கழுத்திலே 'சலங்கைகள்' கட்டியிருக்கிறார்கள். காட்டிலே காட் டெருமை, நரி, கரடி, சிறுத்தைப்புலி, சிங்கம் முதலியன இருப்பதாகச் சொல்கிறார்கள். கரடி, நரி, சிறுத்தை இவை இரவிலே பத்துமணி அளவில் மலையிலிருந்து கீழிறங்கி வருவதாகவும் ஊர்ப்புறங்களிலே தப்பித்தவறி நிற்கும் குழந்தைகள், ஆடுமாடுகளைத் தூக்கிப் போய்விடுவ தாகவும் சொல்கிறார்கள். அவ் விலங்குகள் விடியல் மூன்றுமணிக்குள் ளாகக் கானகத்துக்குத் திரும்பிவிடுகின்றனவாம். ஆகவே, இரவில் முன் நேரங்களில் வருகின்ற சட்டிகளிலே மக்கள் தங்கிவிடுவார்கள். தெரியாதவர்களுக்கு உள்ளூர் வாசிகளும் எடுத்துச் சொல்லித் தங்கும் படிச் செய்வார்கள்.

## விஞ்ஞான உள்ளம் :

மலை நீர்வீழ்ச்சிகளிலிருந்தும் அருவிகளிலிருந்தும் சிறு வாய்க்கால் களாகக் கட்டித் தண்ணீரை எடுத்துச்சென்று மரத்திலே குடைந்த சிறு வாய்க்கால் வழியாகக் குத்துச்சாய்வாகத் தண்ணீரைக் கீழே இறக்கி மிக வேகமாகப் பாயும்படிச் செய்கிறார்கள். இது அங்குள்ள ஒரு பல்சக்கரத்தை இயக்குகிறது. மேலே கல்திரிகைகளால் மாவு அரைக் கிறார்கள். தச்சர்கள் கடைசல் பட்டடையாக அதையே உபயோகிக் கிறார்கள். மரக்கிண்ணங்களும், மரப்பானைகளும், அகப்பைகளும், கமண்டலங்களும் மிக அழகாக அங்கே செய்யப்படுகின்றன. காட்டிலே பெரும் மரங்களை வெட்டி, வாள்கொண்டறுத்து, செல்கின்ற ஆறுகளிலே

மிதக்கவிடுகிறார்கள். குறிப்பிட்ட இடத்திலே போய்ச் சேர்ந்ததும் வியாபாரிகள் அவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொள்கிறார்கள்.

## மருந்துச் சரக்கறை :

சிடர் (Cedar) என்ற மரங்களிலிருந்து கற்பூரத் தைலம் வடிக்கிறார்கள். மரங்களிலே உயர்ந்த வகையான தேவதாரு இருக்கிறது. "தாருவில் தேவதாரு" என்பது திருவிளையாடற்புராணம். பைன் (Pine) இருக்கின்றது. இவற்றைப் போன்ற உயர்சாதி மரங்கள் பலவும் உள்ளன. மலையிலேயே லிங்கம், அபிரகாம் போன்ற சித்த மருந்துச் சரக்குகளும் ஏராளமாக விளைந்து கிடக்கின்றன. இமயமலை மூலிகைகள் பெருத்த மருந்துச் சரக்கறை. அங்கு இல்லாத மருந்துகள் இல்லை. பூமியிலிருந்து வெட்டி எடுப்பனவும், செடிகளாக வளர்வனவுமாக உள்ள உலக மருந்துச் சரக்குகள் அத்தனையும் அங்கே உண்டு. இதன் விளைவிலே விழுந்து வரும் தண்ணீர் ஆறுகப் பெருக்கெடுக்கிறது. அதுவே பெருமருந்து.

## கிராமம் :

கிராமங்கள் மலைச் சரிவிலேயே பலப்பல உயரங்களில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. கிராமம் என்பது மலை உயரத்தில் நான்கு இரண்டு வீடுடையதாகவும் இருக்கும். நூறுவீடுடையதாகவும் இருக்கும். இரண்டொரு தெருக்கள். வீடுகளை அங்கே கிடைக்கக்கூடிய கருங்கல்லை உடைத்தெடுத்து மண்ணைக் குழைத்து வைத்துக் கட்டுகிறார்கள். தரை மண்தரை. மாடிவைத்த கட்டிடங்கள் நான்கு அடுக்குகள் உள்ளனவாகக் கூட இருக்கின்றன. ஒவ்வொரு தளமும் காட்டு மரங்களைப் பரப்பி அதன்மேல் மண்ணைப்போட்டுப்பூசிமெழுகிவைத்திருப்பார்கள். சமதரையாக இருக்காது. மரத்தினுடைய வளைவுக்குத் தக்கபடி மேடுபள்ளங்கள் இருக்கும். உட்சுவர்களை மண்கொண்டு பூசுகிறார்கள். சிலர் சுண்ணும்பால் பூசுகிறார்கள். கூரைக்கு மரத்தைப் பரப்பிவிட்டு மலையிலே மெல்லிய தகடுகளாகப் பாறைகளை வெட்டி எடுத்து மேலே மூடுகிறார்கள். அங்கே இமயத்தின் திருவிளையாடலிலே பெருங்காற்று, பெருமழை, கடும்பனி இவைகளைத் தாங்கிநிற்பனவாக இருக்கின்றன அவை. அடித்தளத்திலே ஆடு மாடுகளைக் கட்டிவைத்துக்கொள்கிறார்கள். மேலே குடும்ப வாழ்க்கை. கடைவைப்பவர்கள் அடித்தளத்திலே வைக்கிறார்கள். ஊர்ப்புறங்களும் தெருக்களும் சுத்தமாக அமையவில்லை. ஈக்கள் அதிகம். மனிதர்மீது சதா மொய்த்துக்கொண்டே இருக்கும்.

5741



## அரசாங்க சுகாதார ஏற்பாடு :

அரசாங்கத்தார் பெரும் பொருட் செலவிலே D. D. T. போன்ற மருந்துகளைக் கொண்டுவந்து தெளிக்கிறார்கள். கக்கூஸ் வசதிகளைச் செய்துகொடுக்கிறார்கள். மலை அருவியிலிருந்தும் ஆற்றிலிருந்தும் வரும் தண்ணீரைக் காய்ச்சாமல் எடுத்து அருந்துவது ஆபத்தானது. அதிலே கலந்துவரும் அபிரகம் போன்ற பச்சை மருந்துகள் பாஷாண சத்துடையவை. மயக்கத்தைக் கொடுக்கும். உண்ட உணவு அருது. வயிற்றில் தங்கிக்கொள்ளும். அதுவே பின்னர் பிணிக்கு வித்தாக ஆகும். மலை ஊற்றுக்களிலிருந்து வரும் தண்ணீரில் கண்ணுக்குப் புலப்படாத சிறு அட்டைகளும், கிருமிகளும் கலந்து வரும். இவையும் ஊறுவிளைப்பன. இவற்றைத் தடுக்க - மக்கள் நல்வாழ்வு வாழ - ஆங்காங்குவரும் தண்ணீரைத் தடுத்து, தொட்டி கட்டித் தேக்கி - நச்சுச் சத்துக்கள் அடியிலே போக நல்ல சுத்தமான குடி தண்ணீர் மக்களுக்குக் கிடைக்கக் குழாய்கள் அமைத்துத் தந்திருக்கிறார்கள். அடைப்பும் இல்லை; தடையும் இல்லை. நாள்முழுதும் தண்ணீர் வசதி உண்டு.

## நதியைக் கடக்க :

அரசாங்கத்தில் ஆற்றின் இருகரைகளிலும் மிக உயரமான கற்சுவர்களை எழுப்பி அவைகளில் உறுதியான இரும்புக் கயிறுகளில் தொங்கு பாலங்கள் அமைத்திருக்கிறார்கள். அந்தநாட்டு மக்கள் இவை அல்லாத நாட்டுக் கயிற்றுப்பாலங்களும் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். மரப் பட்டைகளினின்று கயிறு இழைத்து இருகரைகளிலும் அவற்றைக் கட்டி அதிலே தொங்குபாலங்கள் அமைத்திருக்கிறார்கள். இவ்வகைப் பாலங்களில் செல்ல நமக்கு பழக்கமில்லாததால் அச்சமாக இருந்தாலும், மலைநாட்டு மக்கள் அநாயாசமாக அவற்றில் செல்கிறார்கள்.

# வழியில் தலங்கள்

## ஹரத்துவாரம் :

இதற்கு மாயாபுரி என்ற மறுபெயரும் உண்டு. கங்கை மலையிலிருந்து தரையைத் தொடுமிடம். மிகப் புண்ணிய பூமி. தேவர்களும் வசிக்கிறார்கள். மகாபாரதத்தில் உத்தரகண்டத்திலே ஹரத்துவாரத்திற்கு விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. பரமசிவன் சடையிலிருந்து வருவதாலே அதற்கு ஹரத்வாரம் என்று பெயர். (துவாரம் - வழி). வைணவர்கள் சொல்லுகிறார்கள் அதை ஹரித்துவாரம் என்று. ஹரியினுடைய

5 42

பாதத்திலிருந்து கங்கை வருவதாகக் கூறுகிறார்கள். இதுவே அவர்கள் கூறுவதற்குக் காரணம். ஹரிபாதம் கங்கைக் கரையிலே வைத்திருக்கிறார்கள். இங்கே கங்கைக்குக் கோயில் கட்டி இருக்கிறார்கள். சிவாலயங்களும் இருக்கின்றன.

கிழக்கிலும் மேற்கிலும் உள்ள மலைச் சிகரங்களில் மானசாதேவியும். அஞ்சனாதேவி (சண்டி) யும் காட்சியளிக்கிறார்கள். தட்சயாகம் நடந்த கனகல் இரண்டுகல் தொலைவில் இருக்கிறது. ரிஷிகுலம் என்னும் சாதுக்கள் வாசம் செய்யும் இடம் அரைக்கல் தொலைவில் இருக்கிறது. அவதூதமண்டலம் என்ற நிர்வாணத் துறவிகள் வசிக்கும் இடம் ஒரு கல் தொலைவில் இருக்கிறது. கோசுவாமி என்னும் சாதுவினுடைய முயற்சியாலே 'கீதாபவனம்' என்ற ஒரு மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. சாதுக்களும் யாத்திரிகர்களும் பக்தர்களும் அங்கே பகவத்கீதா பாராயணமும், விமர்சனமும் செய்கிறார்கள். அங்கு மிக அழகான கிருஷ்ண விக்கிரகம் ஒன்று இருக்கிறது. ஊருக்கு முக்கியமான தெய்வம் மாயாதேவி. உத்தரகண்ட யாத்திரை செல்வோர் யாத்திரை முடித்துவந்து மாயாதேவியைத் தரிசனம்செய்தால் யாத்திரையினுடைய பயன் பூர்த்தியாகும் என்று சொல்லுகிறார்கள். சதானந்தர் என்ற பெரியார் அந்த ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து புதுக்கியிருக்கிறார். மாயாதேவியினுடைய புரி மாயாபுரி ஆயிற்று. நவக்ரகங்கள் அமையப் பெற்றிருக்கின்றன. பன்னிரண்டு தூண்கள் பார்க்கத்தக்கன. உத்தரகண்ட யாத்திரைக்குக் கோடைக்காலத்திலேஇங்கிருந்து மேலேபோகவேண்டும். அங்குள்ள கங்கையிலே பிரமகுண்டம், குசாவர்த்தகாட், பீமகுண்டம், தட்சகுண்டம் என்ற பல கட்டங்கள் உள்ளன.

## பிரமகுண்டம்:

ஹரிக்கிபேடி என்றும் சொல்வார்கள். அங்கு பல ஆலயங்கள் இருக்கின்றன. மாலையிலே விளக்கேற்றும் நேரத்திலே மக்கள் அதிகமாகக் கூடுவார்கள். அகல் விளக்கு ஏற்றிக் கங்கையில் விடுவார்கள். ஏககாலத்திலே அங்குள்ள பலகோயில்களிலும் வழிபாடுகள் நடைபெறும் இது ஒரு கண்கொள்ளாக்காட்சி. மக்கள் பஜனை பாடுவர். மிக உருக்கமாக இருக்கும். இந்தக் கட்டத்திலே ஸ்நான விசேஷம் அதிகமுண்டு. மக்கள் நன்மைக்காகக் கங்கையை இரண்டாகப் பிரித்துவிட்டிருக்கிறார்கள். இங்கே ஆற்று வேகம் அதிகம். இழுப்பும் இருக்கும். ஆற்றுநீர் 'சில்'லென்று இருக்கும். மீன்கள் மந்தை மந்தையாக மேயும். ராஜா பிர்லா என்னும் இந்தியக் கோடீஸ்வரர் அங்கே படித்துறையைச் செப்பனிட்டுக் கங்கையினுடைய இரு பிரிவுகளுக்கு நடுவிலே மேடை கட்டி மணிக்கூண்டும் கட்டிவைத்திருக்கிறார். ஒலிபெருக்கியும் அங்கு

உண்டு. காலையிலும் மாலையிலும் வேத கோஷமும், தோத்திரப் பாடல்களும் பாடப்பெறுகின்றன. மாலைநேரங்களிலே பலர் புராண படனம் செய்கிறார்கள். வலுவில்லாதவர்களும் கங்கையில் இறங்கி ஸ்நானம் செய்வதற்கு வசதியாகச் சங்கிலிகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தப் பக்கத்திலே அதிக ஆழமில்லை. மறுபக்கத்தில் ஆழம் அதிகம். வேகமும் அதிகம். ஆனால் இந்த இரண்டு பகுதிகளிலுமே அப்பக்கங்களிலுள்ள இளஞ் சிறுர்களுங்கூட நீந்தி விளையாடுவதைக் காணலாம். ஆற்றைக் கடக்கப் படகு வசதி உண்டு. அக்கரையிலே கங்கை முழுவெள்ளம் வரும்போது பிரித்துவிடுவதற்காக அணைகட்டியிருக்கிறார்கள். பாணங்கள் பல வண்ணச் சேர்க்கையிலே அங்கே ஆற்றின் அடித்தளத்திலே ஏராளமாகக் கிடைக்கின்றன. சிவனடியார் அதைக்கண்டால் ஒரு பெரிய பாணசுர பூசையே செய்துவிடலாம்.

சுவேதகேது என்னும் மன்னன் தவமிருந்து பிரமதரிசனம் பெற்றான். அது பிரமகுண்டமாயிற்று, பிரமன் உலகப்படைப்பு தொடங்குவதற்கு முன்னே மாயாதேவியை வேண்டி இங்கொருகுண்டம் (தீர்த்தம்) உண்டாக்கினான். அதனோடு கங்கை தரையைத் தொடுமிடமாகிய இங்கே பிரமன் கங்கையை வரவேற்றான் என்பதும் வரலாறு. பிரமகுண்டத்தின் கரையிலே மைத்ரேயர் விதுரனுக்குப் பாகவதகதை சொன்னதாகவும் சொல்லப்படுகிறது.

## குசாவர்த்தகாட்:

பிரமகுண்டத்தினுடைய முடிவிலே குசாவர்த்தகாட். இங்கேயும் கரையிலே பெரிய பெரிய சத்திரங்கள், கடைகள் அமைந்துள்ளன. பல பெரியவர்கள் பஜனையும் பாடலும் புராண படனங்களும் நிகழ்த்திக் கொண்டேயிருக்கிறார்கள். பெண்கள் முழவு கொட்டிக்கொண்டு தாளம் போட்டு அகண்ட பஜனை நாள்முழுதும் இடையீடின்றிச் செய்து மகிழ்கிறார்கள். குசாவர்த்தகாட்டிலே இந்தூர் மகாராணியான அகல்யா பாய் படித்துறை கட்டியிருக்கிறார். தத்தாத்ரேயர் என்ற மகரிஷி அங்கே ஒற்றைக்காலிலே நின்று தவமிருந்தார். பகிரதனால் கொண்டுவரப்பட்ட கங்கை தன்னுடைய முழுவேகத்துடன் செருக்கோடு அவரைப் பிடித்து இழுத்தது. உருட்டியும் தள்ளிவிட்டது. மகானுக்குக் கோபம் வந்தது. கங்கை அப்புறம் செல்ல முடியவில்லை. அங்கேயே சுழன்று சுழன்று நின்றது. தேவர்களும் முனிவரைப் பிரார்த்தித்தனர். கோபம் குறைந்தது. கங்கையும் பிரார்த்தித்தது. ஆனால் மகரிஷி திரும்பிப் பார்த்தார். தம்முடைய தண்டு, கமண்டலம், தர்ப்பாசனம் எல்லாம் கங்கை வெள்ளத்திலே சுழல்வதைக் கண்டார். மேலும் சீற்றம்கொண்டார். கங்கையும் வற்றியது. எல்லோரும் பிரமனிடம் வேண்டிக்கொண்டார்கள். பிரமனும்

முனிவரைச் சாந்தப்படுத்தி, கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்த குறிக்கோளையும் விளக்கிப் பூவுலக மக்களும் நன்மைபெற மீண்டும் கங்கை பெருகி வரச்செய்ய வேண்டினன். சாந்தமடைந்த முனிவரும் 'அவ்விதமே ஆகுக' எனப் பணித்தார். மீண்டும் பெருக்கெடுத்துக் கங்கையும் தன்வழியே சென்றது. இந்தக் கட்டம் கமண்டலமும் தர்ப்பாசனமும் மிதந்ததனுலே குசாவர்த்தம் என்று பெயர்பெற்றது. இங்கே முழுகிப் பிண்டதர்ப்பணம் செய்தால் உறவினரும், நண்பரும், மற்றையோரும் வானுலகம் செல்வார்கள் என்பது நம்பிக்கை.

## பீமகுண்டம் :

இங்கே தண்ணீர் கீழேயிருந்து மேலே வருவதுபோல ஒரு தோற்றமளிக்கும். நீலமலையிலிருந்து கீழே இறங்குவதால் கங்கை நீலதாரா என்று பெயர் பெறுகிறது.

## தட்சகுண்டம் :

தட்சன் யாகம்செய்த இடம். தட்சனுக்கு இப்பொழுதும் பூசை நடைபெறுகிறது. ஆவணி மாதத்திலே உற்சவம் உண்டு. சிவராத்திரியிலே இங்கு விசேஷம் அதிகம். அந்த ஆலயத்திற்கு தட்சமௌரி என்று பெயர். தட்சன் பிரமபதவி பெற்றவன்; தவவலிமை உடையவன். தட்ச பிரஜாபதி என்பது அவனுடைய முழுப்பெயர். அவனுடைய மகள் தாட்சாயணியைச் சிவபெருமானுக்கு திருமணம் செய்துவைத்த பேறும் அவனுக்குண்டு. ஆனல் மமதை அதிகம். யாகம் ஒன்று செய்ய முற்பட்டான். அவிர்ப்பாகம் பெறப் பல தேவர்களையும் வேண்டினன். எல்லோரும் வந்தனர். ஆனல் சிவபெருமானுக்கு அழைப்பில்லை. தாட்சாயணி தன்னுடைய தகப்பன் செய்யும் அந்தப் பெரிய யாகத்துக்குத் தானும் போகவேண்டும், பெருமானும் உடன் வரவேண்டும் என்று அழைத்தாள். பெருமான் இசையவில்லை முதலிலே. தேவியினுடைய வற்புறுத்தலுக் கிணங்க ஐயனும் புறப்பட்டார். ஆனல் ஒரு நிபந்தனை. சென்ற இடத்திலே தனக்கு உரிய மதிப்புக் கிடைக்காவிட்டால் தாட்சாயணி அங்கேயே நின்றுவிடவேண்டும்; தாமும் பிரிந்துவிடுவார். தேவியும் ஒப்புக்கொண்டாள். அழையாவிருந்தாக நுழைந்தார்கள் யாகசாலையில். எதிர்பார்த்த வரவேற்புக் கிடைக்கவில்லை. பெருமானுக்குக் கோபம் வந்தது. இடம்விட்டகன்றூர். அந்தக் கோபத்திலிருந்து வீரபாகு தோன்றினர். முதலிடம் பெறவேண்டிய பெருமானுக்கு மதிப்பில்லாத இடத்திலே வந்த தேவர்கள் சிதைவுற்றனர். தட்சனும் கொல்லப்பட்டான். தாட்சாயணி அவமானம் பொறுக்காதநிலையிலே தீக்குளித்தாள். பிறகு யோகியானள். பெருமானுக்குக் கோபம் தணிந்தது. தேவர்களும் வேண்டிக்

545



கொண்டார்கள். பிரம வரிசையிலே வைத்து எண்ணப்படவேண்டிய தட்சனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டுமெனக் கோரினர். யாக குண்டத்திலே கட்டப்பட்டிருந்த ஆட்டினுடைய தலையை எடுத்துத் தட்ச னுடைய முண்டத்திலே பொருத்தி உயிர்பெற அருள் பாலித்தார் பரமர். இது நடந்த இடம் கனகல் என்று வழங்கப்பெறுகிறது.

மீண்டும் அவனுடைய ஆளுகைக்கு உண்டாக்கிக் கொடுத்த நகரம் மாயாபுரி. தாட்சாயணிக்குச் சதி என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதன் விவரங்கள் துளசி இராமாயணத்தும், சிவபுராணத்தும் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. நீலி, மறுபடியும் பரமனுடைய அருள்பெறத் தவமிருந்த இடம் நீலமலை.

அநுமன் சஞ்சீவிமலை கொண்டுவர இமயச்சாரலை அடைந்தான். வழியிலே காலநேமி என்னும்அரக்கன் மாயாசிரமம் ஏற்படுத்திக்கொண்டு தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தி வந்தான். அவனையும் அநுமன் அழித்துத் தவமுனிவர்களுக்கு அச்சம் போக்கினன் என்பது புராணம்.

பாரதயுத்தத்துக்குப்பிறகு தன்னுடைய மைந்தர்களை இழந்து பிள்ளைப் பாசத்தால் வருந்திய திருதராட்டிரனை விதுரர் இங்கு அழைத்துவந்தார். உடலுறவு மாயாசம்பந்தமுடைய தென்பதனை விளக்கினர். உண்மையை உணர்ந்தான் அரசன். தவம்செய்து உயிர்நீத்தான். அந்த யோகாக்கினியில் காந்தாரியும் சக கமனம் செய்தாள் என்பதும் புராணம்.

இங்கே பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை மேளா ஒன்று வருகிறது. அதில் பிரமகுண்டத்தில் நீராடுபவர்க்கு மிக்க பலன் சொல்லப் பட்டிருக்கிறது. மேஷத்திலே சூரியன், கும்பத்தில் வியாழன் இருக்கும் படியாக அமையும் அந்நாள். அந்த நாளிலே நீராடுவது மிக்க சிறப்பும் பெரும் புண்ணியமும் உடையது. அது சாதுக்களுடைய கூட்டம் மிகுந்த விழா என்றே சொல்லலாம். அதற்காக மலைச்சாரலிலே தவச்சாலை அமைத்துக் கொண்டுள்ள மகாமண்டலேசுவரர்களும், சாதுக்களும், பிரமசாரிகளும், நிர்வாணிகளும், நாகர்களும் பெருங்கூட்டமாக வருகிறார் கள். அன்று அங்கு நீராடுவதற்கு ஒரு வரையறை உண்டு. சாதுக்கள் அவர்களுக்குள்ள முறைவரிசைப்படி நீராடிய பிறகு மக்கள் நீராடுவார்கள். சாதுக்களுடைய தரிசனமும், அவர்கள் கால்பட்ட தீர்த்தத்தின் சிறப்பும் மிகமிக அதிகமாகக் கொள்வார்கள் பக்தர்கள். இந்த விழாவுக்கு இலட்சக்கணக்கிலே கூட்டம் கூடும்.

நிரஞ்சனதேவர் என்னும் முனிவருடைய பாதுகை நாகர்கள் வசிக்கு மிடத்திலே வைத்திருக்கிறார்கள். கங்கையின் கோயிலை இரவில் சிங்கம் ஒன்று தரிசிப்பதாக ஐதிகமும் இருக்கிறது.

கிருத யுகத்திலே புஷ்கரம், திரேதா யுகத்திலே நைமிசாரண்யம், துவாபரயுகத்திலே குருக்ஷேத்திரம், கலியுகத்திலே கங்காஸ்நானம்-இவற்றிற்குப் பலன் அதிகம்; கங்கையென்று சொன்னாலே பாவ விடுதலை உண்டு. இதற்கு வடக்கே உள்ள பூமி சொர்க்கபூமி என்றும் மற்ற பகுதிகள் மாயா சம்பந்தமுள்ள பூமி என்றும் சொல்லப்படுகின்றன. ஹரத்துவாரம் சொர்க்க வாசல் என்றும் ஒரு நம்பிக்கை இருக்கிறது. கங்கையிலே மூன்று இடங்களில் நீராடுதல் மிக விசேஷம். கங்கா துவாரமாகிய ஹரத்துவாரம் ஸ்ரீகாசி, கங்கா சங்கமம் இந்த மூன்று இடங்களே அவை. சங்கல்பம் சொல்பவர்கள் "அயோத்தி மதுரா மாயா காசி காஞ்சி அவந்திகாபுரி த்வாரம்," என்ற ஏழு இடங்களே மிகப் பெரிய புண்ணியதலங்கள் என்கிறார்கள்.

உத்தரகண்ட யாத்திரையில் முதற்படியாக உள்ளது ஹரத்துவாரம்; பெரிய ஊர். 10,000 மக்கள் வாழ்கிறார்கள். பல பெரிய சத்திரங்கள் உள்ளன. சாதுக்கள் தங்குவதற்கு ஆசிரமங்கள்; நிர்வாணிகள் தங்குவதற்கு நிர்வாண காடாக்கள்; இருப்புப்பாதை வசதி உண்டு. டேராடூன் போகும் பாதையிலே இது ஒரு சந்திப்பு. இங்கிருந்து ரிஷிகேசத்திற்கு இருப்புப்பாதை போகிறது. வசதியான பெருஞ்சாலைகளும் உண்டு சம தட்ப வெப்பநிலை உடைய ஊர். மலையாத்திரை போவதற்கு வேண்டிய சாதனங்களைப் பெரும்பாலும் யாத்திரிகர்கள் இங்கேதான் வாங்குகிறார்கள் வண்டிவாகன வசதிகளும் மிகுதியாகக்கிடைக்கும். பெரியகடைத்தெரு உண்டு. அங்கே எல்லாச்சாமான்களும் கிடைக்கும்.

## மதராஸி தர்மசாலா

தமிழர்கள் சென்று தங்குவதற்கு 'மதராஸி தர்மசாலா' என்று ஒன்றிருக்கிறது. அதைச் சென்னையிலுள்ள பெரும் வணிகர்களான வி. பெருமாள் செட்டி & சன்ஸ் நடத்திவருகிறார்கள். இலவசமாகத் தங்கலாம். சாது ஒருவரால் கட்டப்பட்ட கட்டிடம். கங்கைக்கரையிலே அமைந்தது. ஒருபுறம் வீதியும், பின்புறம் ஆறுமாக அமைந்திருக்கின்றது. கங்கைக்கு இறங்கும் வாசற்படி சொக்கலிங்கவாசல் என்று பெயர் பெற்றிருக்கிறது.

## ரிஷிகேசம்:

இதை மாயாகுண்டம் என்று சொல்வார்கள். ஹரத்துவாரத்திலிருந்து பதினைந்து மைலில் உள்ளது. சாதுக்கள் நிறைந்த ஊர். சத்திரங்களும் ஆசிரமங்களும் நிரம்ப உள்ளன. பாபா காலா கம்பளி வாலா சத்திரம் மிகப் பெரியது. ஹரத்துவாரிலிருந்து உந்தூர்தி வழியாகவும் புகைவண்டிவழியாக

வும் வரலாம். உந்தூர்தி மூலம் செல்பவர்கள் வழியிலே உள்ள சத்திய நாராயண கோவிலிலே சென்று வழிபட்டு வருவார்கள்.

## அன்புப்பணி:

வழியிலே மற்றொரு அன்புப் பணியையும் காணலாம். அதுதான் 'பசுலோக்'. அங்கேபசுக்களுக்கு மேய்ச்சல்துறைவிடப்பட்டிருக்கிறது. அது ஒரு சாது சங்கத்தாரால் பரிபாலிக்கப்படுகிறது. கறவை நின்று, வயதான மாடுகள் அடிமாட்டுக்கு எடுத்துச் செல்வதைத் தடுத்து இங்கே கொண்டு வந்து தன்னிச்சையாக மேயவிட்டுவிடுகிருர்கள். பொதுவாக இந்துக்கள் பசுக்களைத் தேவாம்சம் பொருந்திய விலங்காகக் கருதுகிருர்கள் அல்லவா?

## திருவேணிசங்கமம்:

ரிஷிகேசத்திலுள்ள சாதுக்கள் மகான்களுடைய சத் சங்கச் சேர்க்கையினுலே அவர்களைத் தரிசிப்பதாலேயே நமக்கு உள்ள மாயாபந்தங்கள் நம்மைவிட்டு விலகுவதாகப் பெரியோர் கொள்கிருர்கள். இங்கே இராமநதி, சரஸ்வதி குண்டம் என்ற சிற்ருறுகள் இரண்டும் கங்கையிலே கலக்கின்றன. அந்த இடத்திற்குத் திருவேணி சங்கமம் என்று பெயர். பெரிய ஊர். பெரிய கடைகளும் இருக்கின்றன. யாத்திரைக்கு வேண்டிய வசதிகளை இங்கேயும் செய்து கொள்ளலாம். உத்தரகண்டத்திலே பல ஊர்களிலும் இருக்கும் பாபா காலா கம்பளி வாலா அறக்கட்டளைகளின் தலைமைக் காரியாலயம் இருக்கிறது. சாதுக்களும் ஏழைகளும் எத்தனை பேர் வந்தாலும் இங்கே கோதுமைமாவு கொடுக்கப்படுகிறது. சூரிய குண்டம் என்னும் வெந்நீர் ஊற்றும் இங்கு உண்டு. பரதர்க்குக் கோயில் இருக்கிறது. பரதர் கோயிலில் எவ்வளவு விளக்குகள் போட்டாலும் ஓரளவு இருள் இருந்துகொண்டே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இங்கு சங்கரருடைய திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பாவநாசத்தில் தாமிரபரணி ஆற்றிலே உள்ள மீன்களுக்குப் பக்தர்கள் ஆகாராதிகள் கொடுத்து ஆராதிப்பதுபோல கங்கையிலே ஆராதனைகள் நடைபெறுகின்றன. அச்சமே தெரியாத நிலையில் மீன்கள் வந்து பெற்றுக்கொள்கின்றன. மிகமிகப் பெரிய அழகிய மீன்கள் அவை. அவற்றை அங்கே ஆரும் பிடிப்பதில்லை. ஊரைவிட்டு 6-பர்லாங் தொலைவிலே சிவானந்தரது ஆனந்தகுடீர் ஆசிரமம் கங்கைக்கரையிலே அமைந்திருக்கிறது. அதற்கு எதிர்க்கரையிலே 'கீதா மந்திரம்' என்னும் ஒரு பெரிய ஆலயம் இருக்கிறது. கீதை முழுதும் அங்கே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. கீதை விரிவுரை நடக்கிறது. அன்பர்கள் பலர் கூடிக் கேட்கிருர்கள். அதற்குச் சற்றுமேலே கங்கைக்கு இலட்சுமண ஜூலா

என்ற இடத்திலே தொங்குபாலம் அமைக்கப்பெற்றிருக்கிறது. இலட்சுமணன் இந்த இடத்தில் சரத்தால் பாலம் அமைத்ததாகச்சொல்லப்படுகிறது. பார்க்க மிகவும் அழகான இடம். அதற்குப்பக்கத்திலே சொர்க்காசிரமம் என்னும் சாதுக்கள் ஆசிரமம் இருக்கிறது. அங்கு இலட்சுமணருக்கு ஆலயமும் உண்டு. இலட்சுமண ஜூலாவுக்கு மேலே சத்ருக்கனருக்கு ஆலயம் இருக்கிறது. இலட்சுமண ஜூலாவிலே ஆதிசேஷன் தவம்செய்து பேறு பெற்றதாகச்சொல்லப்படுகிறது. ரிஷிகேசத்தில் கூலி அமைப்பு அலுவலகம் இருக்கிறது. மிகுதியாகக் கூலிகளும் கிடைப்பார்கள்.

## நரேந்திரநகர் :

ரிஷிகேச நகரின் எல்லையில் அமைந்தது. இங்கு ஆதிசங்கரர் நான்கு சீடர்களுடன் இருந்து சங்கரபாஷ்யம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கு ஒரு சிவாலயமும் உண்டு. சுவரிலே மகாமந்திரங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. இலட்சுமண ஜூலாவுக்கு மேலே வித்யாபதியினுடைய மடம் இருக்கிறது. அது மிகவும் மகிமை உள்ளதாகக் கருதப்படுகிறது. இப்பொழுது நாம் போவது உந்தூர்திப் பாதை. இதற்குமேலே ஒரு வழிப்பாட்டை.

## வியாசர் சட்டி :

வேதவியாசர் தங்கியிருந்து தவம் செய்த பூமி. இங்கே வியாச கங்கை என்னும் ஒரு நதியும் கங்கையில் கலக்கிறது. வியாசர் தன் மகனை இழந்து வருந்துகிறார். தகப்பனைவிடத் தாயாகிய வியாச பத்தினிக்குத் துக்கம் அதிகம். அதுவரை சுகப்பிரும்மம் கிளியாகவே இருந்துவருகிறார். அந்தக்காலத்திலே புத்திரசோகத்தால் வருந்தும் அந்த முனிபத்தினிக்கு முன்னால் வருகிறது அந்தக்கிளி. முனிபத்தினி கிளியைப் பார்த்ததும் அது அவர் பிள்ளையைப்போலக் காட்சிதருகிறது. முனிபத்தினியின் தரிசனம் கிடைத்தவுடனே கிளி உருவம் மாறி அந்த விசேஷத்தினால் பெரிய முனிவரானார் சுகதேவரும். பிரமபுத்திரரான வியாசர் இங்கு நான்கு வேதங்களையும் பகுத்துக்கொடுத்தார் என்று சொல்லப்படுகின்றது. வியாசருக்கு இங்கே ஒரு சிறு ஆலயமும் இருக்கிறது.

## தேவப்பிரயாகை :

இங்கு பாகிரதியும் அலகநந்தாவும் கூடுகின்றன. இதற்கு அப்பால் அந்தநதி கங்கையெனப் பேர்பெறுகிறது. இங்கே இரகுநாதருக்கு ஒரு கோயிலும், தேவிக்கு ஒரு கோயிலும், சிவபெருமானுக்கு ஒரு கோயிலும் உள்ளன. கங்கோத்ரி, யமுனோத்ரி போக விரும்புவோர் டெஹ்ரி

549



வழியாகச் செல்லச் சாலை வசதி இருக்கிறது. பத்ரி, கேதாரம் செல்வோருக்கு உதவிசெய்யப் பண்டாக்களும், கூலி அமைப்பு அலுவலகமும் இருப்பதைக் காணலாம். தேவர்கள் விரும்பி வாழும் இடம் தேவப் பிரயாகை. இங்கு பிண்டதர்ப்பணம் செய்வது மிக்க விசேஷம்.

இராமர் இராவணவதம் செய்து அதனுல் ஏற்பட்ட தோஷம் நீங்க தவமியற்றி மேலுலகம் சென்றதாகப் புராணம் கூறுகிறது. இதற்குமேலே ஏழுகல் தொலைவிலே தசரதன் தவம் செய்த தவச்சாலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறத் தவம் செய்த இடம் பக்கத்தில் இருக்கிறது. தவத்தின் உறுதி காணப் பெருமான் பெருமாட்டியுடன் வேட உருவத்திலே வருகிறுர். பன்றி ஒன்று அருச்சுனன் தவச்சாலையுள் புகுகின்றது. அருச்சுனனும் வில்வளைத்தான். வேட உருவத்திலே வந்தவரும் வில்வளைத்தார். இருவரும் அம்பெய்தார்கள். பன்றியும் இறந்து விழுந்தது. வேட்டையில் முதலில் எய்தவரைச் சேர்ந்தது அப்பன்றி. 'யார் முதலில் எய்தவர் ? பன்றியை யார் அடையவேண்டும்' என்று பூசல். தோற்றுப்போகும் நிலையில் அருச்சுனனுக்கு ஆத்திரம் தாளவில்லை. வில்லால் ஓங்கி வேடர் தலையிலே அடித்தான். வேடர் மறைந்தார்; பட்ட அடி உலகிலுள்ள எல்லா உயிர்களின் தலையிலும் பட்டது. அருச்சுனனுடைய தலையிலும் அந்த அடி பட்டது. எதிரே வந்தவரைக் காணவில்லை. வந்தவர் தான் விரும்பித் தவம் செய்யும் பரமன் என்பதை உணர்ந்தான்; வருந்தினுன்; தோத்திரித்தான். பரமனும் காட்சியளித்தார். பாசுபதமும் அளித்துச் சென்றுர். இந்த இடம் இங்கு இருக்கிறது.

## ஸ்ரீநகர் :

அலகநந்தாவினுடைய ஆற்றங்கரையிலே **ஸ்ரீ சக்கரம்** அமைக்கப் பெற்றிருக்கிறது. அதனுல் இந்நகருக்கு ஸ்ரீ நகர் என்று பெயர்வந்ததாகக் கூறப்படுகிறது. இங்கு நாரதமகாஸ்தலம், கமலேசுவர மகாதேவருடைய கோயில் முக்கியஸ்தலங்கள். தேவப்பிரயாகையிலிருந்து கீர்த்திநகர் வரும்வழியிலே ஜனகருடைய ஆசிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## நாரத மகாஸ்தலம் :

இதற்குப் பக்கத்தில் அத்திரி மகரிஷி ஆசிர்மம் அமைத்துத் தவம் செய்திருந்தார். புத்திரனில்லை. பிள்ளைப்பேறு வேண்டித் தவம் செய்யக் கயிலைக்குச் சென்றுர். ரிஷிபத்தினி அநசூயை தனியே விடப்பட்டிருந்தாள். நல்ல கற்புக்கரசி.

பார்வதி, இலக்குமி, சரஸ்வதி மூவரும் ஓரிடத்திற் கூடினார்கள். அவரவர் குலப்பெருமையையும், குடும்பப்பெருமையையும் பேசிக் கொண்டார்கள். தங்களுடைய கணவரிடம் தாங்கள் கொண்டுள்ள அன்பையும், காதலையும் பற்றிப் பேசிப் பெருமைகொண்டார்கள். அங்கே தோன்றினார் நாரதர் கையில் இரும்புக் கடலையுடன். ' உங்களுடைய பேச்சு மிகவும் நன்றாக இருந்தது; இந்த இரும்புக் கடலையை யாரொருவர் வேகவைத்து எனக்குணவளிக்கிறார்களோ அவர்களே உத்தமிகளாகக் கொள்ளக் கடவர் ' என்று சொன்னார். தேவிகள் முயன்றனர். முடிய வில்லை. அதனை எடுத்துக்கொண்டு பூவுலகுக்கு வருகிறார். அத்திரி முனிவருடைய ஆசிரமம் அடைகிறார். அநசூயை முனிவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச்செய்து உணவருந்திப் போகுமாறு வேண்டிக் கொள்கிறாள். இரும்புக் கடலையைக் கொடுத்து வேகவைத்துத் தனக்கு அளிக்குமாறு வேண்டுகிறார். தன் கணவனைப் பிரார்த்திக்கின்றாள். இரும்புக் கடலையும் வெந்துபோகிறது. உணவளிக்க முற்படுகிறாள்,

நாரதர் தன்னிடத்துள்ள குறும்புத்தனத்தால் உத்தமியைச் சோதிக்க எண்ணுகிறார். நிர்வாணமாகத் தனக்கு உணவு படைத்தால் ஏற்றுக் கொள்வேன் என்கிறார். அந்த நிலையிலே வேற்றுப் புருஷன் முன்பு சென்றால் தன்னுடைய பதிவிரதத்திற்குப் பங்கமேற்படுமே; அவ்வாறு செல்லாவிட்டால் முனிவர் உணவு கொள்ளமாட்டாரே என்று மனங் கலங்குகிறாள் அநசூயை. கணவனுடைய திருவடிகளைப் பூசித்து வேண்டுகிறாள். ஒரு யோசனை தோன்றுகிறது. பெண்ணுக்குப் பெண் நிர்வாண தோஷமில்லையே என்று கமண்டலத்தின் தண்ணீரை எடுத்து நாரதர் மேலே தெளிக்கிறாள். நாரதர் பெண்ணுரு அடைகிறார்.

அந்த அவமானம் பொறாமல் மும்மூர்த்திகளையும் நாடிச் செல்லுகிறார். ஆங்காங்கும் தன் உடலிலே ஒவ்வொரு மாறுதல் உண்டாவதைக் கண்டார். கர்ப்பவதியானார். அறுபது பிள்ளைகளைப் பெற்றார். அவை அறுபது வருடங்களாக இப்போது வழங்கப்படுகின்றன. ரிஷி பத்தினி யிடம் மீண்டும் சென்று பிழை பொறுத்தருள வேண்டுகிறார். தன் பழைய உருப்பெறுகிறார்.

மும்மூர்த்திகளும் தனக்கு உதவிசெய்ய மறுத்ததை நினைத்துப் பழி வாங்கத் தூண்டுகிறது அவர் உள்ளம். மூன்று தேவிகளையும் அடுத்து, இரும்புக் கடலையைத் தான் எடுத்துச்சென்ற வரலாறும், அநசூயை கைபட்டவுடன் அவை வெந்து பதமான வரலாறும் சொல்லி, கற்புக் கரசியாக அநசூயை விளங்குவதையும் எடுத்துக் கூறுகிறார். பெண் களுக்கு இயற்கையாயுள்ள பொறாமை உண்டாகிறது பத்தினி என்ற செருக்கை அடக்கக் கணவர்களை ஏவுகிறார்கள்.

மும்மூர்த்திகளும் அநசூயையின் பர்னசாலையின் முன்னிலையில் நிர்வாணக் கோலத்தோடு நின்று விருந்து பூசை விரும்புகிருர்கள். பார்த்தாள் பத்தினி. இது ஒரு குழந்தை விளையாட்டாகத் தோன்றுகிறது அவளுக்கு. குழந்தைகளாக்கி மூன்று தொட்டில்களில் இட்டு வளர்த்து வருகிருள். தவம் முடிந்தது; அத்திரி தன் ஆசிரமம் திரும்பிவருகிருர். ஆசிரமத்திலே மூன்று குழந்தைகள் தொட்டில்களில் தூங்குவதைக் கண்டார். குழந்தைகள் வந்த வரலாறு கேட்டுணர்ந்து அக்குழந்தைகளை எடுத்துவரப்பணித்தார் தம்முடைய மனைவியை. மூன்றும் ஒருசேர எடுத்தாள், ஒன்ருகச் சேர்ந்துவிட்டது. முனிவர் கையில் கொடுத்தாள், அந்த மும்மூர்த்திச் சேர்க்கை 'தத்தாத்ரேயர்' ஆயிற்று.

இவ்விதம் அக்குழந்தை ஆசிரமத்திலே வளர்கிறது. மூன்று தேவி களும் கணவரைப்பிரிந்து வருந்துகிருர்கள். தங்களுடைய பெருமையை விட்டு அநசூயையிடம் வந்து தங்களது கணவர்களைத் தங்களுக்குக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிருர்கள். கணவர் உத்தரவு பெற்றுப் பழைய உருவத்தில் மூவரையும் திரும்பத் தந்தாள் அந்தக் கற்பரசி. தவமிருந்தும் காணமுடியாத மும்மூர்த்தி தரிசனமும் அந்த முனிவர்க்குக் கிடைத்தது. அந்த மும்மூர்த்திச் சேர்க்கையே தத்தாத்ரேயர் என்ற விசேஷ மூர்த்தமாக இப்பொழுது வழிபாடு செய்யப்படுகிறது. நாரத மகாமுனியும் தன்னுடைய சிறு விளையாட்டால் நேர்ந்த அபசாரத்தை உணர்ந்தார். இந்தத் தலத்திலே சிவலிங்கம் நிறுவி, அபசாரம் போக்தத் தவம் புரிந்தார். நற்கதிபெற்ருர்.

## கமலேசுவரர் :

திருமாலால் நிறுவப்பெற்ற சிவதலம். திருமால் வழிபாட்டுக் காலத்திலே நாள்தோறும் ஆயிரத்தெட்டுத் தாமரை மலர்கள் கொணர்ந்து பெருமானை அர்ச்சிப்பது வழக்கம். ஒருநாள் அவருடைய பக்தியின் தரத்தைச் சோதிக்க விரும்பி ஒரு பூ மறையும்படிச் செய்தார் பெருமான். அர்ச்சனை முடிவிலே ஒரு பூ குறைவது திருமாலுக்குத் தெரிந்தது. நினைத்துப் பார்த்தார். தன்னுடைய கண் கமலக்கண்ணல்லவா ? அதைப் பிடுங்கி எடுத்துப் பெருமானுக்குச் சார்த்தி, அர்ச்சனையும் முடித்துக் கொண்டார். பெருமான் இச்செயலுக்கு மகிழ்ந்து பழையபடியும் கண்ணைக் கொடுத்துச் சக்கரப்படையும் கொடுத்தார். 'மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்' என்று இதனைப் பாடுகிறது திருவீழிமிழலைத் திருவிசைப்பா.

## உருத்திரப்பிரயாகை :

இங்கே பத்ரியில் உற்பத்தியாகி வருகின்ற அலகநந்தாவும் கேதா ரத்தில் உற்பத்தியாகி வருகின்ற மந்தாகினியும் ஒன்று கூடுகின்றன. அது போலக் கேதாரத்துக்கும் பத்ரிக்கும் தனித்தனி வழிகளும் பிரிகின்றன.

552

நதி சங்கமத்தில் உருத்திரேசுவரர் ஆலயம் இருக்கிறது. நாரதர்க்குக் கானவித்தையை உபதேசம் செய்த இடம். அகஸ்தியர் முதலிய பல முனிவர்களும் தவம்செய்து பரமசிவத்தைச் சூல பாணியாகத் தரிசனம் செய்து பேறுபெற்ற இடம். இங்கேயும் கூலியமைப்பு அலுவலகம் உண்டு. கண்டி, தண்டி, கோடா, இவை ஏற்பாடுசெய்து கொள்ளலாம். கூலியாட்களையும் சாமான்களைத் தூக்கிவர அமர்த்திக் கொள்ளலாம்.

## அகஸ்தியமுனிசட்டி :

அகஸ்தியமுனிவர் ஆசிரமமும் கோயிலும்இருக்கின்றன. அம்மலையின் உச்சியிலே அகஸ்தியர் வழிபட்ட கார்த்திகேயன் (முருகன்) இருக்கிறார். கயிலாயத்திலே சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் திருமணம். தேவர்கள் எல்லோரும் கயிலாயத்தில் திரண்டு விட்டார்கள். உலக மக்களெல்லாம் உத்தர கண்டத்துக்கு வந்து விட்டார்கள். சாய்ந்தது உலகம். வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. உலகைச் சரியாக இருத்த வேண்டினர் எல்லோரும். பரமன் ஒருவரே தென்றிசை சென்று உலகைச் சமமாக்க முடியும். அவரோடொத்த அகஸ்திய முனிவரை அனுப்புகிறார். அகஸ்திய முனிவரும் தென்றிசை நோக்கிப் புறப்படுகிறார். வழியிலே உயர்ந்தோங்கி நிற்கிறது விந்தியமலை. விந்தியமலை சூரிய சந்திரர் வானத்திலே செல்லும் பாதையில் தலைநிமிர்ந்து போகவர இடையூறாக நின்றது. தேவர்களெல்லாம் அகஸ்திய முனிவரை விந்தியத்தின் செருக்கு அடக்கவேண்டினர். அகஸ்திய முனிவரும் தம்முடைய கரத்தை மலை உச்சியில் வைத்தார். மலை உச்சியால் வணங்கிற்று. தாம் மீண்டும் கயிலாயம் வரும் வரைக்கும் குனிந்தே இருக்கவேண்டும் என்று ஆணையிட்டுப் பொதிகைமலை வந்தார் முனிவர். தென்றிசை தாழ்ந்தது. உலகம் சமமாயிற்று. அகஸ்தியர் தெற்கேயே தங்கினார். அவராணைப்படியே மலை இன்றும் அந்தநிலையிலேயே இருப்பதாகப் புராணம் சொல்லுகிறது.

## குப்தகாசி :

காசியில் மூன்று உண்டு. உத்தரகாசி: இது கங்கோத்திரியிலிருந்து கேதாரம் செல்லும் வழியில் அமைந்தது. குப்தகாசி: இது உருத்திரப் பிரயாகையிலிருந்து கேதாரம் செல்லும் வழியிலே நடுவில் அமைந்தது. ஸ்ரீ காசி: இதுதான் எல்லோராலும் பிரபலமாகப் போற்றப்படும் வாரணவாசி என்னும் பெருந்தலம். குப்த என்றால் இரகசியம். காசி என்றால் மகாபிரகாசம். அதாவது அதுவரை இரகசியமாக இருந்த ஒரு பெரும் பொருள் உலகத்திலே மகா பிரகாசமாக வெளியாயிற்று என்பது அதன் உட்பொருள். பாணாசுரன் தவம்செய்து சித்திபெற்ற இடம். தேவியைக் குறித்து அவன் மகள் உஷா தவம்செய்து உபதேசம்பெற்றது இங்கே.

அந்தத் தவச்சாலே இப்போது ஒரு பெரிய வித்யா பீடமாக விளங்கி வருகிறது. பாணினி, பதஞ்சலி, காத்தியாயனர் தவம் செய்த இடம் இந்தத் தலமே. வடமொழி இலக்கண வரம்பில்லாமல் பெருகி நின்றது. இலக்கணம் வேண்டும். தத்துவம் வேண்டும். பார்வதிதேவி மக்களுக்கு இதை அளிக்க விரும்பினுள். பெருமானிடம் வேண்டினுள். தத்துவ தரிசனம் கொள்ள வழிபட்டாள். உடுக்கை அடித்துக் கால் தூக்கி நின்று ஆடினுன் பரமனும். தரிசித்து ஆனந்தம் உற்ருள் பார்வதி. பரமன் தரிசனம் வேண்டித் தவம் இருந்தார் பாணினி. அவருக்கும் அந்தத் தரிசனம் கிடைத்தது. ஓம் என்ற நாதஒலியும் உண்டாயிற்று. டும் என்ற தமருக ஒலியே பாணினி சூத்திரமாயிற்று. பெரிய ஒரு ரகசியம் இவ்வளவு வெளிப்படையாகத் தெரியவந்தது. பரமனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அதனுல் மறைந்து விட்டார். பரமேசுவரன் இல்லாது தனியே விடப்பட்டிருப்பதால் தவம் கிடந்தாள் பார்வதி.

பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தன. பரமன் காட்சி தந்தார். 'தவம் ஏன்?' என்று வினவினர். 'பெருமானே தாமில்லாது நானிருந்து என்ன பயன்? என்னைத் தனியேவிட்டு அகல்வது நீதியா?' என்று முறையிட்டாள் பார்வதி. 'உன்னையே நீ பார்த்துக் கொள்ளவில்லை பார்' என்று உத்தர வாயிற்று. தன்னைப் பார்த்தாள். பிரியா விடையாகத் தான் இருப்பதை உணர்ந்தாள். பரமன் ஓர் பாதியும் தானேர் பாதியுமாக ஏகநாயகனைக் கண்டாள். இன்றும் அக்கோலத்திலேயே காட்சி யளிக்கிருள். பார்வதி அன்னபூரணி என்று அழைக்கப்படுகிருள். பஞ்சபாண்டவரும், பயிரவரும் வழிபட்டுப் பேறுபெற்ற பெருந்தலம். இங்கே இரகசியதானம், கோதானம் முதலியன செய்து வழிபடப் பலன் அதிகம்.

வசிஷ்டர் பிருமரிஷியானதும் இங்கேதான், ரிஷிகளுக்குத் தம்முடைய குப்த (இரகசிய) ரூபமான அர்த்த சந்திரன் தரித்த தம்முடைய வடிவத்தைக் காட்டி அருள்செய்தார் பரம்பொருள். இது ஒரு இரகசிய விளக்கம். பிரணவரூபம் அது. அதனுலே இத்தலம் குப்தகாசி என்று வழங்குவதாயிற்று. குண்டுசட்டியிலிருந்து மேற்புறத்திலே சோனிபூர் என்னும் இடத்தில் பாணுசுரன் தங்கித் தவம்செய்து தன்னை யாரும் வெல்லாதபடி ஒரு பெரும் வரம்பெற்ருன். இவ்வூர் ஆலயத்தில் உமாமகேசுவரராக விளங்கும் விசுவநாதர், சித்தமுனி, அர்த்தநாரி வடிவத்தில் பார்வதி, வராகவதார நிலையில் லக்ஷ்மிநாராயணர், இரண்டு தாரைகளாகக் கங்கை யமுனை காணப்பெறலாம். இத் தலபுராண உபதேசங்களிலே முக்கியமானவை இராஜாவுக்கு மிக்க சந்தோஷமும், வேசிக்கு வெட்கமும், பிராமணனுக்கு அதிருப்தியும் கூடாது என்பதாகும். குப்தகாசியிலிருந்து 3-வது மைலில் காளிமடம் என்ற இடத்திலே காளி கங்கையும் மந்தாகினியும் கலக்கின்றன. அதற்குப் பக்கத்தில் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி மூவர்ஆலயமும் இருக்கின்றன.

554

## நாலாச்சட்டி :

நளன் சட்டியினுடைய சிதைவு. நளனுக்குக் கோயில் இருக்கிறது. அம்பிகை லலிதா தேவியாக விளங்குகிருள். ஆலயம் இருக்கிறது. இங்கிருந்து ஊக்கிமடம் வழியாகப் பத்ரிக்கு நடைபாதை செல்கிறது; சமோலி 50 மைல்; பதரி 77 மைல்; துங்கநாத் 69 மைல்; கேதாரம் 23 மைல்; திரியுகி 14 மைல்.

## மெய்கண்டசட்டி :

இங்கே மகிஷாசுர சம்வர்த்தனி ஆலயம் இருக்கிறது. அம்பிகை பவானி எனப் பெயர் பெறுகிருள். மகிஷாசுரனைக் கொன்று இரண்டாகப் பிளந்து இரண்டுபுறமும் எறிந்ததாக ஐதிகம். அம்மலைக்கு மகிஷ கண்டம் என்று பெயர் வழங்குகிறது. சினம் தணிந்த நிலையிலே அம்பிகை ஊஞ்சலில் அமர்ந்து ஆடியதாகப் பெரிய ஊஞ்சல் ஒன்று அமைக்கப் பெற்றிருக்கிறது. பக்தர்கள் அதில் உட்கார்ந்து ஆடினல் அம்பிகையினுடைய அருள்பெற்றதாக எண்ணுகிருர்கள். மகாதேவர் ஆலயம் என்ற பழையகோவில் இருக்கிறது. சிற்பம் செறிந்த திருவுருவைக் காணலாம்.

## திரியுகநாராயண் :

கங்கோத்ரி, யமுனேத்ரி சென்று கேதாரம் வரும் பாதை இங்குவந்து சேருகிறது. திரியுகநாராயணர் கோயில் இருக்கிறது. இமவான் மகளான பார்வதியைச் சிவபெருமான் மணந்துகொண்டது இத்தலத்தில். திருமால், பிரமன் முதலியோரும் வந்திருந்து திருமணம் நடைபெற்றது. திருமால் அங்கேயே தங்கியிருக்கிருர் திரியுகநாராயணர் என்ற திருநாமத்தோடு. அங்கே மணவினைக்காக மூட்டப்பட்ட ஓமத்தீ இன்றும் எரிந்துகொண்டிருக்கிறது. அன்பர்கள் அதில் விறகுகளை வாங்கிப்போட்டுக் காணிக்கை செலுத்திக்கொள்கிருர்கள். மழைக் காலத்திலும் பனிக் காலத்திலும்கூட அந்தத் தீ அணைவதில்லை. எரிந்துகொண்டேயிருக்கிறது. இங்கே பிரமகுண்டம், விஷ்ணுகுண்டம், சரஸ்வதிகுண்டம், உருத்ரகுண்டம் என்ற நான்கு தீர்த்தங்கள் உள்ளன. ஒன்றில் ஸ்நானம், மற்ருென்றில் தானம், இன்னுென்றில் தர்ப்பணம், பிறிதொன்றில் பானம் மிகச்சிறந்தவை. சரஸ்வதி குண்டத்தில் தங்கமயமான பாம்புகளிரண்டு இருப்பதாகவும், அவற்ருல் இன்னல் இல்லை என்றும் கூறப்படுகிறது.

## நாராயண்கோட்டி ;

இங்கு லக்ஷ்மிநாராயணர் ஆலயமும், சத்தியநாராயணர் ஆலயமும், வீரபத்ரர் ஆலயமும் உள்ளன. லக்ஷ்மிநாராயணர் ஆலயம் மிகவும் பழைமையானது. மிகப்பழைமையான திருவுருவங்கள் அங்கே காணப் படுகின்றன. நவக்கிரகத்திருவுருவங்கள் தனித்தனி ஆலயத்தில் அமையப்

555



பெற்றிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவை இப்பொழுது இல்லை. சிதைந்தநிலையிலே காணப்படுகின்றன. அங்கே நாராயணதீர்த்தம் என்றொரு தீர்த்தமும் உண்டு. அதில் அலகநந்தா, சுரஸ்வதி என்ற இரண்டு தாரைகள் வந்து விழுகின்றன. மிகப் பழைமையான கல் வெட்டுக்கள் அங்கே கிடைத்திருக்கின்றன.

## பேட்டாசட்டி:

இங்குள்ள மலை ஜமதக்கினி மலை; ஜமதக்கினி ஆலயமும் ஆசிரமமும் மலையில் இருக்கின்றன.

## முண்டகாட்யா :

இங்கு வீடுகள் இல்லை. தலை இல்லாத (முண்டமான) ஒரு விநாயகர் திருவுருவம் அமைந்திருக்கிறது. பார்வதி கௌரிகுண்டத்திலே திருமஞ்சனமாடுவதற்குச் சென்றாள். ஊர் எல்லையிலே தன்னுடைய மூத்தமகன் விநாயகரைக் காவலுக்கு இருத்தினாள். யார் வந்தாலும் உள்ளே விடக்கூடாது என்பது உத்தரவு. சிவபெருமான் பார்வதியைக் காண வந்தார். கணபதி உள்ளே நுழைய விடவில்லை. பெருமானுக்குச் சினம் வந்தது. விநாயகரின் தலையைத் திரிசூலத்தால் சிதைத்தார். காவலை மீறி உட்சென்றார். கௌரி குண்டத்திலே பார்வதியைக் கண்டார். மகன் தலை வெட்டுண்ட செய்தியும் பார்வதிக்கு எட்டியது. மீண்டும் விநாயகரை எழுப்பித்தர வேண்டுமென்று வேண்டினாள். சினம் தணிந்தது. கருணை பிறந்தது. அந்த வனத்திலே வடக்கே தலைவைத்துப் படுத்திருப்பவற்றின் ஒரு தலையை எடுத்து வரப்பணித்தார். சென்று தேடினார்கள். யானை ஒன்று வடக்கே தலைவைத்துப் படுத்திருந்தது. அதன் தலையைக் கொய்து வந்தனர். அதனை விநாயகரின் தலையோடு சேர்த்து வைத்து உயிர்வரும்படி அருளினர் பெருமான். இது சோந்த நதியும் மந்தாகினியும் கலக்கும் இடத்திலிருந்து ஒருகல் தொலைவில் அமைந்திருக்கிறது. சோமத்துவாரம், சோமப் பிரயாகை என்று பெயர் பெறும். இந்தத் திருவுருவில் பார்வதி தன் பிள்ளையைக் கண்டாள். பரமன் அதைப் பிரணவ மாக்கினான். பிரணவம் மூல மந்திரம். இது அதனுடைய உட்கருத்து.

## கௌரிகுண்டம்:

கௌரி குண்டம் பாடல் பெற்ற சிவ தலங்களிலே அநேகதங்காவதம் எனப்படுவது. மூர்த்தி சுயம்பு. ஒரு பாம்பு படமெடுத்து மூடிக் கொண்டிருப்பது போலக்காட்சி. விநாயகரின் தலையைக் கொய்த திரி சூலம் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கெதிரே உமாமகேசுவர

மூர்த்தமும், அன்னபூரணியும் எழுந்தருளியுள்ள ஆலயம் இருக்கிறது. கௌரி கயா குண்டம் என்று ஒரு சிறு தீர்த்தமும் இருக்கிறது. அதில் தண்ணீர் ஒரு தாரையின் வழியாகப் பாய்ந்துகொண்டே இருக்கிறது. அந்தக் குண்டத்தில் (குளத்தில்) விழுந்ததும் மஞ்சள் கலந்த வண்ணத்தை அடைகிறது. அம்மை இங்கே மஞ்சள் குளித்ததாக ஐதிகம். அடுத்தது கௌரி குண்டம் என்னும் குளம். இங்கும் ஒரு தாரையின் வழியாக வெந் நீர் வந்து விழுந்து கொண்டிருக்கிறது. பவானி அம்பிகை திங்கள் தோறும் இந்தக் குண்டங்களில் நீராடு வதாக ஐதிகமும் கூட, இதற்கு 10, 12 அடிகிழக்கே பனி நீரோட்டமான மந்தாகினி ஆறு ஒடுகிறது. ஓடும் அப்பனி நீரிலே நீராடிக் கௌரி கயா குண்டத்திலே முழுகி, கௌரி குண்டத்திலே மீண்டும் நீராடுவது முறை. இது செல்லும் யாத்திரிகர் களுக்கு நாற்பத்தோரு மைல் நடந்து வந்த களைப்பை நீக்கிப் புத்துணர்ச்சி யையும் சுறுசுறுப்பையும் உண்டாக்குவதாக அமைத்திருக்கிறது அம்மையி னருள். அதற்கு மேலே இரண்டு கல் தொலைவில் பைரவர் கோயில் இருக்கிறது. பழைய வேஷ்டியை அங்கே விட்டு விடுதல் பீடாபரிகார மாகக் கொள்ளுகிறார்கள். கேதார யாத்திரை முடித்துத் திரும்புவோர் இங்கே வழிபட்டுத் திரும்புதல் ஏற்றத்தைக் கொடுக்கும் என்பர்.

## திருக்கேதாரம்

### சொற்பொருள் :

கேதாரம் என்ற சொல்லுக்குப் பிரமரந்திரத்தில் இருந்து வடியும் அமிர்ததாரை என்று பொருள். இது பெருமான் செஞ்சடையில் கங்கை யைத் தாங்கிப் பூவுலகத்திற்குக் கீழே விடும் செய்தியைக் குறிக்கும். மற்றொன்று அருச்சுனனால் பெருமான் தலையில் அடியுண்டு ஏற்பட்ட வடுவைக் குறிக்கும் என்றும் கொள்ளலாம். வடமொழியிலே கே - தலை; தாரா - மனைவி. பெருமான் கங்காதேவியைத் தாங்கிநிற்கும் நிலையைப் பிறிதொரு பொருள் குறிப்பது எனலாம்.

### தலையான பொருள்கள் :

தலையான பொருள்களாகக் கொள்ளப்பட்டவை நீரிலே சமுத்திரம், நதியில் பாகீரதி, மலையில் இமயம், யோகியில் யாக்ஞவல்கியர், பக்தரில் நாரதர், பெண்களில் பார்வதி, தேவரில் ஹரி, சிலையில் சாளக்ராமம், ஆரண்யத்தில் பத்ரி, தேனுவில் (பசு)காமதேனு, மனிதனில் பிராமணனும், அவனில் ஞானத்தைத் தருபவனும், பெண்களில் கற்பரசி, பிரிய வஸ்துவில் புத்திரன், பொருளில் தங்கம், முனியில் சுகதேவர், சர்வக்ஞத்தில் வேத வியாசர், தேசத்தில் கேதாரகண்டம், தேவதையில் இந்திரன், வசுக்களில்

குபேரன், இடத்தில் காசி, அப்சரசுகளில் ரம்பை, கந்தருவரில் தும்புருவர், தலங்களில் கேதாரம் என்கிறது தலபுராணம். பரமசிவன் பார்வதிக்கு இந்தத் தலப்பெருமையை எடுத்துரைத்தார். அதில் தாம் எப்படி தொன்மையானவரோ அதுபோலக் கேதாரமும் தொன்மையானது. உலக உற்பத்தியிலிருந்து ஓங்கி நிற்பது. அங்கு வசிப்போர் தம்மைப் போலச் சிவமேயாவர், என்று கூறியருளினர் பெருமான்.

## வேடனுக்குத் தரிசனம் :

ஒரு கொடியவன். ஈவு இரக்கம் என்பதே தெரியாதவன்; அவனுக்குக் கொலை குழந்தை விளையாட்டுப்போல. நினைப்பெலாம் கொலையே. அரசியல் சட்டப்படி, கொலைசெய்பவனுக்குக் கொலைதான், அது களை எடுப்பதுபோல என்பார் திருவள்ளுவர். அங்கே மன்னிப்புக்கு இடமில்லை; விசாரணை, சாட்சி - என்னுமிரண்டுமே அரசியல் தீர்ப்புக்கு அடிப்படை. ஆனல் சமயச்சட்டத்திலே மாபாதகனுக்கும் மன்னிப்புண்டு; இங்கேயும் சாட்சிவேண்டும்; விசாரணையும் வேண்டும். சாட்சி மனச்சாட்சி; விசாரணை ஆத்மவிசாரணை. மன்னிப்புக் கிடைத்துவிடுகிறது*. இங்கேயும் கடுந்தண்டனைகளும் உண்டு. அவற்றின் முடிவோ முடிவற்ற பேரின்பம். இது மறக்கருணை.

வேடன் ஒரு மாபாதகன். நாரதர் அவனுக்கு ஞானச்சாரியர். குருவைக்கண்டான். மனம் குழம்பிற்று; தெளிவுக்குவழிதேடிற்று. உய்தி தேடினன்; ஆசாரியார் மீண்டும் வந்தார். 'அன்பாக 'அப்பனே' நீ நல்லவன்; உன்னுளே பார்! உனக்கே தெரியும்' என்ருர். பார்த்தான்! அவனுக்கே தெரிந்தது; அவனுக்கும் உய்தி உண்டென்று தெளிந்தான்; தேவனுனன். சமய வழி அன்புவழி. இப்பொழுது கதையைப் படித்துப் பாருங்கள்;

மாது எனும் கிராமத்தில் வியாதன் என்ெருருவேடன்; காட்டிலுள்ள மான்களைவேட்டையாடி மாமிசத்தைத் தானுண்டு எஞ்சிய புலாலையும் தோலையும் விற்று விடுவது அவன்வேலை; ஒருநாள் கேதாரமலையின் அடிவாரக்காட்டில் வந்தான்; .பலசாதி மான்களைக் கண்டான், கொன்றுகுவித்தான்; கேதாரத்தையும் நண்ணினன்; நாரதமுனிவர் வந்தார். அவரை அவனுக்குத் தெரியவில்லை.

(தொடரும்)

*'வைத்தாரையும் அங்கு வாழவைப்பான்' —அருணகிரியார்.

'குற்றமே செயினும் குணமெனக்கருதும்
கொள்கை கண்டுன் குரைகழல் அடைந்தேன்' —சுந்தரர்

'குற்றம் நீ குணங்கள் நீ' —சம்பந்தர்

உ

குருபாதம்

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

| எண் | புத்தகம் | விலை ரூ. அ. பை. | தபாற்செலவு ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்) | 3—8—0 | 1—5—0 |
| 2. | இரண்டாந்திருமுறை (காலிகோ) | 5—0—0 | 1—8—0 |
| 3. | சமயபோதச்சொற்பொழிவுகள் | 1—0—0 | 0-13—0 |
| 4. | பரமாணுப் புராணம் | 1—4—0 | 0—9—0 |
| 5. | நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம் | 1—8—0 | 0—9—0 |
| 6. | திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ) | 13—8—0 | 2—4—0 |
| 7. | காமத்துப்பால் ,, | 6—0—0 | 1—8—0 |
| 8. | திருவாசகம் ,, | 2—0—0 | 0-14—0 |
| 9. | நால்வர் நான்மணிமாலை | 0—4—0 | 0—4—0 |

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

**கிடைக்குமிடங்கள் :—**

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.

2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயம்,
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

# அறிவிப்பு

## தருமபுரம் ஆதீனம் ஓரியண்டல் நடுநிலைப்பள்ளி

இங்கு இத்தகைய பள்ளி சென்ற மூன்று ஆண்டுகளாக நடைபெறுகிறது. இங்கு ஒரு ஆண்டுக்கு ஒரு படிவமாக முறையே மூன்று படிவங்களும் வைத்து நடத்தப் பெறுகிறது. அதே போன்று இவ்வாண்டும் நான்காம் படிவம் தொடங்கப் பெறுகிறது. இப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் S. S. L. C. தேர்விற்கு அனுப்பப்பெறுவார்கள். இதில் தேர்வுபெற்ற மாணவர்கள் மற்ற உயர்நிலைப்பள்ளிகளில் தேர்ச்சிபெற்றவர்களைப் போன்றே தொழில் முதலிய நலம் பெறத் தக்கவர்கள். கல்லூரிகளில் விஞ்ஞானம் கணக்கு, இவ்விரண்டையும் தவிர மற்றைய பகுதிகளில் சேர்த்துக்கொள்ளப் பெறுவார்கள். அன்றியும் டாக்டர், இஞ்சினீயர் தொழில் அல்லாமல் மற்ற எல்லாத் தொழிலுக்கும், தொழிற்படிப்பிற்கும் செல்லலாம். இங்கு மாணவர் சம்பளம் இல்லாமல் படித்துப் பயன் பெறுகிறார்கள். மற்ற உயர்நிலைப் பள்ளிகளைப்போல எல்லாப் பாடங்களும் கற்பிக்கபபடுவதோடு இங்குத் தமிழ்ப்பாடம் அதிகமாகக் கற்பிக்கப் பெறுவது குறிப்பிடத் தக்கது. இஃது எல்லோருக்கும் அரியதொரு வாய்ப்பு.

## ஜென்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவ தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேகஆராதனைகள் செய்வித்து தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல இம் மாதத்திலும் 31—5—55 செவ்வாய்க்கிழமை திருப்பெருவேளூர் ஸ்ரீ பிரியாதநாதசுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச் சார்பில் செய்விக்கப்பெற்று ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருப்பெருவேளூர்த் திருப்பதிக உரையை வழங்கி, அன்பர்களைக்கொண்டு, பண் முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப்பட்டது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—6—1955.